

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு
2025 - 2026

மானியக் கோரிக்கை எண். 42

திரு. இ. பெரியசாமி
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2025

பொருளடக்கம்

வ. எண்	பொருள்	பக்கம் எண்
1.	**முன்னுரை**	1
2.	**தமிழ்நாட்டில் ஊராட்சி நிர்வாக அமைப்புகள்**	9
2.1	ஊராட்சி அமைப்புகளின் வரலாறு	11
2.2	ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்	17
2.3	மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள்	28
2.4	கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள்	39
2.5	சொந்த வருவாய் ஆதாரங்கள்	52
2.6	புதிய முயற்சிகள்	55
2.7	சிறப்பு விருதுகள் மற்றும் சிறப்பாக செயல்படும் ஊராட்சி அமைப்புகளுக்கு அங்கீகாரம் வழங்குதல்	63
3	**மாநில அரசுத் திட்டங்கள்**	67
3.1	அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் –II	69
3.2	அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ஊரக நூலகங்கள் புதுப்பித்தல்	82

வ. எண்	பொருள்	பக்கம் எண்
3.3	5000 சிறுபாசன ஏரிகளை புதுப்பித்தல்	84
3.4	வீட்டு வசதி திட்டங்கள் 3.4.1 கலைஞரின் கனவு இல்லம்	89
	3.4.2 ஊரகப்பகுதிகளில் அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை சீரமைத்தல்	97
	3.4.3 புதிய சமத்துவபுரங்கள் அமைத்தல்	102
	3.4.4 புயல் மற்றும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 7 மாவட்டங்களில் பழுதடைந்த வீடுகளை சீரமைத்தல் மற்றும் மீளக்கட்டுதல் 2023	106
	3.4.5 இதர துறைகளுக்கான வீட்டு வசதி திட்டங்கள்	107
3.5	சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்	109
3.6	நமக்கு நாமே திட்டம் (ஊரகம்)	115
3.7	ஊரகச் சாலைகள்	122
	3.7.1 முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்	128
	3.7.2 நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (NABARD – RIDF)	132

வ. எண்	பொருள்	பக்கம் எண்
	3.7.3 நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளின் சாலை மேம்பாடு	134
	3.7.4 வெள்ள சீரமைப்பு பணிகள்	136
	3.7.5 உயர்மட்ட பாலங்கள் கட்டுமானத்திற்கான மாநில சிறப்பு நிதி உதவி	137
3.8	பள்ளி உட்கட்டமைப்பு – குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CFSIDS)	138
3.9	பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் (SIDS/SIUS)	142
3.10	ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதி (SCPAR)	146
3.11	பிற துறைகளுடன் ஒருங்கிணைந்த செயல்படுத்தப்படும் உட்கட்டமைப்பு திட்டங்கள்	149
4	**ஒன்றிய அரசு பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**	151
4.1	மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் (MGNREGS)	153
4.2	"அனைவருக்கும் வீடு "பிரதம மந்திரி ஊரக குடியிருப்பு திட்டம் (PMAY –G)	189

வ. எண்	பொருள்	பக்கம் எண்
4.3	பண்டைய பழங்குடியினருக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டம் (PM–JANMAN)	197
4.4	பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் (PMGSY)	203
4.5	ஜல் ஜீவன் மிஷன் (JJM)	214
4.6	நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (MPLADS)	223
4.7	சாண எரிவாயுத் திட்டம்	233
4.8	தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) (SBM – G)	234
5.	**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பணியமைப்பு**	251
5.1	அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு	253
5.2	பொறியியல் பணியமைப்பு	254
5.3	அரசிதழ் பதிவு பெறாத பணியமைப்பு	256
6.	**பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு**	259
6.1	திறன் மேம்பாடு	261
6.2	மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்	263
6.3	பயிற்சி முறைகள்	266
6.4	பயிற்சி செயல்திறன்	267

வ. எண்	பொருள்	பக்கம் எண்
6.5	கிராம பஞ்சாயத்து வளர்ச்சி திட்டம் (GPDP) வகுப்பதற்கு கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பற்ற அமைப்புகள் (NGOs) உடன் இணைந்து செயலாற்றுதல்	268
6.6	ஊராட்சி கற்றல் மையம்	269
6.7	இதர கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல்	271
6.8	மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி பயிற்சி நிறுவனங்கள்	273
6.9	ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் (DRCPs)	276
6.10	மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டம் (RRGSA)	277
7	**வரவு செலவுத் திட்டம் 2025-26**	281
8	**முடிவுரை**	285

1. முன்னுரை

"கிராமப்புற வளர்ச்சி என்பது தமிழ்நாட்டின் செழிப்பை உறுதி செய்யும் முக்கிய தூணாகும். அனைத்து பிரிவுகளுக்கும் சமநிலை மற்றும் சரியான வழிகாட்டுதலுடன் நாம் எதிர்காலத்தை கட்டியெழுப்புவோம்."

– மு.க.ஸ்டாலின்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழ்நாடு அரசு, உள்ளார்ந்த, சமமான மற்றும் நிலையான வளர்ச்சியை மாநிலம் முழுவதிலும் உருவாக்குவதில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. கிராமப்புற செழிப்பு என்பது மாநிலத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்துடன் நேரடித் தொடர்புடையது என்ற ஆழமான புரிதலை கருத்திற்கொண்டு தொலைநோக்கு பார்வையுடைய முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி கிராமப்புற மக்களின் சமூக–

பொருளாதார நிலையை நிரந்தரமாக மேம்படுத்தும் நோக்கில், அரசு பல்வேறு விரிவான ஊரக வளர்ச்சித் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை தொடர்ந்து பல ஆண்டுகளாக, ஏழை எளிய மக்களுக்கு தேவையான தரமான வீடுகள், சாலைகள், பாலங்கள், குடிநீர் விநியோகம், பொதுப்பயன்பாட்டு கட்டடங்கள் உட்பட கிராமப்புறங்களின் வலுவான உட்கட்டமைப்புகளையும் மற்றும் ஊரக மக்களுக்கான வேலை வாய்ப்பினையும் வழங்கி வருகின்றது.

கடந்த ஆண்டு மிகப்பெரும் ஒதுக்கீடான ரூ.3500 கோடி மதிப்பீட்டில் கிராமப்புற ஏழை மக்களுக்கு ஒரு இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு தொடங்கப்பட்ட "கலைஞரின் கனவு இல்லம்" திட்டம், விளிம்பு நிலை மக்களின் சொந்த வீடு என்ற கனவினை நிறைவேற்றும் வகையில் செயல்படுத்தப்படுகிறது. மேலும், ஒரு முன்முயற்சியாக,

பல ஆண்டுகளுக்கு முன்பு அரசால், ஊரகப் பகுதியில் கட்டப்பட்டு பழுதடைந்துள்ள வீடுகளை பழுதுபார்க்கும் மாநில அரசின் திட்டம், கடந்த காலங்களில் வீடுகளைப் பெற்று அதனை பராமரிக்க இயலாமல் உள்ள கிராமப்புற ஏழை எளிய குடும்பங்களுக்கு மிகவும் தேவையான ஒரு நல்வாய்ப்பை அளித்துள்ளது.

விளிம்பு நிலையில் உள்ள பழங்குடி குழுக்களுக்கான (PVTGs) வீடுகள் கட்டும் PM–JANMAN திட்டம், இலங்கை அகதிகளுக்கான வீடுகள் மற்றும் பிற பழங்குடியின மக்களுக்கான வீடுகள் கட்டும் திட்டம் ஆகியன முழுமையான நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தந்தை பெரியார் முன்வைத்த சமூக நீதி மற்றும் நல்லிணக்கம் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக சமத்துவபுரங்கள் கடந்த காலத்தில் உருவாக்கப்பட்டு, இப்போதும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவதன் மூலம் சமூகத்தின்

உள்ளார்ந்த நெறிமுறைகளை நிலைநிறுத்தி இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கோட்பாடான சமூக நீதியை நிலை நிறுத்த இந்த அரசு உறுதிபூண்டுள்ளது.

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பொதுமக்கள் தங்களின் தனிப்பட்ட பங்களிப்புடன் சமூகத்திற்கு பயனளிக்கும் சொத்துக்களை சமூகமே உருவாக்குவதை எப்போதுமே வரவேற்கத்தக்க முயற்சியாகவும், மக்களின் தேவைகளில் உள்ள இடைவெளிகளை நிறைவேற்ற பொது மக்களால் விரும்பப்படும் திட்டமாகவும் உள்ளது.

பிரதம மந்திரி கிராம சாலை திட்டத்தில் அனைத்து பருவ காலங்களுக்கேற்ற சாலை இணைப்பை 99% குடியிருப்புகளுக்கு ஏற்படுத்தி தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. அடுத்த கட்டமாக, முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மூலம் ஊரக சாலைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட

(MGNREGS) நிதியின் மூலம் அல்லது மாநில நிதிக்குழு மானியம் அல்லது ஒன்றிய நிதிக்குழு மானிய நிதியின் மூலம் தெருக்கள் மற்றும் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கிராமப்புற ஏழைகளின் வாழ்வாதார வாய்ப்புகளை மேலும் மேம்படுத்துவதற்காக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் (MGNREGS) மூலம் தனது குடிமக்களுக்கு 100 நாள் வேலைக்கான சட்டப்பூர்வ உரிமையை வழங்குவதில் தமிழ்நாடு அரசு தொடர் முயற்சி மேற்கொண்டு உறுதியுடன் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ளபடி, நீடித்த நிலையான இயற்கை வள மேலாண்மை மற்றும் தனிநபர் சொத்துக்களை அரசால் உருவாக்க முடிந்துள்ளது. இருப்பினும், இத்திட்டத்திற்கான ஒன்றிய அரசின் நிதி வரவு என்பது தொடர்ச்சியாக உள்ளதா என்பது கவனத்தில் கொள்ள வேண்டியதாகவே உள்ளது.

கழிவு மேலாண்மை கிராமப்புற பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு இணைப்பு அங்கமாக முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே பொதுமக்கள் பங்களிப்பின் மூலம் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகளில் கூடுதல் செயல்திறனைக் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் மக்களின் மனமாற்றத்தினை செய்து சுற்றுச் சூழலைப் பாதுகாக்க இந்த அரசு உறுதியுடன் செயல்படுகிறது.

2. தமிழ்நாட்டில் ஊராட்சி நிர்வாக அமைப்புகள்

2.1 ஊராட்சி அமைப்புகளின் வரலாறு

தமிழ்நாட்டின் உள்ளாட்சி அமைப்புகள் பழம்பெரும் வரலாறு உடையவை. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கல்வெட்டுக் குறிப்புகள் இதற்கு சான்றாகும். இக்கால கட்டங்களில், தங்கள் பகுதிகளின் சமூக மேம்பாட்டினை மேற்கொள்ளும் பொருட்டு சமுதாய குழுக்கள் இருந்தன. இவற்றை தமிழ்நாட்டின் அன்றைய கிராம குடியரசுகளாக கருதலாம். 10 மற்றும் 11–ஆம் நூற்றாண்டுகளில் சோழர்களின் ஆட்சிக்காலத்தில் இந்த பாரம்பரியம் அதன் சிகரத்தை எட்டியது. இதன்படி கிராமக் குழுக்கள் தங்களது வரையறுக்கப்பட்ட பகுதிகளில் வரி விதித்தல், சமூக வாழ்வை மேம்படுத்துதல் மற்றும் நீதி வழங்குவது போன்ற பொறுப்புகளை மேற்கொண்டிருந்தன. இந்த கிராமக் குழுக்கள், சோழ ஆட்சியாளர்களுடன் சிறந்த நிர்வாகத் தொடர்பு கொண்டவைகளாக இருந்தன. கிராமக் குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில்

"குடவோலை முறை" எனப்படும் இரகசிய வாக்களிப்பு முறை பின்பற்றப்பட்டது.

சோழர்கள் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு தமிழ்நாட்டின் நிர்வாகமுறை நிலம் சார்ந்த அதிகாரத்தை மையப்படுத்தும் நிலப்பிரபுத்துவ முறையாக உருமாறியது. இந்த நடைமுறை ஆங்கிலேய அரசு நவீன உள்ளாட்சி அமைப்புகளை அறிமுகப்படுத்தும் வரையில் நடைமுறையில் இருந்தது.

இந்தியா விடுதலை அடைந்த பிறகு, மக்களாட்சி அதிகார பரவலாக்கல் குறித்து முதன்முதலில் இயற்றப்பட்ட சட்டம், "மதராஸ் ஊராட்சி சட்டம் 1950" ஆகும். 1957 ஆம் ஆண்டு "உள்ளாட்சி நிர்வாக சீரமைப்பு" குறித்து வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையைத் தொடர்ந்து "மதராஸ் ஊராட்சி சட்டம் 1958" மற்றும் "மதராஸ் மாவட்ட வளர்ச்சி மன்ற சட்டம்

1958" ஆகியவை பின்வரும் சிறப்பியல்புகளுடன் இயற்றப்பட்டன:

அ)கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய ஈரடுக்கு ஊராட்சி முறை.

ஆ)வருவாய் வட்டங்களுக்கு இணையான சமுதாய வளர்ச்சி வட்டாரங்களை உருவாக்குதல்.

இ)கிராம ஊராட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவில் உறுப்பினர்களாக அங்கம் வகித்தல், இத்துடன் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவரை கிராம ஊராட்சித் தலைவர்கள் மறைமுகமாகத் தேர்ந்தெடுத்தல்.

ஈ)கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் பல்வேறு வளர்ச்சி மற்றும் நலப் பணிகளை மேற்கொள்ள ஒப்பளித்தல்.

உ)மாவட்ட போர்டுகளை கலைத்தல்.

ஊ)ஆலோசனை வழங்கும் அமைப்பாக மாவட்ட வளர்ச்சிக் குழுவைத் தோற்றுவித்தல்.

இந்த இரண்டடுக்கு முறை 1975 வரை சிறந்தமுறையில் செயல்படுத்தப்பட்டு, அவைகளுக்கு முறையாக தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதன்பிறகு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பதவிக்காலம் முறையே 01.02.1977 வரையும் பின்னர் 12.09.1979 வரையும் நீட்டிக்கப்பட்டது. அதன் பிறகு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடுத்த தேர்தல்கள் 1986–இல் நடைபெறும் வரை ஒரு வட்டாரத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் வட்டார வளர்ச்சி அலுவலரும், ஒரு கோட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கோட்ட வளர்ச்சி அலுவலரும் தனி அலுவலர்களாக இந்த அமைப்புகளை நிர்வகித்தனர். அதன் பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மார்ச், 1991 வரை பதவியிலிருந்தன.

மீண்டும் 1996–ஆம் ஆண்டு அக்டோபர் வரை தேர்தல் நடத்தப்படாததால், ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மேற்கண்ட தனி அலுவலர்களே நிர்வகித்தனர்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 73வது திருத்தம் 1992 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டதில் ஊராட்சி அமைப்புகளில் பல்வேறு அடிப்படை மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. இதன் தொடர்ச்சியாக 22.04.1994 அன்று தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 அமலுக்கு வந்தது. 73–வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 1992–ன் அடிப்படையில், ஊராட்சி அமைப்புகளில் கீழ்க்காணும் முக்கிய மாற்றங்களைக் கொண்டு வந்தது:–

அ) மூன்றடுக்கு ஊராட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட

ஊராட்சிகள் என்ற வகையில் உள்ளாட்சி அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன.

ஆ) ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை உள்ளாட்சித் தேர்தல் நடத்துதல்.

இ) ஒவ்வொரு ஊராட்சி அமைப்பிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகைக்கேற்ப உறுப்பினர் / தலைவர் பதவியிடங்களில் சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்யும் முறையை அறிமுகப்படுத்துதல்.

ஈ) உறுப்பினர் மற்றும் தலைவர் பதவியிடங்களில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்யும் முறையை அறிமுகப்படுத்துதல். அதன் பின்னர் 50% பெண்களுக்கு சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

உ) ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களை தொடர்ந்து நடத்துவதற்கு சுதந்திரமான அமைப்பாக மாநிலத் தேர்தல் ஆணையத்தை அமைத்தல்.

ஊ) மாநில அரசின் நிதி ஆதாரங்களை, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்க ஐந்தாண்டுகளுக்கொரு முறை மாநில நிதி ஆணையத்தை அமைத்தல்.

2.2 ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்

இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 243–K பிரிவின்படி, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் 1994 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, மாநில தேர்தல் ஆணையம் சுதந்திரமான மற்றும் தன்னாட்சி பெற்ற அரசியலமைப்பு ஆணையமாக செயல்பட்டு நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தும் பொறுப்பு வகிக்கிறது.

73வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் 1992 மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994–ன் படி தமிழ்நாட்டில் நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள் கீழ்குறிப்பிட்ட ஆண்டுகளில் நடத்தப்பட்டது.

1996	முதலாவது சாதாரண உள்ளாட்சித் தேர்தல்கள்
2001	இரண்டாவது சாதாரண உள்ளாட்சித் தேர்தல்கள்
2006	மூன்றாவது சாதாரண உள்ளாட்சித் தேர்தல்கள்
2011	நான்காவது சாதாரண உள்ளாட்சித் தேர்தல்கள்
2019	ஐந்தாவது சாதாரண உள்ளாட்சித் தேர்தல்கள் (27 மாவட்டங்கள்)
2021	ஐந்தாவது சாதாரண உள்ளாட்சித் தேர்தல்கள் (9 மாவட்டங்கள்)

உள்ளாட்சி அமைப்புகளுக்கான ஐந்தாவது சாதாரண தேர்தல்கள் 2019 ஆம் ஆண்டில் 27 மாவட்டங்களில் நடத்தப்பட்டது. அதே நேரத்தில் மறுசீரமைக்கப்பட்ட 9 மாவட்டங்களுக்கான தேர்தல்கள் 2021 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன.

2019–ஆம் ஆண்டில் நடைபெற்ற ஊரக உள்ளாட்சி தேர்தலுக்கு பின்னர் நாகப்பட்டினம்

மாவட்டத்தை இரண்டாக பிரித்து நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை என மாவட்டங்கள் பிரிக்கப்பட்டது. எனவே மயிலாடுதுறை மாவட்டத்திற்கான ஊராட்சி உறுப்பினர்கள் அடுத்த ஊரக உள்ளாட்சித் தேர்தலில் தேர்வு செய்யப்படுவர்.

புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மயிலாடுதுறை உள்ளிட்ட 28 மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பதவிக்காலம் 2025 ஜனவரி 5 ஆம் தேதியுடன் முடிவடைந்தது. மாநிலம் முழுவதும் உள்ள நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து விரைவில் மாநிலத் தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வையின் கீழ் பல்வேறு நிலைகளில் வார்டுகள் மறுவரையறை செய்யப்படும். எனவே, இடைக்கால நடவடிக்கையாக, ஊராட்சிகளின் நிர்வாகத்திற்கு தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2.2.1 ஊரக உள்ளாட்சி அமைப்புகளை இரண்டாகப் பிரிப்பது, இணைப்பது மற்றும் மறுசீரமைப்பதற்கான விதிகள்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மறுசீரமைப்பு என்பது ஊரக உள்ளாட்சி நிர்வாகத்தின் நிர்வாக எல்லைகள், செயல்பாடுகள், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை மறுசீரமைத்தல் அல்லது மறுவரையறை செய்யும் செயல்முறையைக் குறிக்கிறது.

மறுசீரமைப்பு, நிர்வாக செயல்திறனை மேம்படுத்துவதையும், மேம்பட்ட சேவை வழங்கலையும், கிராமப்புற மக்களின் சிறந்த பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ல், பிரிவு–4, கிராம ஊராட்சி உருவாக்கம் பற்றி விளக்குகிறது. இந்த அறிவிப்பை மாவட்ட அளவில் உள்ள ஊராட்சிகளின் ஆய்வாளர் / மாவட்ட ஆட்சியர்

அறிவிப்பார்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 4 பின்வருமாறு : –

"(1) ஆய்வாளர்

(அ) அறிவிக்கையின் மூலம் ஒரு வருவாய் கிராமத்தை அல்லது கிராமங்களை, அல்லது ஒரு வருவாய் கிராமத்தின் ஒரு பகுதியை அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் கிராமங்களை ஒட்டியுள்ள பகுதிகள் ஒவ்வொன்றையும், இந்த சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஊராட்சிக் கிராமம் என்று வகைப்படுத்தி அறிவித்தல் வேண்டும், மற்றும்

(ஆ) அறிவிக்கையின் வாயிலாக, அந்த ஊராட்சிக் கிராமம் என்ற பெயருடன் விளங்குதல் வேண்டும் என்றும் குறிப்பிட வேண்டும்."

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்–1994, பிரிவு 15–ன் கீழ், ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கம் குறித்து பின்வருமாறு விளக்குகிறது:–

"அரசு,

(அ) தேசிய விரிவாக்க சேவைத் திட்டம் மற்றும் சமுதாய வளர்ச்சி நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அமைக்கப்பட்ட வளர்ச்சி வட்டாரம் எதையும் ஒரு ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் என்று அழைக்கலாம் மற்றும்

(ஆ) ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிற்கும் ஒரு ஊராட்சி ஒன்றியத்தை அமைப்பதற்கான தனது எண்ணத்தை அறிவிக்கை வாயிலாக அவ்வப்போது வெளியிடலாம்."

ஊரக உள்ளாட்சி அமைப்புகளைப் பிரிப்பது, இணைப்பது மற்றும் மறுசீரமைப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை எண். 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (C–1) துறை, நாள் 16.03.2007–ல் கீழ்க்கண்டவாறு வெளியிடப்பட்டுள்ளது.

1. கிராம ஊராட்சிகளுக்கான மறுசீரமைப்பு அறிவிக்கை மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்படும்.

மேலும் ஊராட்சி ஒன்றியங்களுக்கான மறுசீரமைப்பு அறிவிக்கை அரசால் வெளியிடப்படும்.

2. அதன்படி, சம்பந்தப்பட்ட பொது அறிவிப்பை வெளியிட்ட பின்னர், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து பிரதிநிதிகளுடன் மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படும்.

3. இதைத் தொடர்ந்து, பெறப்பட்ட பரிந்துரைகளை மறுஆய்வு செய்ய மாவட்ட ஆட்சியரால் இரண்டாவது அமர்வு கூட்டப்படும்.

4. இரண்டு அமர்வுகளில் பெறப்பட்ட பரிந்துரைகளை பரிசீலித்த பின்னர் மாவட்ட ஆட்சியர் வரைவுக்கருத்தை துறைத் தலைவருக்கு அனுப்பவேண்டும். இந்த விவரங்கள் உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய இடங்களில் பொதுமக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

5. அதன்பிறகு, தேவைப்பட்டால், துறையின் தலைவர் மூன்றாவது அமர்வை கூட்டலாம். அத்தகைய கூட்டம் தேவையில்லை என்றால், இறுதி கருத்து, ஒப்புதலுக்காக அரசுக்கு அனுப்பப்படும். இந்த நிர்வாக நடைமுறையைத் தொடர்ந்து, ஊரக உள்ளாட்சி அமைப்புகளை இணைத்தல், இரண்டாகப் பிரிப்பது மற்றும் மறுசீரமைத்தல் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

2.2.2 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளை இரண்டாகப் பிரித்தல், இணைத்தல் மற்றும் மறுசீரமைத்தல்

2024 ஆம் ஆண்டில், திருவண்ணாமலை, நாமக்கல், புதுக்கோட்டை மற்றும் காரைக்குடி ஆகிய 4 மாநகராட்சிகளுடன் 43 கிராம ஊராட்சிகளை முழுமையாகவும், 3 கிராம ஊராட்சிகள் பகுதியாகவும் இணைப்பதற்கான உத்தரவுகளை அரசு வெளியிட்டுள்ளது.

எனவே, 43 கிராம ஊராட்சிகள் முழுமையாகவும், 3 கிராம ஊராட்சிகள் பகுதியாகவும் இணைக்கப்பட்டு நான்கு மாநகராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தற்போது, தமிழ்நாட்டின் 37 கிராமப்புற மாவட்டங்களில், 388 ஊராட்சி ஒன்றியங்களும், 79,026 குக்கிராமங்களும் கொண்ட 12,482 கிராம ஊராட்சிகளும் உள்ளன. இந்த அமைப்பு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி, நிர்வாகரீதியாக நிறுவப்பட்டு முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுடன் கிராம ஊராட்சிகளை இணைப்பதன் மூலம் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை மேம்படுத்தவும் அல்லது பரப்பளவை விரிவுபடுத்தவும், கிராம ஊராட்சிகளை பேரூராட்சிகளாக மேம்படுத்தவும் 2024 டிசம்பரில் அரசு அரசாணைகளை பிறப்பித்துள்ளது.

அதன்படி, கிராம ஊராட்சிகளை அருகிலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைக்கும் நோக்கம் குறித்து 31.12.2024 அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. 83 கிராம ஊராட்சிகள் பகுதியாகவும் 295 கிராம ஊராட்சிகள் முழுமையாகவும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைக்க இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 83 கிராம ஊராட்சிகளின் மீதமுள்ள பகுதிகள் மறுசீரமைக்கப்பட்டு தனி கிராம ஊராட்சிகளாக தொடர்ந்து செயல்படும். உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அரசு இறுதி முடிவு மேற்கொள்ளும்.

தமிழ்நாட்டில் உள்ள 388 ஊராட்சி ஒன்றியங்களில், ஒரு ஒன்றியத்தில் குறைந்தபட்ச கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை ஐந்து (5) ஆகவும், அதிகபட்சம் எழுபத்து மூன்று (73) ஆகவும் உள்ளது. ஒரு சில ஊராட்சி ஒன்றியங்கள் அதிக

எண்ணிக்கையிலான கிராம ஊராட்சிகளைக் கொண்டுள்ளன. மேலும் அதிக எண்ணிக்கையிலான குடியிருப்புகள், மக்கள் தொகை மற்றும் பரப்பளவு காரணமாக, திட்டங்களை செயல்படுத்துவதிலும், கிராம ஊராட்சிகளை நிர்வகிப்பதிலும், மக்களின் அடிப்படைத் தேவைகளை சரியான நேரத்தில் பூர்த்தி செய்வதிலும் சிரமங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. எனவே, இந்த ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரிக்கவும், இணைக்கவும், மறுசீரமைக்கவும் வேண்டிய அவசியம் உள்ளது.

சில கிராம ஊராட்சிகளை இணைக்கவும் அல்லது தற்போதுள்ள கிராம ஊராட்சிகளை மறுசீரமைத்து புதிய கிராம ஊராட்சிகளை அமைக்கவும் கோரிக்கைகள் பெறப்பட்டன. இதன் மூலம் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் அரசாங்கத் திட்டங்களை மக்களுக்கு எளிதில் கொண்டு செல்ல வசதியாக அமையும். உரிய செயல்முறைகளைப் பின்பற்றி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளை பிரித்தல், இணைத்தல்

மற்றும் மறுசீரமைத்தல் போன்றவை 2025–26 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

2.3 மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள்

2.3.1 கிராம ஊராட்சிகள்

தமிழ்நாட்டில் உள்ள 37 ஊரக மாவட்டங்களில் 79,026 குக்கிராமங்களை உள்ளடக்கிய 12,482 கிராம ஊராட்சிகள் உள்ளன. கிராம ஊராட்சியின் தலைவர், கிராம ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார். ஒவ்வொரு கிராம ஊராட்சியும் 5 ஆண்டு காலம் செயல்பாட்டில் இருக்கும்.

2.3.1.1 கிராம சபை

தமிழ்நாட்டின் வரலாற்றுப் பதிவுகளில் சோழர் காலத்தில் "ஊர்" மற்றும் "சபை" என்கிற அமைப்புகள் இருந்தன. இச்சபைகள் அவ்வூராட்சியின் நிர்வாகத்தை மேற்கொள்வதற்காகவும், சாமானிய மக்களும் கொள்கை முடிவுகளில் பங்கேற்பதை உறுதி செய்யவும் தோற்றுவிக்கப்பட்டன.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 243–A பிரிவின் கீழ் கிராம சபை குறித்து விவரிக்கப்படுகிறது. கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய அமைப்பான கிராமசபைக்கு குறிப்பிட்ட அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

கிராம சபையானது வருடத்திற்கு நான்கு முறை – ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 ஆகிய நாட்களில் நடத்தப்பட ஏற்கனவே ஆணையிடப்பட்டது. கூடுதலாக உலக தண்ணீர் தினமான மார்ச் 22 மற்றும் உள்ளாட்சிகள் தினமான நவம்பர் முதல் தேதியின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தும் பொருட்டு இவ்விரு நாட்களையும் சேர்த்து தற்போது கிராமசபை வருடத்திற்கு 6 முறை நடைபெறுகிறது.

மேற்படி கிராம சபை உரிய முறையில் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் "நம்ம கிராம சபை" என்ற கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச்செயலியின் மூலம் கிராம சபையின் வருகை பதிவு, தீர்மானம்

நிறைவேற்றல் விவரங்கள், மாவட்ட அலுவலர்கள் வருகை மற்றும் நிகழ்ச்சியின் புகைப்பட விவரம் ஆகியவை பதிவு செய்யப்படுகிறது.

2.3.1.2 கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு–240–ன் கீழ் ஒவ்வொரு கிராம ஊராட்சியும் ஒவ்வொரு ஆண்டும் கிராம ஊராட்சிக்கான வளர்ச்சித் திட்டத்தினைத் தயார் செய்திட வேண்டும். எதிர்வரும் நிதியாண்டிற்கான கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை அரசின் வழிகாட்டுதல்படி தயாரிப்பதற்காக அக்டோபர் 2 முதல் டிசம்பர் 31 வரை மக்கள் பங்கேற்பின் அடிப்படையிலும் இதர துறைகளின் ஒருங்கிணைப்புடன் கிராம வளர்ச்சிக்காக திட்டமிடல் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டமானது ஒன்பது குறிக்கோள்களைக் கொண்டு உள்ளூர் மயமாக்கப்பட்ட நீடித்த மற்றும் நிலைத்த வளர்ச்சி இலக்குகள் சார்ந்த

கருப்பொருள்கள் அடிப்படையில் தயாரிக்கப்படும். மேலும், அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து 2030 ஆம் ஆண்டிற்குள் கிராம ஊராட்சிகளை வளர்ச்சி அடைந்த கிராம ஊராட்சிகளாக மாற்றிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை இறுதி செய்வதற்காக அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சிறப்பு கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படும். மேற்படி கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் குறித்த விவரங்கள் www.gpdp.nic.in என்ற ஒன்றிய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

எதிர்வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும் அனைத்து திட்டப்பணிகளும் ஒப்புதல் அளிக்கப்பட்ட கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையிலேயே இருக்கவேண்டும்.

2.3.1.3 நிலையான வளர்ச்சி இலக்குகளை உள்ளூர்மயமாக்குதல் (LSDGs)

ஐக்கிய நாடுகள் சபையின் 17 நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs) ஊராட்சி அமைப்புகள் (PRIs) மூலம் இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்டு, "நிலையான வளர்ச்சி இலக்குகளை உள்ளூர்மயமாக்குதல்" (LSDGs) என 9 கருப்பொருள்களாக மறுவகைப்படுத்தப்பட்டுள்ளன அவை,

(i) வறுமையில்லாத மற்றும் மேம்படுத்தப்பட்ட வாழ்வாதாரம் கொண்ட ஊராட்சி

(ii) நலவாழ்வு ஊராட்சி

(iii) குழந்தைகள் நேய ஊராட்சி

(iv) நீரில் தன்னிறைவு அடைந்த ஊராட்சி

(v) தூய்மையான மற்றும் பசுமையான ஊராட்சி

(vi) உட்கட்டமைப்பில் தன்னிறைவு அடைந்த ஊராட்சி

(vii) சமூக நீதி மற்றும் சமூகப் பாதுகாப்பு உள்ள ஊராட்சி

(viii) நல் ஆளுமையுள்ள ஊராட்சி

(ix) மகளிர் நேய ஊராட்சி

ஊராட்சி அமைப்புகள் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்த உள்ளூர்மயமாக்கப்பட்ட 9 கருப்பொருள்களில் மிகவும் பொருத்தமான இலக்குகளை உள்ளடக்கிய கருப்பொருள் அணுகுமுறை மேற்கொள்ளபட்டது. இதனால் ஊராட்சி அமைப்புகள் தேசிய இலக்குகளுடன் உள்ளூர் இலக்குகளை ஒருங்கிணைத்து நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளைச் செயல்படுத்த முடியும்.

2.3.2 ஊராட்சி ஒன்றியங்கள்

தமிழ்நாட்டில் இடைநிலை மட்டத்தில் 388 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களும் குறைந்தபட்சம் 5,000 மக்கள்தொகையை கொண்ட 6,471 ஊராட்சி ஒன்றிய வார்டுகள் உள்ளன. இந்த வார்டுகளுக்கான உறுப்பினர்கள் அந்தந்த வார்டுகளில் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஊராட்சி ஒன்றியங்களின் வார்டு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

2.3.2.1 நிதி

1. ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு வரி விதிக்க அதிகாரம் இல்லை.

2. கட்டணங்கள், வாடகை, குத்தகை, அபராதம் மற்றும் தண்டதீர்வை ஆகியவை ஊராட்சி ஒன்றியங்களுகான வருவாயாகும்.

3. மாநில நிதிக்குழு ஆணையத்தின் பரிந்துரைப்படி, மக்கள்தொகை அடிப்படையிலான நிதி மற்றும் குறைந்தபட்ச மானிய நிதிகள் மூலம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு நிதி வழங்கப்படுகிறது.

4. ஆறாவது மாநில நிதிக்குழு ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டுக்கு குறைந்தபட்சம் ரூ.40 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது.

5. பதினைந்தாவது ஒன்றிய நிதிக்குழு ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், மொத்த ஒதுக்கீட்டில் 15% ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படுகிறது.

2.3.2.2 ஊராட்சி ஒன்றியங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

தமிழ்நாட்டில் உள்ள 388 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நிரந்தர அலுவலகக் கட்டடங்கள் உள்ளன. நீண்ட காலமாகப் பயன்படுத்தப்பட்டு

பழுதடைந்துள்ள பழைய கட்டடங்களை மாற்றுவதற்காக ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வரி வருவாய் நிதியுடன் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இதுவரை, 224 ஊராட்சி ஒன்றியங்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் ரூ.453.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.

2.3.3 மாவட்ட ஊராட்சி

தமிழ்நாட்டில், 36 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 24 இன் படி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட ஊராட்சி அமைக்கப்பட்டுள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டமான மயிலாடுதுறைக்கான மாவட்ட ஊராட்சி, அடுத்த உள்ளாட்சித் தேர்தலுக்குப் பிறகு உருவாக்கப்படும்.

மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள், அதே நேரத்தில் மாவட்ட ஊராட்சித் தலைவர், வார்டு உறுப்பினர்களால்

மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். தமிழ்நாட்டில் மொத்தம் 655 மாவட்ட ஊராட்சி வார்டுகள் உள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைச் சேர்ந்த உதவி இயக்குநர் நிலையில் உள்ள ஒரு அதிகாரி மாவட்ட ஊராட்சியின் செயலாளராக நியமிக்கப்படுகிறார்.

2.3.3.1 நிதி

மாவட்ட ஊராட்சிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் இல்லை. மாநில நிதி ஆணையத்தின் மூலம் விடுவிக்கப்படும் மானியம் மட்டுமே முதன்மை வருமான ஆதாரமாகும். சில குறிப்பிட்ட இடங்களில், மாவட்ட ஊராட்சிக்குச் சொந்தமான நிலம் மற்றும் கட்டடங்களிலிருந்து கிடைக்கும் வருமானமும் முக்கியமானது. மாவட்ட ஊராட்சிக்கு 6 % ஒதுக்கீடு செய்ய மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ளது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது. 15வது ஒன்றிய நிதி ஆணையத்தினால் விடுவிக்கப்படும் மொத்த நிதி

ஒதுக்கீட்டில் 5% மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்படுகிறது.

2.3.3.2 ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்கள்

தமிழ்நாட்டில், கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் மூன்று அடுக்குகளில், கிராம ஊராட்சிகள் மட்டுமே வரி விதிக்கவும், வசூலிக்கவும் அதிகாரம் பெற்ற ஒரே அமைப்பாகும். கிராம ஊராட்சிகள் பின்வரும் ஆதாரங்களில் இருந்து வருவாயைப் பெறுகின்றன:

i) மானியங்கள்

ii) வரி வருவாய்

iii) வரி அல்லாத வருவாய்

2.4 கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள்

2.4.1 மாநில நிதி ஆணைய மானியம்

இந்திய அரசியலமைப்பின் 73வது சட்ட திருத்தம் 1992 மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 198 ஆகியவற்றின் படி, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாநில நிதி ஆணையத்தை தொடர்ந்து அமைக்கும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். மாநில நிதி ஆணையத்தின் முக்கிய செயல்பாடுகள்:

i. மாநிலத்திற்கும், ஊராட்சி அமைப்புகளுக்கும் இடையில் அரசாங்கத்தால் விதிக்கப்படும் வரிகள், சுங்கச்சாவடிகள் வருவாய் மற்றும் கட்டணங்களின் நிகர வருவாயில் மாநில அரசுக்கும் உள்ளாட்சி அமைப்பிற்கும் பகிர்ந்தளித்தல்.

ii. ஊராட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்படக் கூடிய வரிகள், கட்டணங்கள் மற்றும் சுங்கச்சாவடி கட்டணங்களை தீர்மானித்தல்.

iii. மாநிலத்தின் ஒருங்கிணைந்த நிதியிலிருந்து ஊராட்சி அமைப்புகளுக்கான மானியங்களை ஒதுக்கீடு செய்தல்.

iv. ஊராட்சிகளின் நிதி நிலையை மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.

தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி பகிர்ந்தளிப்பதற்காக, 1994 ஆம் ஆண்டு முதல் இன்று வரை ஆறு மாநில நிதி ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2.4.1.1 ஆறாவது மாநில நிதி ஆணையம் (2022–23 – 2027–28)

கிராமப்புற மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை மறுஆய்வு செய்வதற்காக, 06.03.2020 அன்று தமிழ்நாடு அரசு ஆறாவது மாநில நிதி ஆணையத்தை அமைத்தது. ஆணையத்தின் பரிந்துரைகள் 13.01.2023 அன்று தமிழ்நாடு மாநில சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. ஆணையத்தின் பெரும்பாலான பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

2.4.1.2 ஆறாவது மாநில நிதி ஆணையத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிந்துரைகள்

1. ஆறாவது மாநில நிதி ஆணையத்தின் காலம் 2022–23 முதல் 2027–28 வரை ஆகும்.

2. ஆறாவது மாநில நிதி ஆணையம், மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 10% உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்க பரிந்துரைத்தது.

3. கிராமப்புற மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு இடையிலான நிதிப் பகிர்வு விகிதம் 51:49 ஆக இருக்கும்.

4. மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு இடையே முறையே 6:39:55 என்ற விகிதத்தில் பகிர்மான நிதி மானியத்தைப் பகிர்ந்து கொள்ளவும் அரசு உத்தரவிட்டுள்ளது.

5. மூன்று அடுக்கு ஊராட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் மானியமானது ஆறாவது மாநில நிதி ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படும்.

6. ஆறாவது மாநில நிதி ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ள மானியங்களை இரண்டு முக்கிய பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

i. சிறப்பு மானியம்

ii. பகிர்மான மானியம்.

2.4.1.3 சிறப்பு மானியம்

நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்படி, முன்னிலைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு குறிப்பிட்ட செயல்பாடுகளுக்காக சிறப்பு மானியங்கள் வழங்கப்படுகின்றன. மேலும் சிறப்பு மானியங்கள், மூலதன மானிய நிதி (CGF) மற்றும் செயல்பாடுகள், பராமரிப்பு மற்றும் பற்றாக்குறை மானிய நிதி (OMDGF) எனப் பிரிக்கப்படுகின்றன. மானியங்கள் மாநில மற்றும் மாவட்ட அளவில் ஒதுக்கப்படுகின்றன.

I. மூலதன மானிய நிதி

ஆறாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி, மூலதன மானிய நிதி ஆறாவது மாநில நிதி ஆணையத்தின் செயல்பாட்டு காலம் முழுமைக்கும் தொடரப்பட்டுள்ளது. ஆறாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்படி, 2025–26 ஆம் ஆண்டிற்கான மூலதன மானிய நிதி என்ற தலைப்பின் கீழ் ரூ.1319 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மூலதன மானிய நிதி மாநில அளவிலான மற்றும் மாவட்ட அளவிலான கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

மாநில அளவிலான மூலதன மானிய நிதி (CGF State)

2025-26 ஆம் ஆண்டிற்காக, பலவீனமான உள்ளாட்சி அமைப்புகளுக்கு முன்னுரிமை அளித்து கிராமப்புற உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு ரூ.780 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஊராட்சி சாலைகளை மற்ற மாவட்ட சாலைகளாக (ODR) மாற்றுவதற்கு ரூ.156 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மண்டல ஊரகப் பயிற்சி நிறுவனங்களுக்கான உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது. ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு ரூ.182 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவிலான மூலதன மானிய நிதி (CGF District)

மாவட்ட அளவில் மூலதன மானிய நிதிக்கு ரூ.200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

II. செயல்பாடு, பராமரிப்பு மற்றும் பற்றாக்குறை மானிய நிதி (OMDGF)

செயல்பாடு, பராமரிப்பு மற்றும் பற்றாக்குறை மானிய நிதி, ஊரகப் பகுதிகளுக்கான தொகுக்கப்பட்ட நிதியாக மாற்றப்பட்டுள்ளது. 2025-26 ஆம் ஆண்டிற்கு ரூ.964.60 கோடி கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒதுக்கப்பட்டுள்ளது

1. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நீண்டகாலமாக நிலுவையில் உள்ள குடிநீர் கட்டண நிலுவைத் தொகையை செலுத்த ரூ.130 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2. மின்சார நுகர்வு கட்டண நிலுவைத் தொகையை செலுத்தச் TANGEDCO–விற்கு ரூ.260 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

3. ஆறாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி பற்றாக்குறை அதிகமுள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2025–26 ஆம் ஆண்டுக்கு ரூ.364 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

4. நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளின் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார பணிகளுக்காக ரூ.69 கோடி, மலைப்பகுதி ஊராட்சிகளின் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார பணிக்களுக்காக ரூ.30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளன.

5. கிராம ஊராட்சிகள் சார்பாக ரூ.36 கோடி நூலக வரியாக முன்கூட்டியே செலுத்தப்படுகிறது.

6. ஊராட்சிகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் நலப்பணிகளை மேற்கொள்ள துப்புரவு

பணியாளர் நல வாரியத்திற்கு ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

7. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளிடையே திறன் மேம்பாட்டை உறுதி செய்வதற்காக, மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களுக்கு ரூ.60 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

8. ஆறாவது மாநில நிதி ஆணையம் பள்ளி உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ரூ.60 கோடியும், கிராமப்புறங்களில் வன உரிமைகள் சட்டத்தை செயல்படுத்தியதற்காக ரூ.10 கோடியும் வெகுமதியாக ஒதுக்கியுள்ளது.

2.4.1.4 பகிர்மான மாணியம் (Devolution Grant)

மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு முறையே பகிர்மான மானியம் 6:39:55 என்ற விகிதத்தில் பகிரப்படுகின்றது.

2025–26 ஆம் ஆண்டில் ரூ.7,904.60 கோடி பகிர்மான மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.4.2 15 வது ஒன்றிய நிதிக்குழு மானியம்

நிதிப்பகிர்வு தொடர்பாக பதினைந்தாவது நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் 2021–22 முதல் 2025–26 வரையிலான காலத்திற்குரியதாகும்.

- வரையறுக்கப்பட்ட நிதி மற்றும் வரையறுக்கப்படாத நிதி விகிதம் 60:40 ஆகும்.
- வரையறுக்கப்பட்ட மானியத்தில், குடிநீர் விநியோகம், நீர்வளப் பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு பணிகள் மற்றும் கழிவுப்பொருட்கள் மறுசுழற்சி பணிக்காக 30 சதவீதமும், மீதமுள்ள 30 சதவீதம் சுகாதாரப் பணிகளுக்குப் பயன்படுத்தலாம்.
- வரையறுக்கப்படாத மானியம் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் ஊதியம் மற்றும் நிர்வாக செலவினம் தவிர அரசு அனுமதித்துள்ள இதர

குறிப்பிட்ட பணிகளுக்காக உள்ளூர் தேவைகளின் அடிப்படையில் பயன்படுத்தலாம்.

பதினைந்தாவது ஒன்றிய நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ள மானியங்களை மாநில நிதி ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட பகிர்மான விகிதாச்சார அடிப்படையில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மூன்று அடுக்குகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான செங்குத்து (Vertical Sharing) விகிதாச்சார பகிர்வு பின்வருமாறு: –

மாவட்ட ஊராட்சிகள்	5%
ஊராட்சி ஒன்றியங்கள்	15%
கிராம ஊராட்சிகள்	80%

15–வது ஒன்றிய நிதிக்குழு மானிய ஒட்டுமொத்த காலத்திற்கு கீழ்க்கண்டவாறு மூன்றடுக்கு முறையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1

15வது ஒன்றிய பகிர்மான மானிய விவரம்

(ரூ. கோடியில்)

ஆண்டு	கிராம ஊராட்சி	வட்டார ஊராட்சி	மாவட்ட ஊராட்சி	மொத்தம்
2020–21	2885.60	541.05	180.35	3607.00
2021–22	2132.80	399.90	133.30	2666.00
2022–23	2208.80	414.15	138.05	2761.00
2023–24	2232.80	418.65	139.55	2791.00
2024–25	2365.60	443.55	147.85	2957.00
2025–26	2307.20	432.60	144.20	2884.00
மொத்தம்	14,132.80	2,649.90	883.30	17,666.00

2.4.2.1 15 வது நிதி ஆணையத்தின் சுகாதார மானியங்களின் கீழ் சுகாதாரத் துறைக்கான கட்டடங்கள் கட்டுதல்

சுகாதார உட்கட்டமைப்பினை கிராமப்புற அளவில் வலுப்படுத்துவதற்காக 15வது நிதி ஆணையத்தின் சுகாதார மானியங்கள் வழங்கப்படுகின்றன.

மாநிலத்தில் உள்ள கிராமப்புற மக்களுக்கு சுகாதார சேவைகளை சிறந்த முறையில் வழங்குவதை உறுதி செய்வதற்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இந்த பணிகளை மேற்கொள்கிறது.

இந்த மானியங்களைப் பயன்படுத்தி மாநிலத்தில் துணை சுகாதார மையங்கள், வட்டார பொது சுகாதார மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் என மூன்று வகையான சுகாதார கட்டடங்கள் கட்டப்படுகின்றன.

2021–22 முதல் 2024–25 வரை அனுமதிக்கப்பட்ட சுகாதாரக் கட்டடங்களின் விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை 2.2
15வது ஒன்றிய நிதி ஆணைய மானியத்தின் கீழ்
அனுமதிக்கப்பட்டுள்ள சுகாதாரத் கட்டட பணிகளின் விவரம்

வருடம்	அனுமதிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை			
	சுகாதார துணை மையங்கள்	வட்டார சுகாதார நிலையம்	சுகாதார துணை மையங்கள்	மொத்தம்
2021–22	169	68	13	250
2022–23	120	68	13	201

2023–24	122	38	64	224
2024–25	133	54	53	240
மொத்தம்	544	228	143	915

2.5 சொந்த வருவாய் ஆதாரங்கள்

2.5.1 வரி வருவாய்

- தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 இன் பிரிவு 172 கிராம ஊராட்சிகளுக்கு வீட்டு வரி விதிக்க அதிகாரம் அளிக்கிறது. இந்தப் பிரிவு 172–ல் குறிப்பிடப்பட்டுள்ள "வீட்டு வரி" என்ற சொல் "சொத்து வரி" என்று திருத்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 இன் பிரிவு 198–B, ஊராட்சிப் பகுதிகளில் பணிபுரியும் ஊழியர்கள் தங்கள் சம்பளம் அல்லது ஊதியத்திலிருந்து செலுத்த வேண்டிய தொழில் வரியை வசூலிக்கும் அதிகாரத்தினை கிராம ஊராட்சிகளுக்கு வழங்குகிறது.

2.5.2 வரி அல்லாத வருவாய்

கிராம ஊராட்சிகள் வரி அல்லாத வருவாயாக பின்வரும் ஆதாரங்களில் இருந்து வருவாயைப் பெற உரிமை பெற்றுள்ளன:

i. கட்டிட வரைபட அனுமதி மற்றும் மனைப்பிரிவு அங்கீகாரக் கட்டணம்.

ii. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 இன் ஆறாவது திருத்தச் சட்டத்தின் மூலம் கொண்டுவரப்பட்டுள்ள தொழிற்சாலை அனுமதிக் கட்டணம்.

iii. சந்தைக் கட்டணம்

iv. குடிநீர் கட்டணங்கள்

v. தொழில் உரிமக் கட்டணம்

vi. வண்டி நிலையத்திற்கான கட்டணம்

vii. சமூக காடுகள் ஏலம்

viii. மீன்பாசி குத்தகை

ix. சந்தைகள் மற்றும் கண்காட்சிகளில் இருந்து வரும் வருவாய்

x. படகுக் குழாம் கட்டணம்

xi. அபராதங்கள் மற்றும் தண்டத்தீர்வை

xii. சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் கட்டணம் மற்றும் உரிமத் தொகை.

2.5.3 ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் (PAR)

பதிவுத் துறையின் முத்திரைத்தாள் கட்டணம் மீதான கூடுதல் வரி வருவாய் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில அளவில் தொகுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்ட வரி வருவாயாக விடுவிக்கப்படுகிறது. கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு இந்த நிதி பகிர்ந்தளிக்கப்படுகிறது. அதன்படி, மொத்த

ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பங்கு (1/3) கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பிரித்தளிக்கப்படுகிறது. மீதமுள்ள மூன்றில் இரண்டு பங்கு (2/3) ஊரக பகுதிகளுக்கான முன்னுரிமைத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2.6 புதிய முயற்சிகள்

அ) ஊராட்சிகளின் வளர்ச்சிக் குறியீடு (PDI)

ஊராட்சிகள் மூலம் கிராமப்புறங்களில் உள்ளூர் மயமாக்கப்பட்ட நீடித்த நிலைத்த வளர்ச்சியின் (LSDG) முன்னேற்றத்தின் அளவீடு உள்ளூர் மட்டத்தில் மதிப்பிடப்பட வேண்டும். மேலும் இதனை கண்காணித்து ஆய்வு மேற்கொள்வதற்காக ஊராட்சிகளின் வளர்ச்சிக் குறியீடு (PDI) வகுக்கப்பட்டுள்ளது.

மாநிலத்திற்கான ஊராட்சிகளின் மேம்பாட்டு குறியீடு (PDI), 574 உள்ளூர் குறியீடுகள், 138 உள்ளூர் இலக்குகள் மற்றும் 638 தனித்துவமான தரவுப் புள்ளிகள் மூலம் உள்ளூர் மயமாக்கப்பட்ட நீடித்த

நிலைத்த வளர்ச்சியின் (LSDG) முன்னேற்றம் கண்காணிக்கப்படுகிறது. கிராம ஊராட்சிகளுக்கு கிடைக்கும் ஒவ்வொரு தரவுப் புள்ளிக்கும் தரவு மூலமானது அடையாளம் காணப்பட்டுள்ளது.

உள்ளூர் குறியீடு கட்டமைப்பு (LIF) மதிப்பெண்கள்

கிராம ஊராட்சிகள் கீழ்க்காணும் உள்ளூர் குறியீடு கட்டமைப்பு வகைகளின் LSDG–களில் கருப்பொருள் அடிப்படையில் மதிப்பெண்கள் பெறுகிறது:–

- A + சாதனையாளர் (90க்கு மேல்)
- A முன்னணி செயல்பாட்டாளார் (75 – 90)
- B செயல்திறனாளர் (60 – 75)
- C ஆர்வலர் (40 – 60)
- D தொடக்கநிலையாளர் (0 – 40)

ஒன்றிய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் "மாநிலங்களின் ஊராட்சிகளுக்கான அதிகாரப் பகிர்வுக் குறியீடு தரவரிசை" என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் அரசியலமைப்பில் தெரிவித்துள்ள முக்கிய அம்சங்களை நிறைவேற்றும் வகையில் ஊராட்சிகளின் செயல்பாடுகள் குறித்து இந்த அறிக்கையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

ஊராட்சிகளுக்கு அதிகாரங்களையும், வளங்களையும் பகிர்ந்தளிப்பதில் மாநிலத்தின் ஒட்டுமொத்த செயல்திறனை இந்த அறிக்கை மதிப்பீடு செய்கிறது. "செயல்பாடுகள் குறியீட்டில்" தமிழ்நாடு முதலிடத்திலும், "ஒட்டுமொத்த மதிப்பீடுகள்" குறியீட்டில் மூன்றாவது இடத்திலும் உள்ளது. ஆய்வின் படி, செயல்பாடுகள் பரிமாணத்தில் தமிழ்நாடு சிறந்து விளங்கியும், "திறன் மற்றும் செயல்பாட்டு கட்டமைப்பில்" இரண்டாவது இடத்தையும், நிதியில் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது. மற்ற

மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சிகளின் செயல்பாடு முன்னணியில் உள்ளது என்பதை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது. மேற்கூறிய ஒன்றிய அரசின் அறிக்கை ஜனநாயகப் பரவலாக்கம் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களோடும் அதிக அதிகாரம் அளிப்பதில் தமிழ்நாடு அரசின் தொடர்ச்சியான முயற்சிகளுக்கு இது சான்றாகும்.

ஆ) இணையதளம் மூலம் பொதுமக்களுக்கு சேவைகளை வழங்குதல்

கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் தற்போது இணையதளத்தின்மூலம் வழங்கப்படுகிறது, இதன் மூலம் வெளிப்படைத்தன்மையும் உண்மைத் தன்மையும் உறுதிசெய்யப்படுகிறது. இணையதள முகவரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

- www.vptax.tnrd.gov.in
- www.onlineppa.tn.gov.in
- www.tndrdpri.indianbank.in

முன்னதாக பதிவேடுகள் மற்றும் இரசீதுகள் மூலம் வழங்கப்பட்ட இச்சேவைகள் தற்போது மின்னணு முறையில் மக்களுக்கு எளிமையாக திறம்பட கிடைக்கப்பெறுவது உறுதி செய்யப்படுகிறது.

இ) இணையதளம் மூலம் வரி செலுத்துதல்

ஊராட்சிகளுக்கான சொத்துவரி, தொழில் வரி மற்றும் குடிநீர் கட்டணங்களை இணையதளம் மூலம் செலுத்துவதற்கான வசதியுடன் www.vptax.tnrd.gov.in ஒரு புதிய இணையதளம் தேசிய தகவல் மையத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இணையதளம் 2022-23 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது இணையதளம் மூலம் வரி செலுத்தலை எளிதாக்குகிறது. இப்போது, இந்த இணையதளத்தில் 1.5

கோடி குடியிருப்புகளின் தரவுகள் உள்ளன, மேலும் 12,482 கிராம ஊராட்சிகளுக்கு வரி வசூலிப்பதை எளிதாக்குவதற்காக கையடக்ககருவி (POS Device) விநியோகிக்கப்பட்டுள்ளன.

ஈ) தமிழ்நாடு எளிமைப்படுத்தப்பட்ட ஊராட்சிக் கணக்கு TN–PASS

கிராம ஊராட்சிகளின் நிதி பரிமாற்றங்களை எளிமைப்படுத்துவதற்காக, தமிழ்நாட்டில் எளிதாக்கப்பட்ட ஊராட்சிக் கணக்கு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த முறை கணக்கியல் செயல்பாடுகளை எளிதாக்கி, வேகமான பரிமாற்றங்களையும், சிறந்த சேவைகளையும் வழங்குதலை உறுதிசெய்கிறது.

உ) TN–PASS – இணையதளம் மூலம் சேவைக் கட்டணங்களைச் செலுத்துதல்

ஊரகப் பகுதிகளில் குடிநீர் மற்றும் தெருவிளக்குகளைப் பராமரித்துச் சிறப்பான

சேவையை மக்களுக்கு வழங்குவது கிராம ஊராட்சிகளின் முக்கிய பொறுப்பாகும். இதற்கு முன்னர், தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றிக்கு காசோலைகள் மற்றும் வரைவோலைகள் மூலம் சேவை கட்டணம் செலுத்தப்பட்டது. இந்த முறையில் தொகையை வசூலிப்பதிலும், ஒத்திசைவு செய்வதிலும் சிக்கல்களை ஏற்படுத்தியது. இதனைத்தீர்க்க, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பிற துறைகளை ஒருங்கிணைத்து மின்னணு பரிவர்த்தனை மூலம் சேவைகளுக்கான கட்டணங்களை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஊ) மனைப்பிரிவு மற்றும் கட்டிட அனுமதியை வழங்குதல்

கிராமப்புறங்களில் மனைப்பரிவு மற்றும் கட்டிட அனுமதிகள் தற்போது சம்பந்தப்பட்ட சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் (CMDA) அல்லது நகர்

ஊரமைப்பு இயக்குநரகம் (DTCP) தொழில்நுட்ப முன் ஒப்புதலின்படி(Online PPA) என்ற www.onlineppa.tn.gov.in இணையதளத்தின் மூலம் கிராம ஊராட்சிகளால் வழங்கப்படுகின்றன. கட்டட அனுமதிகளும் அதே செயல்பாட்டில் வழங்கப்படுகின்றன. மேலும், 2024–25–ஆம் நிதியாண்டில் தொடங்கப்பட்ட இந்த இணையதளம், மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுத்தப்படுகிறது.

எ) கிராமப்புறங்களில் தொழிற்சாலை தொடங்குவதற்கான நடைமுறைகளை எளிதாக்குதல்

கிராமப்புறங்களில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க, தொழிற்சாலைகளுக்கான கட்டிட அனுமதிகள், வணிக உரிமங்கள் மற்றும் கட்டுமான அனுமதிகளை இப்போது எளிதாகப் பெறலாம். இதற்காக தனி வழிகாட்டுதல்கள் அமைக்கப்பட்டு, பல்வேறு துறைகளை ஒருங்கிணைக்கவும், தேவையான அனுமதிகளை உடனடியாகப் பெறவும்

ஒற்றைச் சாளர வலைத்தள அமைப்பு முறை உருவாக்கப்பட்டு வருகிறது.

2.7 சிறப்பு விருதுகள் மற்றும் சிறப்பாக செயல்படும் ஊராட்சி அமைப்புகளுக்கு அங்கீகாரம் வழங்குதல்

அ. சிறந்த தேசிய ஊராட்சிகளுக்கான விருதுகள்

தேசிய ஊராட்சிகளுக்கான விருதுகள் பல்வேறு முன்னுரிமைத் துறைகள்/ கருப்பொருள்களின் கீழ் அவற்றின் செயல்திறனை அங்கீகரிக்கும் வகையில், விருது பெற்ற ஊராட்சிகளுக்கான நிதி ஊக்கத்தொகை உட்பட, சிறப்பாகச் செயல்படும் ஊராட்சிகளுக்கு பின்வரும் பிரிவுகளின் கீழ் ஒன்றிய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் வழங்கப்படுகிறது.

1. தீன் தயாள் உபாத்யாய பஞ்சாயத்து சஷக்த் விகாஸ் புரஸ்கார் (DDUPSV) என்ற விருதானது, குறிப்பிட்ட சில "உள்ளூர் நிலையான வளர்ச்சிக் குறிக்கோள்கள்" (LSDGs) அடிப்படையில் குறிப்பிட்ட

தலைப்புகளில் சிறந்த செயல்திறன் மிக்க கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும்.

2.நானாஜி தேஷ்முக் சர்வோத்தம் பஞ்சாயத்து சஷக்த் விகாஸ் புரஸ்கார் (NDSPSV) என்ற விருதானது, அனைத்து "உள்ளூர் நிலையான வளர்ச்சிக் குறிக்கோள்களில்" (LSDG) ஒட்டுமொத்த தலைப்புகளிலுள்ள செயல்திறன் அடிப்படையில் சிறப்பாகச் செயல்படும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும்.

3. பசுமை முன்னெடுப்புத் திட்டங்களுடன் தொடர்புடைய சிறப்பு விருதுகள்: –

அ) கிராம் ஊர்ஜா ஸ்வராஜ் விஷேஷ் பஞ்சாயத்து புரஸ்கார் (Village Energy Self–reliant Special Panchayat Award)

ஆ) கார்பன் நியூட் ரல் விஷேஷ் பஞ்சாயத்து புரஸ்கார் (Carbon Neutral Special Panchayat Award).

2023–24 ஆம் ஆண்டிற்கான தீன் தயாள் உபாத்யாய் பஞ்சாயத்து சஷக்த் விகாஸ் புரஸ்கார் பிரிவின் கீழ், கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியத்தின் பிச்சனூர் கிராம ஊராட்சி, நல் ஆளுமை உள்ள கிராம ஊராட்சி கருப்பொருளில் தேசிய அளவில் முதல் பரிசு பெற்றுள்ளது.

2024–25 ஆம் ஆண்டில் தீன் தயாள் உபாத்யாய பஞ்சாயத்து சஷக்த் விகாஸ் புரஸ்கார் பிரிவில், கோயம்புத்தூர் மாவட்டம், எஸ்.எஸ்.குளம் ஒன்றியத்தின் கீரணத்தம் கிராம ஊராட்சிக்கு உட்கட்டமைப்பில் தன்னிறைவு பெற்ற ஊராட்சி கருப்பொருளில் முதல் பரிசு பெற்றுள்ளது. தென்காசி மாவட்டம், குருவிக்குளம் ஒன்றியத்தின் வரகனூர் கிராம ஊராட்சிக்கு மகளிர் நேய கிராம ஊராட்சி என்ற கருப்பொருளில் மூன்றாவது பரிசு வழங்கப்பட்டது.

3. மாநில அரசுத் திட்டங்கள்

3.1 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டமானது ஒரு முழுமையான திட்டமாக 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை ஐந்து ஆண்டுகளில் அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்தோடு ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் ஒரு வருடத்திற்கு தலா ரூ.20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தேவையான அடிப்படை வசதிகள் எற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டது. குளங்கள் புனரமைத்தல், தளவாட பொருட்கள் மற்றும் நூல்களுடன் ஊரக நூலகங்கள் அமைத்தல், இடுகாடு/ சுடுகாடுகளை உருவாக்குதல்/ மேம்படுத்துதல் மற்றும் பள்ளி மற்றும் சமுதாய விளையாட்டு மையங்கள் அமைத்தல் போன்றவை அன்றைய காலகட்டத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் முக்கிய கூறுகளாக இருந்தன.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டமானது 2021–22 ஆம் ஆண்டு மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு, அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் சமமாக வளங்களைப் பகிர்ந்தளித்து அதன் மூலம், மனிதவள மேம்பாடு, சமூக வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, சுற்றுப்புற சூழல் மேம்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் சிறந்த நிர்வாகம் ஆகியவற்றை உள்ளடக்கிய முழுமையான வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2021–22 முதல் 2025–26 முடிய ஐந்து ஆண்டுகளில் அனைத்து கிராமங்களிலும் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

3.1.1 கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்தல்

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–IIன் கீழ் ஒவ்வொரு ஆண்டும், ஊராட்சி ஒன்றிய அளவில் சம எண்ணிக்கையிலான கிராம

ஊராட்சிகள் (சுமார் 20%) தேர்ந்தெடுக்கப்பட்டு மாவட்டம் மற்றும் மாநில அளவில் இதே அளவீடு பராமரிக்கப்படுகிறது.

1. நிதி ஒதுக்கீடு

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–IIன் கீழ் குறைந்தபட்ச அடிப்படை நிதியாக தலா ரூபாய் 30 இலட்சமும், செயல்திறன் ஊக்க நிதியாக ரூபாய் 5 இலட்சமும் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் வழங்கப்படுகிறது. மக்கள் தொகை மானியம் மற்றும் குக்கிராம மானியம் ஆகியன கணக்கீடு செய்யப்பட்டு குக்கிராம எண்ணிக்கைக்கு 50% முக்கியத்துவமும், மக்கள் தொகை எண்ணிக்கைக்கு 50% முக்கியத்துவமும் அளிக்கப்பட்டு நிதி வழங்கப்படுகிறது.

ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் செயல் திறன் ஊக்க நிதியானது சில அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு, அடையப்பட்ட

அளவுருக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2. ஒருங்கிணைந்த குக்கிராமங்கள் கணக்கெடுப்பு

குக்கிராமங்களில் உள்ள அடிப்படை உட்கட்டமைப்பு இடைவெளி தேவைகள் குறித்த கணக்கெடுப்பு சம்பந்தப்பட்ட அலுவலர்கள், கிராம அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர் மற்றும் கிராம ஊராட்சி தலைவர்களால் மேற்கொள்ளப்பட்டன. இக்கணக்கெடுப்பின் அடிப்படையில், பணிகள் மூன்று விரிவான இனங்களின் கீழ் எடுக்கப்பட்டுள்ளன. (1) அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட பணிகள் (2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பிற திட்டங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் பணிகள் மற்றும் (3) இதர துறை திட்டப் பணிகள்.

3. திட்டக் கூறுகள்

வ. எண்	பணியின் வகைகள்
1.	குளங்கள்/ஊருணிகள் புனரமைத்தல்
2.	பொது பயன்பாட்டு கட்டடங்கள்
3.	சமத்துவ சுடுகாடு / இடுகாடுகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள்
4.	தெருக்கள் / வீதிகள் மேம்படுத்துதல்
5.	தெருவிளக்குகள்
6.	வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகள்

மொத்த ஒதுக்கீட்டில் 30% ஒதுக்கீடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2021–22 ஆம் ஆண்டில் 2,657 கிராம ஊராட்சிகள், ரூ.1,455 கோடி நிதி ஒதுக்கீட்டில் தேர்தெடுக்கப்பட்டுள்ளது. 2022–23 ஆம் ஆண்டில் 2,544 கிராம ஊராட்சிகள், ரூ.1,155.20 கோடி நிதி ஒதுக்கீட்டுடனும், 2023–24

ஆம் ஆண்டில் 2,504 கிராம ஊராட்சிகள் ரூ.1,148.69 கோடி நிதி ஒதுக்கீட்டுடனும், 2024–25 ஆம் ஆண்டில் 2,482 கிராம ஊராட்சிகள் ரூ.1,147.28 கோடி நிதி ஒதுக்கீட்டுடனும் தேர்ந்தெடுக்கப்பட்டன. 2025–26 ஆம் ஆண்டில் 2,329 கிராம ஊராட்சிகள் ரூ.1,087.33 கோடி நிதி ஒதுக்கீட்டுடனும் தேர்ந்தெடுக்கப்பட உள்ளன.

4) பணியின் வகைகள்

(i) நீர் நிலைகள் புனரமைத்தல்

கடந்த ஐந்து ஆண்டுகளில் வேறு எந்த திட்டத்தின் கீழும் எடுக்கப்படாத கிராம ஊராட்சிகளின்/ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள குளங்கள்/ஊருணிகள் மற்றும் சிறுபாசன ஏரிகள் புதுப்பிக்க எடுக்கப்பட்டுள்ளன. புதுப்பித்தலுடன் கூடுதல் வசதிகளான, வரத்து மற்றும் போக்கு கால்வாய்கள், மதகுகள் மற்றும் கலங்குகள், கால்வாய்களை

சீரமைத்தல் மற்றும் தூர்வாருதல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், உள்குளம் மற்றும் படித்துறை அமைத்தல், அளவீடு செய்து எல்லை கற்களை அமைத்தல், தடுப்பு சுவர்கட்டுதல் போன்ற பணிகள் எடுக்கப்படுகின்றன.

2021-22 முதல் 2023-24 வரை 5,508 பணிகள் மேற்கொள்ளப்பட்டு மொத்தம் ரூ.518.25 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. 2024-25 ஆம் ஆண்டு 497 பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.28.68 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

(ii) குக்கிராமங்களில் தெருக்கள்/ வீதிகள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்

இருபுறமும் அதிக எண்ணிக்கையிலான வீடுகள் அமைந்துள்ள தெருக்கள் மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மீட்புத் துறையினால், பேரிடர் பாதிப்புகளுக்கு உள்ளாகும் பகுதிகள் என்று

வரையறுக்கப்பட்டுள்ள தெருக்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு தேவைப்படும் இடங்களில் குறுக்கு வடிகால்கள் அமைப்புடன், பேவர் பிளாக் அல்லது சிமெண்ட் கான்கிரீட் சாலை பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2021–22 முதல் 2023–24 வரை, 23,721 பணிகள் மொத்தம் ரூ.1,181.80 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. 2024–25ஆம் ஆண்டு 9,536 பணிகள் ரூ.503.82 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

(iii) சமத்துவ சுடுகாடு இடுகாடு என்று பரிந்துரைக்கப்பட்ட இடங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளுதல்

சுடுகாடு/இடுகாடு பணிகள் மேற்கொள்ளப்படாத ஊராட்சிகளிலும் மற்றும் மிக அத்தியாவசியமாக தேவைப்படும் ஊராட்சிகளிலும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்– II இன் கீழ் சமத்துவ இடுகாடு/சுடுகாடுக்கான பணிகளை ஊராட்சி மன்ற

மற்றும் கிராம சபை தீர்மானம் நிறைவேற்றி சாதி மத வேறுபாடற்று அனைத்து குடும்பங்களும் பயன் படுத்தும் விதமாக சுடுகாடு/இடுகாட்டிற்கு தேவையான வசதிகள் மேற்கொள்ளப்படும். அணுகு சாலை, தகன கொட்டகை / காத்திருக்கும் கொட்டகை அமைத்தல், இடுகாடுகளுக்கு குடிநீர் வசதி, இடுகாடுகளுக்கு பாதை, விளக்கு வசதி மற்றும் சுற்றுச்சுவர் ஆகியவை துணை பணிகளாக எடுக்கப்படுகின்றன.

2021–22 முதல் 2023–24 வரை, 2,033 பணிகள் மொத்தம் ரூ.110.36 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. 2024–25ஆம் ஆண்டு 522 பணிகள் ரூ.33.14 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

(iv) பள்ளிகளில் உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பொதுப் பயன்பாட்டு உட்கட்டமைப்புகளை உருவாக்குதல்

ஊராட்சி ஒன்றிய மற்றும் அரசு பள்ளிகளில் மிதிவண்டி நிறுத்துமிடம், சமையலறை அமைத்தல், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கழிப்பறை வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொதுப் பயன்பாட்டு உட்கட்டமைப்பு வசதிகளான ஊராட்சிமன்ற கட்டிடங்கள் கட்டுதல், அங்கன்வாடி மையம் அமைத்தல், பொது விநியோகக்கடைகள் கட்டுதல், பொது விநியோகக் கடைகளுக்கு கூடுதல் வசதிகள் மற்றும் பேருந்து நிலையங்களில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2021-22 முதல் 2023-24 வரை, 10,159 பணிகள் மொத்தம் ரூ.768.81 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. 2024-25ஆம் ஆண்டு 1,457

பணிகள் ரூ.250.72 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

(v) பசுமை மற்றும் சுத்தமான கிராமம்

ஊட்டச்சத்து பண்ணைகள் (Nutri–Garden/Nurseries), பொது திறந்தவெளி ஒதுக்கீடு நிலங்களில் (OSR Land) பசுமை போர்வை உருவாக்குதல், நாற்றாங்கால் பண்ணைகளுக்கு வேலி அமைத்தல் மற்றும் நடைபயிற்சி தடம், கழிவு நீர் மேலாண்மை மற்றும் கிடைமட்ட / செங்குத்து வடிகட்டி கொண்ட வடிகால் கட்டுமானம் போன்ற பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

2021–22 முதல் 2023–24 வரை, 6629 பணிகள் ரூ.272.55 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டன.

(vi) வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகள்

சந்தைப்படுத்தல் வசதிகளான சந்தைகள் அமைத்தல் / கிராம விற்பனை கூடம் / சேமிப்புக் கிடங்கு / மீன் சந்தைகளில் தகர கொட்டகைகள், சிமெண்ட் தளம், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள் (ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக), பேவர் பிளாக் நடைபாதை போன்ற அடிப்படைக் கட்டமைப்பு பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

கதிரடிக்கும் களம்/ மீன் உலர்த்தும் முற்றம் / கைவினை கலைஞர்களுக்கான கூடம்., காளான் வளர்ப்பு கூடங்கள், பட்டுப்புழு வளர்ப்பு கூடங்கள், பால் கொள்முதல் மையங்கள் போன்ற வாழ்வாதார தொடர்பான உள்கட்டமைப்பு பணிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

2021–22 முதல் 2023–24 வரை, 6,018 பணிகள் ரூ.428.82 கோடி மதிப்பீட்டில்

மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2024–25 ஆம் ஆண்டில், 1,828 பணிகள் ரூ.159.47 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

(vii) தெருவிளக்குகள்

2024 – 25 ஆம் ஆண்டு தெருவிளக்குகள் தனி பணி வகையாக எடுத்துக்கொள்ளப்பட்டன. புதிய குடியிருப்புகள், இந்திரா நினைவு/ பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட குடியிருப்புகள், சுடுகாடு/ இடுகாட்டிற்கான பாதை போன்ற இடங்களில் புதிய ஒளி உமிழும் டையோடு (LED) விளக்குகள் கொண்ட தெரு விளக்குகள் அமைக்கப்பட்டன.

2024 – 25 ஆம் ஆண்டில் 1,859 பணிகள் ரூ.22.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.2 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ஊரக நூலகங்கள் புதுப்பித்தல்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் அட்டவணை எண்.XI விதிகள் 243G தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 ஆம் ஆண்டு பிரிவு 111ல் கிராமங்களில் நூலகங்கள்/வாசிப்பறைகளை திறப்பதற்கும், பராமரிப்பதற்கும் கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரங்களை வழங்கியுள்ளன. அதன் அடிப்படையில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 2006–07 முதல் 2010–11 முடிய 12,618 ஊரக நூலகங்கள் அமைக்கப்பட்டன. தொடர் பராமரிப்புப்பணி மேற்கொள்ளப்படாத காரணத்தால், பெரும்பாலான நூலகங்கள் முழுமையாக இயங்கவில்லை.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட அனைத்து ஊரக நூலகங்களை புனரமைக்க அரசு ஆணையிட்டது.

நூலக கட்டிடங்களை புதுப்பித்தல் மற்றும் பழுதுப்பார்த்தல், சாய்தளம் மற்றும் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்துதல், பழுதுபட்ட, பயன்படுத்த இயலாத அறைகலன்களை மாற்றுதல் மற்றும் கூடுதலான புத்தகங்கள் வழங்குதல் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

இதுவரை 7,924 நூலகங்கள் ரூ.176.02 கோடி மொத்த மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 2,660 நூலகங்கள் 2025–26ம் ஆண்டில் புதுப்பிக்கப்படும்

இவ்வாறு புதுப்பிக்கப்பட்ட நூலகங்கள் பள்ளி மற்றும் கல்லூரிக்கு செல்லும் மாணவ மாணவியரால் பயன்படுத்தப்பட்டு நன்றாக இயங்கி வருகின்றன. கிராமப்புற இளைஞர்களை போட்டித் தேர்வுக்கு தயார் படுத்துவதற்கும் இந்நூலகங்கள் பயன்படுகின்றன. தற்போதுள்ள புதிய

நடைமுறைகளுக்கு ஏற்ப, சில நூலகங்களில் மின்–புத்தகங்களும் இடம் பெற்றுள்ளன.

ஏற்கனவே வழங்கப்பட்ட புத்தகங்கள் தொடர்ச்சியான பயன்பாட்டின் காரணமாக பழையதாகிவிட்டதால், புதிய புத்தகங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3.3 5000 சிறுபாசன ஏரிகளை புதுப்பித்தல்

சிறுபாசன ஏரி மற்றும் குளங்கள்/ ஊருணிகள் ஆகியவை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் பராமரிப்பில் உள்ளது. ஊரகப்பகுதியில் 22,051 சிறுபாசன ஏரி மற்றும் 69,777 குளங்கள்/ஊருணிகள் உள்ளன. சிறுபாசன ஏரிகள் ஊராட்சி ஒன்றியங்களுக்கும், குளங்கள்/ஊருணிகள் கிராம ஊராட்சிகளுக்கும் சொந்தமானது. இந்த நீர்நிலைகளை புதுப்பிப்பதன் மூலம் நீரின் கொள்திறன் அதிகரிக்கவும், நிலத்தடி

நீர் மட்டம் உயரவும் மற்றும் உபரி நீர் வீணாவதை தடுக்கவும் வழிவகுக்கிறது .

சிறுபாசன ஏரிகளை அதன் அசல் கொள்ளளவிற்கு மீட்டெடுப்பது, நிலத்தடி நீர் கொள்ளளவினை அதிகரிப்பது, நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவது, நீரோட்டம் மிகுதியாக உள்ள பகுதிகள் மற்றும் நீர்நிலைகளில் ஏற்படும் உடைப்புகளை தடுப்பதன் மூலம் வெள்ள தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது, குடிநீர் மற்றும் விவசாய நோக்கங்களுக்காக நீர் சேமிப்பினை ஒழுங்குபடுத்துவது, இதன் மூலம் நிலையான குடிநீர் வழங்கல் மற்றும் பயிர் உற்பத்தி மற்றும் பாசன பகுதியை அதிகரிப்பது போன்றவை இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

நீர்பரப்பு பகுதிகளில் தேவைப்படும் இடங்களில் இயந்திரங்களின் உதவியுடன் புதர்கள் மற்றும் தேவையற்ற மரங்களை அகற்றி,

ஆழப்படுத்தி தூர்வாருதல், தூர்வாரப்பட்ட மண்ணை பயன்படுத்தி கரையை வலுப்படுத்துதல் மற்றும் தேவையான குறுக்கு வெட்டு கரைகளை மீட்டெடுத்தல் போன்றவை இத்திட்டத்தின் கூறுகளாகும். மதகுகள், கலங்குகள், இன்னும் பிற, தேவையான பழுதுபார்ப்பு அல்லது புனரமைப்பு பணிகள் மற்றும் இணைப்பு வரத்து வாய்க்கால்களை தூர்வாருதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

3.3.1 நிதி ஒதுக்கீடு

இத்திட்டத்தில் பொது மக்களின் பங்கேற்பை முழுமையாக உறுதி செய்யும் பொருட்டு அரசு சாரா நிறுவனங்கள் (NGOs), சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் (CBOs), பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) நிதி மற்றும் கல்வி நிறுவனங்கள் மூலம் பெறப்படும் நிதியில் பணியினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. அவர்களது சொந்த நிதி அல்லது பெருநிறுவன சமூகப்

பொறுப்பு (CSR) நிதி மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். 2024–25 ஆம் ஆண்டு ரூ.51.20 கோடி மதிப்பீட்டில் 806 சிறுபாசன ஏரிகள் அரசு சாரா நிறுவனங்கள் / பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) நிதி மூலம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இதனுடன் ரூ.500 கோடி மதிப்பீட்டில் சிறு பாசன எரிகள் புனரமைப்பு பணியானது அரசு நிதி மூலமும் மேற்கொள்ளப்படும்.

தேவைப்படும் சிறுபாசன ஏரிகளில் வரத்து கால்வாய் சீரமைப்பு பணிகள், உபரி நீர்போக்கி, மதகு(கள்) போன்ற பணிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் (MGNREGS) கீழ் மேற்கொள்ளப்படும்.

3.3.2 பங்கேற்பு அணுகு முறை

சிறுபாசன ஏரிகள் புதுப்பித்தல் பணியானது அரசு சாரா நிறுவனங்கள் (NGOs), சமூக

அடிப்படையிலான நிறுவனங்கள் (CBOs), மற்றும் பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) நிதி மூலம் மேற்கொள்ளப்படுகிறது. மேற்கூறிய நிறுவனங்கள் செயல்படாத இடங்களில் நமக்கு நாமே திட்டம் (NNT) மற்றும் மாநில நிதிக்குழு மானியங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. நிதி ஆதாரத்தை பொருட்படுத்தாமல் பங்கேற்பு அணுகுமுறையை கருப்பொருளாக கொண்டு விவசாய அமைப்புகள், விவசாய மன்றங்கள், ஆயக்கட்டுதாரர்கள் அல்லது பயனாளர் குழுக்கள் ஈடுபடுத்தப்படுகின்றன. அவ்வாறு பயனாளர் குழுக்கள் அல்லது ஆயக்கட்டுதாரர் சங்கங்கள் இல்லாத இடங்களில், சிறுபாசன ஏரிகளால் பயனடையும் விவசாயிகளை சேர்த்து புதிதாக உருவாக்கலாம்.

3.4 வீட்டு வசதி திட்டங்கள்

3.4.1. கலைஞரின் கனவு இல்லம்

குடிசை வீடுகளுக்கு மாற்றாக நிரந்தர வீடுகள் கட்டும் முன்னோடித் திட்டம் தமிழ்நாட்டில் கடந்த 1975–ம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டது. "குடிசை இல்லா தமிழ்நாடு" என்ற இலக்கை அடைந்திடும் பொருட்டு, 2010–ம், ஆண்டில் கலைஞர் வீடு வழங்கும் திட்டம் (KVVT) செயல்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசால் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் ஏறத்தாழ எட்டு லட்சம் குடிசைகள் தமிழ்நாட்டில் இன்றளவும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, ஊரகப் பகுதிகளில் உள்ள குடிசைகளுக்கு மாற்றாக பாதுகாப்பான மற்றும் நிலையான கான்கிரீட் வீடுகள் அமைத்து "குடிசையில்லா தமிழ்நாடு" என்ற இலக்கை 2030 ஆண்டிற்குள் அடைந்திடும் பொருட்டு 2024–25

ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட உரையில், எட்டு லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது. முதற்கட்டமாக, 2024–25 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் புதிய வீடுகள் கட்டுமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3.4.1.1 அலகு தொகை மற்றும் இலக்கு

ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.3.50 இலட்சம் ஆகும். இதில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், வீடு கட்டுவதற்கு 90 மனிதசக்தி நாட்களுக்குரிய தொகை மற்றும் தனிநபர் இல்லக் கழிப்பறை (IHHL) கட்டுவதற்கு 10 மனிதசக்தி நாட்களுக்குரிய தொகை ஆகியவை அனுமதிக்கப்பட்ட அலகுத் தொகையான ரூ.3.50 இலட்சத்திற்குள் அடங்கும். ஊரக தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் ஏற்கனவே கழிப்பறை வழங்கப்படாமல் இருந்தால்

பயனாளிகளுக்கு தனிநபர் இல்லக் கழிப்பறை (IHHL) கட்டிட ரூ.12,000/– வழங்கப்படும்.

3.4.1.2 முக்கிய அம்சங்கள்

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- வீட்டின் குறைந்தபட்ச பரப்பளவு, சமையலறை உட்பட 360 சதுர அடியாக இருத்தல் வேண்டும்.

- அதில், 300 சதுர அடி சிமெண்ட் கான்கிரீட் கூரையால் அமைக்கபபட்டிருக்க வேண்டும். மீதமுள்ள 60 சதுர அடி சிமெண்ட் கான்கிரீட் அல்லது பயனாளியின் விருப்பப்படி தீப்பிடிக்காத வகையிலான கூரையாக இருக்கலாம்

- எந்நிலையிலும் ஓலை மற்றும் கல்நார் தகட்டினால் கூரை அமைப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

- மலைப்பகுதிகளாக இருப்பின் பயனாளியின் விருப்பத்திற்கு ஏற்ப மேற்கூரை அமைக்கலாம்.

- அவை சிமெண்ட் கான்கிரீட் அல்லது PUF பேனல்களால் ஆன மேற்கூரையாக இருக்கலாம்.

- வீடுகளின் சுவர்களை செங்கல், நிலக்கரி சாம்பல் கலந்த கற்கள், சிமெண்ட் கான்கிரீட் கற்கள், இன்டர் லாக்கிங் கற்கள் மற்றும் AAC கற்கள் பயன்படுத்தி சிமெண்ட் சாந்தினால் சட்டக அமைப்புடன் (framed structure) கட்டுதல் வேண்டும்.

- எந்தச் சூழ்நிலையிலும் மண் சாந்து உபயோகித்தல் கூடாது. மண் சுவர்களை கட்டுவது முற்றிலுமாகத் தடை செய்யப்படுகிறது.

- இத்திட்டத்தின் கீழ் குறைந்த செலவிலான தொழில்நுட்பங்கள் மற்றும் விரைவான கட்டுமான முறை ஆகியவை அனுமதிக்கப்படும்.

- வீடுகளை பயனாளிகள் தாங்களே கட்டிக் கொள்ளலாம்.

- **கட்டுமானப் பொருட்கள் வழங்குதல்** – இத்திட்டத்திற்குத் தேவையான சிமெண்ட் மற்றும் இரும்புக் கம்பிகள் கணக்கிடப்பட்டு, துறை மூலம் பயனாளிகளுக்கு வழங்கப்படும். துறை மூலம் வழங்கப்பட்ட சிமெண்ட் மற்றும் இரும்புக் கம்பிகளுக்கான தொகை பயனாளிகளுக்கு விடுவிக்கப்படும் தவணைத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

- மாநில அளவிலான ஒற்றை ஒருங்கிணைப்பு வங்கி கணக்கு (STATE

LEVEL SINGLE NODAL ACCOUNT) மூலம் பட்டியல் தொகை நான்கு தவணைகளில் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

- தேவைப்படும் பயனாளிகளுக்கு, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் / வணிக வங்கிகள் மூலம் ரூ.50,000/– முதல் ரூ.1,00,000/– வரை கடனுதவி ஏற்படுத்தப்படும்.

3.4.1.3 தகுதி வரையறைகள்

இத்திட்டத்தின் தகுதி வரையறைகள் பின்வருமாறு:

- கலைஞர் வீடு வழங்கும் திட்ட மறுகணக்கெடுப்பு பட்டியலில் இடம் பெற்று, நாளதுவரை குடிசைகளில் தொடர்ந்து வாழ்கின்ற தகுதியுள்ள குடும்பங்களை இப்பட்டியல் நிறைவு பெறும் வரை

பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

- கலைஞர் வீடு வழங்கும் திட்ட மறுகணக்கெடுப்பில் ஒரு கிராம ஊராட்சியில் குறைந்த அளவிலான வீடுகள் அல்லது வீடுகளே இல்லாத நிலையில், புதிய குடிசைகள் கணக்கெடுப்பில் பட்டியலிடப்பட்ட குடும்பங்கள் மற்றும் அனைவருக்கும் வீடு கணக்கெடுப்பு தரவுத்தளத்தில் உள்ள குடிசைகள் பரிசீலிக்கப்படும்.

- வீட்டு மனைப்பட்டா அல்லது உரிமை ஆவணம் உள்ள குடும்பங்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதி உடையவர்கள் ஆவர்.

- புறம்போக்கு நிலங்களில் கட்டப்பட்டுள்ள குடிசைகளுக்கு "கலைஞரின் கனவு

இல்லம்" திட்டத்தின் கீழ் நிரந்தர வீடுகள் வழங்கப்பட மாட்டாது. இருப்பினும் குடிசை அமைந்துள்ள இடம் ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலம் எனில், வருவாய் துறையால் மேற்படி ஆக்கிரமிப்பு வரன்முறை செய்யப்பட்டிருந்தால் வீடு வழங்க பரிசீலிக்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் நிரந்தர வீடுகளாக மாற்றத் தகுதியற்ற குடிசைகளின் வகைகள் பின்வருமாறு:–

- வாடகைதாரர்கள் வசிக்கும் குடிசைகள், வணிக நோக்கங்களுக்காக அல்லது விலங்குகளுக்காக பயன்படுத்தப்படும் குடிசைகள், பகுதியாக கான்கீரிட் கூரை / ஓடு / கல்நார் தகடு / உலோக தகடு கூரை வேயப்பட்ட மற்றும் மற்றொரு பகுதி ஓலைக் கூரையால் அமைக்கப்பட்ட குடிசைகள் மற்றும் கான்கிரீட்/ஓடு உலோக தகடு/கல்நார்

தகட்டின் மீது ஓலைக்கூரை வேயப்பட்ட குடிசைகள்.

- வேறு இடத்தில் நிரந்தர வீடு இருந்து குடிசையில் வாழ்பவர் மற்றும்
- ஓய்வுபெற்ற அல்லது பணியில் உள்ள அரசு ஊழியர்களுக்கு சொந்தமான குடிசைகள் மற்றும் பதவியிலிருக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு சொந்தமான குடிசைகள்.

3.4.2 ஊரகப்பகுதிகளில் அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை சீரமைத்தல்

தமிழ்நாடு சட்டப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டதற் –கிணங்க, 2024–25 ஆண்டில் 2000–01 ஆம் ஆண்டுக்கு முன்பாக பல்வேறு அரசுத் திட்டங்களின் கீழ் ஊரகபகுதிகளில் கட்டப்பட்டு பழுதடைந்துள்ள வீடுகளை இத்திட்டத்தின் கீழ் பழுதுநீக்கும் பொருட்டு

எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலமாக 2011–ஆம் ஆண்டு வரை பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட வீடுகளின் தற்போதைய நிலையை அறிந்து கொள்ளும் பொருட்டு, இணைய அடிப்படையிலான கைபேசி செயலி வழியாக கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இக்கணக்கெடுப்பில், 2000–01–ம் ஆண்டுக்கு முன் கட்டப்பட்ட ஓட்டு வீடுகள் மற்றும் சாய்தள கான்கிரீட் வீடுகள் என மொத்தம் 2,57,006 வீடுகள் தகுதியானவை என கண்டறியப்பட்டது. இவ்வீடுகள் அனைத்தும் ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதால், இவை உடனடியாக பழுது நீக்கம் செய்ய வேண்டியவையாக உள்ளன. எனவே, ஓடு மற்றும் சாய்தள கான்கிரீட் வீடுகளில் 42,837 சிறு பழுது நீக்க பணிகளும், 56,613 பெரும் பழுது நீக்க

பணிகளும் 2024-25 ஆண்டில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

3.4.2.1 முக்கிய அம்சங்கள்

- பழுதுநீக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய வீடு, அரசுத் திட்டத்தின் கீழ் பயனாளியின் பெயரில் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக இருக்க வேண்டும் அல்லது வீடு ஒதுக்கீட்டினை பெற்ற பயனாளி இறந்திருப்பின், அவ்வீட்டில் குடியிருப்பவர் பயனாளியின் சட்டப்பூர்வ வாரிசாக இருக்க வேண்டும்.
- பழுது நீக்கம் மேற்கொள்ளப்படும் வீடுகள்/தொகுப்பு வீடுகளுக்கு கடந்த, பத்து ஆண்டுகளுக்குள் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் அல்லது வேறு ஏதாவது அரசு திட்டத்தின் கீழ் பழுது நீக்கம் செய்ய மானியம் பெற்றிருக்க கூடாது.

- இத்திட்டத்தின் கீழ் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் பயனாளிக்கு பழுது நீக்கத்திற்கு எடுத்துக்கொள்ளும் வீட்டைத் தவிர, வேறு சொந்த வீடு வைத்து இருக்க கூடாது அல்லது அரசு வீடு கட்டும் திட்டங்களின் கீழ் பயனடைந்திருக்க கூடாது.
- பயனாளி அரசு பணியாளராக இருத்தல் கூடாது.
- வீடுகள் பழுதுநீக்கத்திற்கு உள்ளபடியான மதிப்பீட்டு தொகையானது சிறு மற்றும் பெரும் பழுது நீக்கத்திற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள நிதி வரம்புக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.
- வீடுகளில் ஏற்பட்டுள்ள சிறு மற்றும் பெரும்பழுதுகள் நீக்க பணிகளை பயனாளிகளே மேற்கொள்ள வேண்டும்.
- இப்பணிக்கான நிதி இரண்டு தவணைகளாக விடுவிக்கப்படும்.
- பெரும் பழுது நீக்கம் மேற்கொள்ளப்படும் வீடுகளுக்கு, கட்டுமான பொருட்களான இரும்பு

மற்றும் சிமெண்ட் போன்ற பொருட்கள் பயனாளிகளுக்கு துறை மூலம் வழங்கப்படும். தவணைத்தொகை விடுவிக்கப்படும் போது வழங்கப்பட்ட பொருட்களுக்கான தொகை பிடித்தம் செய்யப்படும்.

3.4.2.2 அலகுத் தொகை

இந்த திட்டத்தின் கீழ் சிறு மற்றும் பெரும் பழுதுநீக்கத்திற்க்கு வழங்கப்படும் நிதியுதவி குறித்த விவரம் பின்வருமாறு,

ஓட்டு வீடுகளுக்கு

வ. எண்	பழுது நீக்கத்தின் வகை	அனுமதிக்கப்பட்ட அதிகபட்சத் தொகை	
		சமவெளிப் பகுதிகளுக்கு	மலைப்பகுதிகளுக்கு
1	சிறு பழுது	ரூ.32,000/- அல்லது சரியான மதிப்பீட்டுத் தொகை (இவற்றில் எது குறைவோ)	ரூ.42,000/- அல்லது சரியான மதிப்பீட்டுத் தொகை (இவற்றில் எது குறைவோ)
2	பெரும் பழுது	ரூ.70,000/- அல்லது சரியான மதிப்பீட்டுத் தொகை (இவற்றில் எது குறைவோ)	ரூ.92,000/- அல்லது சரியான மதிப்பீட்டுத் தொகை (இவற்றில் எது குறைவோ)

சாய்தள கான்கிரீட் வீடுகளுக்கு

வ. எண்	பழுது நீக்கத்தின் வகை	அனுமதிக்கப்பட்ட அதிகபட்சத் தொகை	
		சமவெளிப் பகுதிகளுக்கு	மலைப்பகுதிகளுக்கு
1	சிறு பழுது	ரூ.55,000/- அல்லது சரியான மதிப்பீட்டுத் தொகை (இவற்றில் எது குறைவோ)	ரூ.72,000/- அல்லது சரியான மதிப்பீட்டுத் தொகை (இவற்றில் எது குறைவோ)
2	பெரும் பழுது	ரூ.1,50,000/- அல்லது சரியான மதிப்பீட்டுத் தொகை (இவற்றில் எது குறைவோ)	ரூ.1,85,000/- அல்லது சரியான மதிப்பீட்டுத் தொகை (இவற்றில் எது குறைவோ)

மாநில அளவிலான ஒற்றை ஒருங்கிணைப்பு வங்கிக் கணக்கிலிருந்து (STATE LEVEL SINGLE NODAL ACCOUNT) பயனாளிகள் மற்றும் பொருட்களை வழங்கும் விற்பனையாளர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக தொகை விடுவிக்கப்படும்.

3.4.3. புதிய சமத்துவபுரங்கள் அமைத்தல்

சமூக நீதியை மேம்படுத்தவும் தந்தை பெரியாரின் சமூக சமத்துவ கொள்கையை பரப்புவதுமே இத்திட்டத்தை செயல்படுத்துவதன் நோக்கமாகும்.

"பெரியார் நினைவு சமத்துவபுரம்" திட்டத்தின் கீழ் 2023–24 ஆம் ஆண்டில் எட்டு சமத்துவபுரங்கள் புதிதாகக் கட்டுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

3.4.3.1 முக்கிய அம்சங்கள்

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:–

- சமத்துவபுரம் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு 9 முதல் 10 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவப்படும்.

- ஒவ்வொரு சமத்துவபுரமும் 100 வீடுகளைக் கொண்டதாக இருக்கும் (ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவைக் கொண்டது),

- சமத்துவபுரத்தில் தேவைப்படும் பொது உட்கட்டமைப்புகளான சாலைகள், குடிநீர் வசதி, தெருவிளக்குகள், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான பொது விநியோகக் கடை, சமுதாயக்

கூடம், நூலகக் கட்டிடம், பள்ளிக் கட்டிடம், பள்ளிக் கழிவறை, அங்கன்வாடி, விளையாட்டு மைதானம் மற்றும் பூங்கா போன்றவையும் ஏற்படுத்தப்படும்.

- இது தவிர, சமத்துவபுர நுழைவாயில் வளைவு மற்றும் பெரியார் சிலை நிறுவப்படும்.

- ஆதிதிராவிடர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் இதரர் வகுப்பினருக்கு முறையே 40:25:25:10 என்ற விகிதத்தில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

3.4.3.2 நிதி ஒதுக்கீடு

இத்திட்டத்தின் கீழ், எட்டு புதிய சமத்துவபுரங்கள் கட்டுவதற்கு ரூ.50.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.4.3.3 புதிய சமத்துவபுரங்கள் அமைத்தல்

அரசாணையின்படி, கீழ்க்கண்ட 8 மாவட்டங்களில் புதிய சமத்துவபுரங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

அட்டவணை 3.1

கட்டப்பட்டு வரும் சமத்துவபுரங்களின் பட்டியல்

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	சட்டமன்ற தொகுதியின் பெயர்	ஊராட்சி ஒன்றியத்தின் பெயர்	ஊராட்சி மற்றும் குக்கிராமத்தின் பெயர்
1	கடலூர்	குறிஞ்சிப்பாடி	குறிஞ்சிப்பாடி	பூவாணி குப்பம்/ மேல்பூவாணி குப்பம்
2	தென்காசி	சங்கரன்கோயில்	மேலநீலித நல்லூர்	குருக்கள்பட்டி/ குருக்கள் பட்டி
3	புதுக்கோட்டை	திருமயம்	அரிமளம்	கடயக்குடி/ குறவர் காலணி
4	இராமநாதபுரம்	இராமநாதபுரம்	திருப்புல்லாணி	கொத்தக்கோட்டை/ வள்ளிமாடன் வலசை
5	திருவண்ணாமலை	செங்கம்	செங்கம்	பெரிய கொலப்பாடி/ சிப்காட் பின்புறம்

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	சட்டமன்ற தொகுதியின் பெயர்	ஊராட்சி ஒன்றியத்தின் பெயர்	ஊராட்சி மற்றும் குக்கிராமத்தின் பெயர்
6	விருதுநகர்	திருச்சுழி	திருச்சுழி	சென்னிலக்குடி/ சென்னிலக்குடி
7	திருச்சிராப்பள்ளி	துறையூர்	உப்பிலியாபுரம்	தளுகை / T.மங்கப்பட்டி புதூர்
8	திண்டுக்கல்	ஒட்டன்சத்திரம்	தொப்பம்பட்டி	கொழுமன் கொண்டான் / கொழுமன் கொண்டான்

முன்னேற்றத்தில் உள்ள அனைத்து சமத்துவபுரங்களும் 2025-26 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுவிடும்.

3.4.4. புயல் மற்றும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 7 மாவட்டங்களில் பழுதடைந்த வீடுகளை சீரமைத்தல் மற்றும் மீளக்கட்டுதல் – 2023

மிக்சாங் புயலின் தாக்கத்தினால் வீடுகளை இழந்த செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சார்ந்த ஊரக பகுதி ஏழை மக்களுக்கும் மற்றும் அதி கனமழை பெய்ததால்

பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களிலுள்ள ஊரக பகுதி ஏழை மக்களுக்கும் உடனடியாக உதவிடும் வகையில், முழுவதுமாக சேதமடைந்த வீடுகளை மீளக் கட்டும் பொருட்டு ஒரு வீட்டிற்கு தலா ரூ.4 இலட்சம் வழங்கிடவும். பகுதி சேதமடைந்த வீடுகளை சீரமைக்க தலா ரூ.2 இலட்சம் வரை வழங்கிடவும் அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 7 மாவட்டங்களில் மொத்தம் ரூ.168.14 கோடி மதிப்பீட்டில் பகுதியாக சேதமடைந்த 1,067 வீடுகளை சீரமைக்கவும் மற்றும் முழுமையாக சேதமடைந்த 3,599 வீடுகளை மீளகட்டுவதற்க்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3.4.5 இதர துறைகளின் வீட்டு வசதி திட்டங்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் வீட்டு வசதி திட்டங்கள்

தவிர, இத்துறையின் மூலம் சிறப்பு பிரிவினர்களான இலங்கை தமிழ் அகதிகள் மற்றும் பழங்குடியினருக்கு வீடுகள் கட்டப்பட்டு வருகிறது.

அ) இலங்கைத் தமிழர்களுக்கான வீட்டு வசதி திட்டம்

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறையின் மூலம் முதற்கட்டமாக, 19 மாவட்டங்களில் உள்ள 32 மறுவாழ்வு முகாம்களில் 3,510 வீடுகள் கட்டுவதற்கு ரூ.185.57 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனைத்து 3,510 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக, 15 மாவட்டங்களில் உள்ள 36 மறுவாழ்வு முகாம்களில் 3,919 வீடுகள் கட்டுவதற்கு ரூ.233.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில், 500 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 3,419 வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

ஆ) பழங்குடியினருக்கான வீடுகள்

பழங்குடியினர் நலத்துறையால் 2022–23 ஆம் ஆண்டில் 23 மாவட்டங்களில், 3,881 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 176.46 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட 3,881 வீடுகளில், 3,248 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு, மீதமுள்ள வீடுகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

3.5 சட்டமன்றஉறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MLACDS)

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 1997–98 ஆம் ஆண்டில் ஒரு தொகுதிக்கு ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் தொடங்கப்பட்டது.

3.5.1 திட்டத்தின் நோக்கம்

இந்தத் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் அந்தந்த சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள முக்கிய இடைவெளிகளை கண்டறிந்து, அவற்றுக்கான பணிகளை தேர்வு செய்வதற்கு உதவுகிறது. இத்திட்டம் தமிழக அரசால் முழுமையாக நிதியளிக்கப்படும் ஒரு திட்டம் ஆகும். இந்தத் திட்டம் மாநிலத்தின் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.

3.5.2 சிறப்பு அம்சங்கள்

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், ஒவ்வொரு ஆண்டும், உட்கட்டமைப்பு மேம்பாட்டில் சிறப்பு கவனம் செலுத்துவதற்காக, அத்தகைய பகுதிகளில் இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட மொத்த ஒதுக்கீட்டில் குறைந்தபட்சம் 22% (ஆதிதிராவிடர்–21%, பழங்குடியினர்–1%) ஆதிதிராவிடர் /பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வசிக்கும்

ஊரகப் பகுதிகள் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் வசிக்கும் குடிசைவாழ் மக்களுக்கான பணிகளை பரிந்துரை செய்தல் வேண்டும். ஏதேனும் குறிப்பிட்ட மாவட்டங்களில் பழங்குடியின மக்கள் தொகை இல்லாதபட்சத்தில், 22% மதிப்பிலான பணிகள் ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

3.5.3 நிதி ஒதுக்கீடு

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, ஒரு ஆண்டுக்கு மொத்த ஒதுக்கீடாக ரூ.702 கோடியை ஒவ்வொரு நிதியாண்டிற்கும் அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தற்போது, இத் திட்டத்தின் கீழ், மாநிலத்தின் 234 சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளுக்கு, ஒரு தொகுதிக்கு ரூ.3 கோடி வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

3.5.4 இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளின் வகைகள்

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒதுக்கப்பட்ட ரூ.3 கோடியில், சட்டமன்ற உறுப்பினர் தம் விருப்பத்தின் அடிப்படையில், முக்கியமானது என கண்டறியப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளைத் தேர்வு செய்யலாம். மேலும் ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் தனது விருப்பப்படி பின்வரும் இனங்களுக்கு முன்னுரிமை அளிக்கலாம் :–

- ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் புதிய கட்டிடங்கள்/வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு கழிப்பறை வசதிகள் ஏற்படுத்துதல், அரசுப் பள்ளிகளில் அங்கன்வாடி கட்டிடங்கள் /

அங்கன்வாடி குழந்தைநேய கழிப்பறைகள் மற்றும் மதிய உணவு மையங்கள் / மதிய உணவு சமையலறை கூடங்கள் கட்டுதல் மற்றும் பொது விநியோக கடை கட்டுதல்.

- அரசு தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல். ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுகல்லூரிகள், அரசு விடுதிகள், அரசு மருத்துவமனைகள், அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு தளவாடச் சாமன்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை ஆண்டிற்கு ரூ.25 லட்சத்திற்கு மிகாமல் வாங்குதல்.

- மாற்றுத்திறனாளிகளுக்கான கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.5 இலட்சம்

மதிப்பீட்டில் வாங்குதல், போலியோ மற்றும் முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு செரிபிரல் பால்சி (Cerebral Palsy) நாற்காலி வாங்குதல் மற்றும் அரசு சிறப்புப் பள்ளிகளில் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு கற்பிக்கும் கருவிகள் வாங்குதல்.

3.5.5 சாதனை

இந்தத் திட்டத்தின் கீழ் 2021–22 முதல் 2023–24 ஆம் ஆண்டு வரை மொத்தம் 28,956 பணிகள் ரூ.2,022.73 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளது.

2024–25 ஆம் ஆண்டில், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ரூ.702 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதன்படி இத்திட்டத்தின் கீழ் ரூ.608.67 கோடி மதிப்பீட்டில் 7,512 பணிகள் எடுக்கப்பட்டுள்ளது.

2025–26 ஆம் ஆண்டில், ரூ.702 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

3.6 நமக்கு நாமே திட்டம் (ஊரகம்)

மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் டாக்டர். கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் 1997–98 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் போது மக்களின் பங்கேற்புடன் பொது சொத்துக்களை உருவாக்குவதை ஊக்குவிக்க நமக்கு நாமே திட்டத்தினை அறிவித்தார்.

3.6.1 திட்டத்தின் நோக்கம்

ஊரக மக்களின் சுய உதவி மற்றும் தன்னம்பிக்கை மனப்பான்மையை ஊக்குவிப்பது மற்றும் வலுப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்தத்திட்டம் திட்டமிடுதலில் தொடங்கி வள ஆதாரங்களைத் திரட்டுதல், செயல்படுத்துதல், பராமரிப்பு நிலை வரை வளர்ச்சி செயல்பாட்டில் சமூகத்தை நேரடியாக ஈடுபடுத்துகிறது. மாநில அரசின் நிதி உதவியும், தொழில் நுட்ப ஆதரவும் மக்களுடைய செயல்பாடுகளுக்கு உறுதுணையாக

அமைகிறது. இத்திட்டம் மக்களுடைய அனைத்து தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு உரிய வழிவகுக்கிறது.

3.6.2 பொதுமக்கள் பங்கேற்பு

கண்டறியப்படும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் குறைந்தது மூன்றில் ஒரு பங்கு பொது மக்களின் பங்களிப்பு இருக்க வேண்டும். பட்டியல் இனத்தவர் (SC)/பழங்குடியினர் (ST) குடியிருப்புகளை பொறுத்தவரையில், பொதுமக்களின் பங்களிப்புத் தொகை, மதிப்பீட்டுத் தொகையில் குறைந்தது ஐந்தில் ஒரு பங்கு இருக்க வேண்டும்.

3.6.3 சிறப்பு அம்சங்கள்

தனிநபர்கள், குழுக்கள், அமைப்புகள், வணிக நிறுவனங்கள் அல்லது பொதுமக்கள் பணிகளுக்கான செலவில், குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கு பொது மக்கள் பங்களிப்பை அளித்து இந்தத் திட்டத்தின் கீழ் பணிகளை தேர்வு செய்யலாம். பொதுமக்களின்

பங்களிப்பு மதிப்பீட்டுத் தொகையில் 50% அல்லது அதற்கு மேல் இருந்தால், ஒப்பந்தப்புள்ளியின்றி பங்களிப்பாளரோ அல்லது நிறுவனமோ அப்பணியை செய்ய மாவட்ட ஆட்சித்தலைவர் அனுமதிக்கலாம்.

3.6.4 நிதி ஒதுக்கீடு

இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் அரசால் ரூ.100 கோடி ஒதுக்கீடுசெய்யப்படுகிறது.

2023–24 ஆம் ஆண்டில், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக கூடுதல் அரசு மானிய நிதியாக ரூ.50 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனால், 2023–24 ஆம் ஆண்டில் மொத்த ஒதுக்கீடு ரூ.150 கோடி ஆகும்.

3.6.5 இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளின் வகைகள்

- அரசு பள்ளிகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய பள்ளிகள், கள்ளர் சீரமைப்பு பள்ளிகள், அரசு கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகளுக்கு கட்டடங்கள், நவீன வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிவறைகள் கட்டுதல், மிதி வண்டி நிறுத்துமிடம் மற்றும் சுற்றுச்சுவர் / வேலி அமைத்தல், அரசு பள்ளிகள், அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் உள்விளையாட்டரங்கம் அமைத்தல் மற்றும் அரசால் நடத்தப்படும் பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் கட்டுதல்.
- அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், கால்நடை மருந்தகங்கள், கால்நடை வளர்ப்பு மையங்கள் மற்றும் நூலகங்கள்

ஆகியவற்றிற்கு சுற்றுச்சுவர் / வேலி அமைத்தல். மயானங்களுக்கு சுற்றுச்சுவர், இதர பொது வசதிகள் மேற்கொள்ளுதல், நூலகங்கள் கட்டுதல், ஊரக பகுதிகளில் சத்துணவு மையங்கள், அங்கன்வாடிகள், பள்ளி சமையற் கூடங்கள் மற்றும் பொது விநியோகக் கடைகள் ஆகியவற்றிற்கு கட்டடங்கள் கட்டுதல்.

- அரசு பள்ளிகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய பள்ளிகள், கள்ளர் சீரமைப்பு பள்ளிகளுக்கு பழுது நீக்கம்/புனரமைப்பு செய்தல் மற்றும் சத்துணவு மையங்களுக்கு பழுதுநீக்கம்/ புனரமைப்பு செய்தல்.
- ஊரக மற்றும் நகர்புறங்களுக்கு அருகில் உள்ள ஊரகப் பகுதிகளின் முக்கியப் பொது இடங்களில் மற்றும் சந்திப்புகளில் ஆற்றல் மிக்க விளக்குடன் சிறுகோபுர மின்விளக்குகள் அமைத்தல்.

- ஊரக பகுதிகளில் சமுதாய கட்டடங்கள், குடிநீர் வழங்குதல், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மற்றும் கதிரடிக்கும் களங்கள் போன்ற சமுதாயச் சொத்துக்களை உருவாக்குதல்.
- பாலங்கள், சிறிய பாலங்கள் கட்டுதல், சரளை/கப்பிச் சாலைகளை தார் சாலைகளாக தரம் உயர்த்துதல், பழுதடைந்த தார்சாலைகளை புதுப்பித்தல், தெருக்கள் மற்றும் சிறிய சந்துகளை பேவிங் கற்கள், பேவர்பிளாக் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் மூலம் மேம்படுத்துதல்.
- திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை தொடர்பான பணிகள் மற்றும் மின் வண்டிகள் வாங்குதல், குப்பைகளைப் பிரிக்கும் கொட்டகைகள் கட்டும் பணிகள் உள்ளிட்ட சுற்றுச்சூழல் சுகாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பான பணிகள்.

3.6.6 சாதனை

இத்திட்டத்தின் கீழ் 2021–22 ஆம் ஆண்டு முதல் 2023–24 ஆம் ஆண்டு வரை ரூ.500.60 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 5,582 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, இத் திட்டத்தின் கீழ் பொதுமக்கள் பங்களிப்பு தொகையாக ரூ.144.69 கோடி பெறப்பட்டுள்ளது.

2024–25 ஆம் ஆண்டில், இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக அரசு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்படி, இத்திட்டத்தின் கீழ் பொதுமக்கள் பங்களிப்புடன் ரூ.142.08 கோடி மதிப்பீட்டில் 986 பணிகள் எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2025–26 ஆம் ஆண்டில், தொடர்ந்து ஊரக பகுதிகளில் செயல்படுத்தப்படும்.

3.7 ஊரகச் சாலைகள்

ஊரகச் சாலைகளில் செய்யப்படும் முதலீட்டிற்கும், ஏழை மக்களின் நலனிற்கும் நேரடித் தொடர்பு உள்ளது. ஊரகச் சாலைகள் இணைப்பு மற்றும் அவற்றின் தரம் ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கான குறியீடாகும். சாலைகள், மக்கள் அறிவாற்றல் பெறுவதை பரவலாக்கி, ஏற்றத்தாழ்வுகளை களைந்திட வழிவகை செய்வதுடன், சமூக–பொருளாதாரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி, வளர்ச்சியினைத் துரிதப்படுத்துகிறது. ஊரகச் சாலைகளை மேம்படுத்துவது ஊரக வளர்ச்சித் துறையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

மேம்பட்ட சாலை இணைப்பு வசதி, கிராமப்புர மக்களின் வருமானத்தை உயர்த்துவதோடு மட்டுமின்றி, சுகாதாரம், கல்வி மற்றும் இதர சேவைகளைப் பெறுவதற்கும் வழிவகை செய்கிறது. சாலைகளின் உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து சேவைகளின் மேம்பாடு ஊரகப் பகுதிகளில் வணிக

செயல்திறனை அதிகப்படுத்தி, அதன் மூலமாக, இடுபொருள் செலவினை குறைத்து விவசாய உற்பத்தியினை அதிகப்படுத்துவதற்கும் ஊரக வளர்ச்சிக்கும் வழிவகுக்கிறது. எனவே, இந்த அரசு "முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் கிராமப்புர சாலைகளை மேம்படுத்த சிறப்பு கவனம் செலுத்தியுள்ளது. சாலைகள் தொடர்புடைய சில செயல்பாடுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

1. சாலை இணைப்பு வசதியில்லாத குக்கிராமங்களுக்கு சாலை இணைப்பு வசதி, வணிகச்சந்தைகள், வாரச்சந்தைகள், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் ஆகியவற்றை இணைக்கும் இணைப்புச் சாலைகள், பேருந்துகள் செல்லும் சாலைகள் மற்றும் உள் இணைப்புச் சாலைகள் ஆகியவற்றினை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்துதல்.

2. ஊரகப்பகுதிகளில் விடுபட்ட ஊரகச்சாலைகள் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட சாலைகளை ஊரகச் சாலைகள் தொகுப்பில் சேர்த்து ஊரகச் சாலைகளின் அடிப்படை விவரங்களை ஒருங்கிணைத்தல், மேலும் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளுக்கு எண்ணெழுத்து இனவாரியான தனி சாலைக் குறியீடு (Road code) வழங்குதல்.

3. கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் மேம்பாட்டிற்கான மாநில மற்றும் ஒன்றிய திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீட்டை அதிகரித்தல்.

4. பல்வேறு பசுமை மற்றும் மாற்று தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சாலைகள் அமைத்தல்.

ஊரகச் சாலைகளின் தொடர் வளர்ச்சி மற்றும் மாற்றத்தை கருத்தில் கொண்டு, கிராம ஊராட்சி

மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் விவரங்கள் தொடர்ந்து புதுப்பிக்கப்படுகின்றன. கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் மேம்படுத்தப்பட்ட முழுமையான தகவல்கள் www.tnrd.tn.gov.in என்ற இணையதளத்தில் உள்ளது. கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் தற்போதைய நிலை குறித்து விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

அட்டவணை 3.2
ஊரக சாலைகளின் தகவமைப்பு

வ. எண்	சாலை மேற்பரப்பின் வகை	கிராம ஊராட்சி சாலைகள்	ஊராட்சி ஒன்றிய சாலைகள்	மொத்தம்
		நீளம் (கி.மீ)		
1	தார்ச்சாலை	74,813	22,684	97,497
2	சிமெண்ட்சாலை	3,347	387	3,734
3	ஈரடுக்குகப்பிச்சாலை	1,472	68	1,540
4	ஓரடுக்குகப்பிச்சாலை	9,944	305	10,249
5	சரளைக்கல்சாலை	2,570	66	2,636
6	மண்சாலை	24,377	737	25,114
	மொத்தம்	**1,16,523**	**24,247**	**1,40,770**

2024–25 ஆம் ஆண்டில், 177 கி.மீ நீளமுள்ள மண் சாலைகள் தார்ச் சாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

ஊரகச் சாலைகளின் மேம்பாட்டிற்காக தேவைப்படும் நிதி, முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (MGSMT), நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (NABARD), பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் (PMGSY), கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொது நிதி மற்றும் இதர மாநில திட்டங்களின் மூலம் பெறப்படுகிறது.

அட்டவணை 3.3

கடந்த 4 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்கள் விவரங்கள்

வ. எண்	திட்டங்கள்	சாலைகள்			பாலங்கள்	
		எண்ணிக்கை	நீளம் (கிமீ)	தொகை (ரூ. கோடியில்)	எண்ணிக்கை	தொகை (ரூ. கோடியில்)
1.	முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்	9,421	12,088.00	5,000.00	–	–
2.	நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி	1,033	2,004.73	1,287.44	342	1,129.19
3.	பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்	935	4,122.82	2,692.29	83	320.97
4.	மாநில சிறப்பு நிதி	–	–	–	34	177.85
5.	நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளில் சாலை மேம்பாடு	2,547	708.49	390.24	–	–
6.	தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்	1,360	1,990.00	627.23	–	–
மொத்தம்		**15,296**	**20,914.04**	**9,997.20**	**459**	**1,628.01**

3.7.1 முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

"முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்" என்ற புதிய திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தி, 2022–23 மற்றும் 2023–24 ஆகிய ஆண்டுகளில் 10,000 கி.மீ நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சி சாலைகள் மேம்பாடு செய்ய ரூ.4,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சி சாலைகளை மேம்படுத்துதல்/ வலுப்படுத்துதல்/ பராமரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 2024–25 மற்றும் 2025–26 ஆகிய இரண்டு ஆண்டுகளில், மேலும் 10,000 கி.மீ நீளமுள்ள ஊரகச் சாலைகள் ரூ.4,000 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

3.7.1.1 முன்னுரிமை

பேருந்துகள் செல்லும் சாலைகள், ஒற்றை இணைப்பு கொண்ட குக்கிராமங்கள், தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை மற்றும் முக்கிய மாவட்ட சாலைகளை இணைக்கும் சாலைகள், முக்கிய சுற்றுலா தலங்கள், புனித தலங்கள் மற்றும் பாரம்பரிய இடங்கள், சமூக பொருளாதார முக்கியத்துவமுள்ள இடங்களை இணைக்கும் சாலைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

3.7.1.2 முக்கிய அம்சங்கள்

- சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளாக தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, மாவட்டத்தின் முக்கிய சாலைகளுடன் இணைப்பு சாலைகள் இணையும் இடத்தில், சாலைகளுக்கான சந்திப்பு மேம்பாடு (**Intersection Improvement**) மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் விபத்து நடக்கும் இடங்கள், கரும்புள்ளிப்

பகுதிகள், பாதுகாப்பற்ற புவியமைப்பு கொண்ட சாலைகளில், வேகத்தடைகள், பாதுகாப்புத் தடைகள் பிரதிபலிப்பு குறியீடுகள் உள்ளிட்ட சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- தார் சாலையின் மேற்பரப்பின் மீது பிரதிபலிப்பு கண்ணாடி மணிகளுடன் (reflect rising glass beads) கூடிய வெப்ப நெகிழி சேர்மம் (Thermoplastic compound) அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்படும் சாலைகள், தனிப்பட்ட, மாநில தரக் கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு முகமைகள் மூலமாக ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

அட்டவணை 3.4
முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள சாலைகள்

வருடம்	எண்ணிக்கை	நீளம் (கி. மீ)	தொகை (ரூ. கோடியில்)
2022–23 & 2023–24	7,458	9,653	4,000
2024–25	2,709	3,888	1,805
மொத்தம்	**10,167**	**13,541**	**5,805**

2024–25 ஆம் ஆண்டில், முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு நபார்டு கடன் உதவி ரூ.805 கோடி உட்பட மொத்தம் ரூ.1,805 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதுபோன்றே, 2025–26 ஆம் ஆண்டிற்கு, 6,112 கி.மீ நீளமுள்ள சாலைகள் ரூ.2,557 கோடி மதிப்பீட்டில் முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எடுக்கப்படும். இதில் ரூ.1,195 கோடி நபார்டு கடன் உதவியாக பெறப்படும்.

3.7.2 நபார்டு– ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (NABARD –RIDF)

ஊரக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்பாடு செய்வதில் மாநில அரசுகளுக்கு உதவிடும் வகையில், மாநில அரசுகள் செயல்படுத்தும் ஊரக உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி வழங்கிட நபார்டு வங்கியின் கீழ், "ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி" யினை ஒன்றிய அரசு அறிவித்தது. இத்திட்டத்திற்கு தேவைப்படும் மொத்த நிதியில், 20% மாநில அரசால் நேரடியாகவும், மீதமுள்ள 80% மாநில அரசால் நபார்டு வங்கியின் கடனாகவும் பெறப்படுகிறது.

ஊரகப் பகுதிகளில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் மிகவும் பழுதடைந்த தார்ச்சாலைகளை மேம்படுத்துதல், தார் இடப்படாத சாலைகளை தேவையின் அடிப்படையில் தார்ச் சாலைகளாக தரம் உயர்த்துதல் மற்றும் பாலங்கள் அமைத்தல் மூலம் ஊரக பகுதிகளில் அனைத்து பருவ

காலங்களிலும் பயன்படும் வகையில் சாலைகள் அமைப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

- சாலை வசதி இல்லாத குக்கிராமங்களை இணைக்கும் வகையிலான சாலைகள், பேருந்துகள்/சிற்றுந்துகள் செல்லும் சாலைகள், விவசாயத்திற்குப் பயன்படும் சாலைகள், தொழில் மற்றும் வணிக மையங்களுக்குச் செல்லும் சாலைகள், சுற்றுலா பகுதிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்லும் சாலைகள், மருத்துவமனை, பள்ளி மற்றும் இதர சேவைகளை இணைக்கும் சாலைகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.
- குறைந்தபட்சம் 1 கி.மீ நீளமுள்ள சாலைகள் இத்திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2006–07 முதல் 2023–24 ஆம் ஆண்டுவரை, 19,615 கிமீ நீளத்திற்கு 8,433 சாலைகள் மற்றும் 659 உயர்மட்டப் பாலங்கள் ரூ.5,271 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் 2024–25 ஆம் ஆண்டில், நபார்டு RIDF XXX–ன் கீழ் ரூ.863 கோடி மதிப்பீட்டில் 1,452.97 கி.மீ நீளத்திற்கு 746 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2025–26 ஆம் ஆண்டில், 2,400 கி.மீ நீளமுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் ரூ.1,195 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

3.7.3 நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளின் சாலை மேம்பாடு

நகரங்கள் மற்றும் பேரூராட்சி பகுதியிலிருந்து 5 கி.மீ சுற்றளவில் உள்ள ஊராட்சிகளில் அதிக மக்கள் தொகையின் காரணமாக, அவ்வூராட்சிகளில் உள்ள

சாலைகள், தெருக்கள் மற்றும் சந்துகளின் பயன்பாடுகள் அதிகரித்துள்ளன. சமூக மற்றும் அன்றாட வாழ்வின் பல்வேறு அம்சங்களுக்கு இந்த சாலைகள், தெருக்கள் மற்றும் சந்துகள் முக்கிய பங்களிப்பதால், இவற்றை மேம்பாடு செய்வதின் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது.

தமிழ்நாடு அரசு 690 கிராம ஊராட்சிகளை, நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளாக அடையாளம் கண்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, 2023-24 ஆம் ஆண்டில் 708.49 கி.மீ நீளமுள்ள 2,547 சாலைகள், தெருக்கள் மற்றும் சந்துகளை மேம்படுத்துவதற்காக ரூ.390.24 கோடி நிதியை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (CMDA), உட்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி நிதி (I&AF) மற்றும் உள்ளூர் திட்டமிடல் குழுமம் (LPA) ஆகியவற்றிலிருந்து ஒருங்கிணைத்து பெற அனுமதியளித்துள்ளது.

அட்டவணை 3.5
நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளின் சாலை மேம்பாடு

அனுமதிக்கப்பட்ட வருடம்	சாலைகளின் எண்ணிக்கை	நீளம் கி.மீ	தொகை (ரூ.கோடி)
2023-24	2547	708.49	390.24

3.7.4 வெள்ள சீரமைப்புப் பணிகள்

2023 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையின் போது, மிக்சாங் என பெயரிடப்பட்ட வெப்பமண்டல சூறாவளி, தமிழ்நாட்டின் வடகடலோர பகுதிகளில் கனமழையை ஏற்படுத்தியது. இதேபோல், தாமிரபரணி ஆற்றில் இருந்து வந்த அதிக உபரி நீருடன் பெய்த தொடர் கனமழையால் தென் கடலோர மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட இயற்கை சீற்றங்களால் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கடும் சேதங்கள் ஏற்பட்டன. வெள்ள

நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்வதற்காகவும், மேற்கண்ட 7 மாவட்டங்களில் பாதிப்படைந்த பகுதிகளில் உடனடி நிவாரண உதவிகளை மேற்கொள்ளவும் ஊரக சாலைகளில் தற்காலிக சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில், கடுமையாக சேதமடைந்த 981 சாலைகள் நிரந்தர சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ. 175.71 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

3.7.5 உயர்மட்ட பாலங்கள் கட்டுமானத்திற்கான மாநில சிறப்பு நிதி உதவி

2024–25 ஆம் ஆண்டில், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம் மூலம் பெறப்பட்ட உயர்மட்ட பாலங்கள் கட்டுமானத்திற்கான கோரிக்கைகள், நீண்ட நாள் நிலுவையில் உள்ள கோரிக்கைகள் மற்றும் மழை வெள்ளம் பாதித்த பகுதிகளுக்கு அனைத்து

காலங்களுக்கும் பயன்படக்கூடிய இணைப்புச் சாலைகள் அமைத்தல் ஆகிய கோரிக்கைகளை கருத்தில் கொண்டு 18 மாவட்டங்களில் 34 உயர்மட்ட பாலங்கள் அமைப்பதற்கு ரூ.177.85 கோடி மாநில சிறப்பு நிதியின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

3.8 பள்ளி உட்கட்டமைப்பு – குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CFSIDS)

பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு பல்வேறு நலத்திட்டங்களையும் நடவடிக்கைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் விளைவாக அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகரித்துள்ளது.

மாநிலத்தில் 22,249 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் (PUPS) மற்றும் 6,316 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் (PUMS) உள்ளன. மேற்கண்ட பள்ளி கட்டடங்களின் உட்கட்டமைப்பு

மேம்பாடு மற்றும் பராமரிப்பு அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

3.8.1 திட்டத்தின் நோக்கம்

புதிய வகுப்பறைகளின் தேவைக்கான இடைவெளியைக் குறைக்க, கிராமப்புறங்களில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் புதிய/கூடுதல் குழந்தை நேய வகுப்பறை கட்டிடங்களைக் கட்டுவதற்காக, 2022–23 ஆம் ஆண்டில், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை (CFSIDS) அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

3.8.2 ஏற்படுத்தப்பட வேண்டிய வசதிகள்

கீழ்கண்ட வசதிகள் வகுப்பறைகளில் ஏற்படுத்தி தர வேண்டும்:–

- தரையின் மேற்பரப்பிலிருந்து மேற்கூரையின் அடிப்பகுதி வரை எந்தப் புள்ளியிலும்

வகுப்பறையின் உயரம் 3.30 மீட்டருக்குக் குறைவாக இருக்கக்கூடாது.

- எதிர்காலத்தில் திறன்மிகு வகுப்பறையை செயல்படுத்த தேவையான ஏற்பாடுகள் செய்தல்.
- மாணவர்களின் பதிவேடுகள், மாணவர்களின் செயல்பாட்டு திறன்களால் உருவாக்கப்பட்ட பொருட்கள் மற்றும் நூலக புத்தகங்கள் வைப்பதற்கு தேவையான நெகிழ்கதவுடன் கூடிய அலமாரிகள் வழங்க வேண்டும். பின்பக்கம் அலுமினியத்தகடு மற்றும் காந்த சக்தியுடைய பீங்கான் பச்சை எழுத்துப் பலகை வழங்க வேண்டும்.
- கற்றலுக்கு ஒரு கருவியாக உள்ள ஓவியங்களை (BaLA) வகுப்பறையின் நீண்ட சுவர், குறுகிய சுவர் மற்றும் மேற்கூரை ஆகியவற்றில் நீர் கலந்த நெகிழி வண்ணப்பூச்சுடன் வரைந்திடலாம். தரைகளில்,

சறுக்குவதைத் தடுக்கும் வகையான ஷாஹாபாத் கற்கள்/கோட்டா கற்கள் பதிக்கப்படும்.

- மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள பள்ளிகளில் வெப்ப எதிர்ப்பு மற்றும் ஒலி காப்புக்காக பாலி யூரிதீன் நுரை பலகை (PUF Panel) கூரையை முன்மொழியலாம்.
- விளக்குகள், மின்விசிறிகள், பிளக் பாயிண்ட்டுகள் ஏற்படுத்தப்படும். பள்ளி கட்டிடம்/ கழிப்பறைகளில், உள்நுழைவு/ வெளியேறும் இடங்களில் கைப்பிடி வசதிகளுடன் கூடிய சாய்வுதளம் ஏற்படுத்தப்படும் மற்றும் மழைநீர் சேகரிப்பு (RWH) கட்டமைப்பு ஏற்படுத்தப்படும்.

3.8.3 சாதனை

இந்தத் திட்டத்தின் கீழ் 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டுகளில் ரூ.1008.71 கோடி மதிப்பீட்டில், மொத்தம் 3,109 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

2024–25 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ.168 கோடி மதிப்பீட்டில் 568 புதிய மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

3.9 பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம் 2021–22 ஆம் ஆண்டில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு, கிராமப்புறங்களில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க (PUPS) மற்றும் நடுநிலைப் (PUMS) பள்ளிகளில் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை பராமரித்தல் மற்றும் புனரமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

3.9.1 திட்டத்தின் நோக்கம்

கிராமப்புறங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதையும், வகுப்பறை கட்டிடங்கள், சமையல்

கூடங்கள், கழிப்பறை வசதி மற்றும் குடிநீர் வசதி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளைப் பராமரிப்பதையும், புனரமைப்பதையும் உறுதி செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

3.9.2 மேற்கொள்ளப்பட வேண்டிய பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகளின் வகைகள்

அ. ஏற்கனவே உள்ள பள்ளி வகுப்பறை பழுதுபார்ப்பு

- அனைத்து கட்டிடங்களிலும் உள்ள சாய்வுதளம், படிக்கட்டுகள் மற்றும் கைப்பிடிகளை பழுதுபார்த்தல்/ புதிதாக அமைத்தல்/ மாற்றுதல், பழுதடைந்த கான்கிரீட் கூரைகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை பழுதுபார்த்தல், மின்கம்பிகள், மின் உபகரணங்கள், வயரிங் ஆகியவற்றை பழுதுபார்த்தல்/ மாற்றி அமைத்தல், வகுப்பறைகளை, எதிர்காலத்தில் நுண் திறன் வகுப்பறைகளாக மேம்படுத்த தேவைப்படும் வசதிகளை செய்தல்.

- கரும் பலகைகளுக்கு வண்ணம் பூசுதல், பின்பக்கம் அலுமினியத் தகடு பொருத்தப்பட்ட காந்த சக்தியுடைய பீங்கான் பச்சை எழுத்துப் பலகை அமைத்தல்.
- கட்டிடங்களின் உட்புறங்களில் எண்ணெய் கலந்த வண்ணங்களும் வெளிப்புறத்தில் எமல்ஷன் வண்ணங்களும் அடித்தல்.

ஆ. ஏற்கனவே உள்ள சமையல் கூடங்களை பழுதுபார்த்தல்

ஏற்கனவே உள்ள சமையற்கூடங்கள் பழுதுபார்த்து புதுப்பிக்கலாம்.

இ. ஏற்கனவே உள்ள கழிப்பறைகளைப் பழுதுபார்த்தல்

- பள்ளிக் கழிப்பறைகளின் கான்கிரீட் கூரை, சுவர், தரை, வடிகால்கள், கழிப்பறை கோப்பை, கை கழுவும் தொட்டிகள், கழிவுநீர்த் தொட்டிகள் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள பழுதுகளை

பழுதுநீக்கம்/ புனரமைப்பு செய்யப்படும். தரையில் வழுக்காத தரை ஓடுகள் (Anti–Skid) பதிக்கப்படும்.

- கழிப்பறைகளில் குழாய் அல்லது தண்ணீர் சேமிப்பு தொட்டி அமைத்து தண்ணீர் வசதி ஏற்படுத்துதல் மற்றும் கழிப்பறைகளுக்கு வெள்ளை/ வர்ணம் பூசுதல்.

ஈ. ஏற்கனவே உள்ள குடிநீர் வசதி அமைப்புகளை பழுதுநீக்கம் செய்யும் பணிகள்

- குடிநீர் வசதி அமைப்புகள் பழுதடைந்திருப்பின், அவற்றை பழுதுபார்க்கலாம். ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் உள்ள அனைத்து கழிப்பறைகளிலும் தண்ணீர் வசதி ஏற்படுத்துதல்.
- புதிய குடிநீர் இணைப்பு வழங்குதல்.

3.9.3 சாதனை

இத்திட்டத்தின் கீழ் 2021–22 முதல் 2023–24 ஆம் நிதியாண்டு வரை மொத்தம் 21,478 பழுது மற்றும்

புனரமைத்தல் பணிகள் ரூ.380.28 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2024–25 ஆம் ஆண்டில், AGAMT–II கிராமங்களில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ரூ.60 கோடி மதிப்பீட்டில் 2,829 பழுது மற்றும் புனரமைத்தல் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

3.10 ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டகூறு நிதி (SCPAR)

2007–08 ஆம் ஆண்டிலிருந்து முத்திரைத் தாள் கட்டணத்துடன் வசூலிக்கப்படும் மிகுவரி மற்றும் கேளிக்கை வரி ஆகிய ஒப்படைக்கப்பட்ட வரிவருவாய் இனங்களை மாநில அளவில் ஒருங்கிணைத்து அதன் ஒருபகுதி ஊராட்சிகளுக்கும் மீதமுள்ள பகுதி அரசின் முதன்மைத் திட்டங்களுக்கும் பயன்படுத்திட அரசு உத்தரவுகளை பிறப்பித்து வருகிறது. சரக்கு மற்றும்

சேவை வரி விதிக்கப்பட்டதன் காரணமாக, கேளிக்கை வரி முழுவதுமாக நீக்கம் செய்யப்பட்டது.

மொத்த ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பங்கு (1/3) கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. மீதமுள்ள மூன்றில் இரண்டு பங்கு (2/3) கிராமப்புறங்களில் முன்னுரிமை திட்டங்களுக்கு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டகூறு நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாக கட்டடங்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்கள், எரிவாயு தகன மேடை, சாலைகள், பாலங்கள், பேருந்து நிலையங்கள், மகாகவி பாரதியார் வாழ்வாதார பூங்கா போன்ற பணிகள் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2021–22 ஆம் ஆண்டிலிருந்து, 175 உட்கட்டமைப்பு பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதில் 98 ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்கள் மற்றும் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட கிராம ஊராட்சிகளில் சமத்துவம் என்ற கருத்தை நிறுவ உதவும் வகையில் 22 எரிவாயு தகன பணிகளும் இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியின் கீழ், மொத்தம் 874 வாகனங்கள் ரூ.79.75 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

3.11 பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் உட்கட்டமைப்பு திட்டங்கள்

அயோத்தி தாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளான, குடிநீர் வழங்குதல், தெரு விளக்குகள் அமைத்தல், இணைப்புச் சாலைகள் / தெருக்களை மேம்படுத்துதல், பொது கழிப்பறை, மயானத்தில் எரிமேடை / காத்திருப்போர் கூடம், எரிமேடைக்கு அணுகு சாலை, விளையாட்டு மைதானங்கள் மேம்பாடு செய்தல் போன்ற பணிகளை செய்வதற்காக நிதியை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு வழங்குகிறது. ஏற்கனவே உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்திற்கான

குக்கிராமங்கள் ஆதி திராவிடர் மக்கள்தொகை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2023-24 ஆம் ஆண்டில் மொத்தம் 1322 பணிகளும் மற்றும் 2024-25 ஆம் ஆண்டில் 1609 பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்திற்காக 2024-25 ஆம் ஆண்டிற்கு ரூ.115.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. ஒன்றிய அரசு பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

4.1 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS)

4.1.1. தமிழ் நாட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட செயல்பாடு

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் 02.02.2006 அன்று தொடங்கப்பட்டது. ஒவ்வொரு நிதியாண்டிலும் ஊரகப் பகுதிகளில் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பினை அளிப்பதற்கு உறுதி செய்கிறது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் கீழ்க்குறிப்பிட்டவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

1. ஒவ்வொரு நிதியாண்டிலும், ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர்

உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலை வாய்ப்பினை அளிப்பதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட தரமான மற்றும் நிலையான சொத்துக்களை உருவாக்குதல்.

2. ஏழை மக்களின் வாழ்வாதாரத்திற்கான அடிப்படை வளத்தை வலுப்படுத்துதல்.

3. சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்குவதை உறுதி செய்தல்.

4. ஊராட்சி அமைப்புகளை வலுப்படுத்துதல்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் முதற்கட்டமாக 02.02.2006 முதல் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை ஆகிய ஆறு மாவட்டங்களில் தொடங்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாக தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி மற்றும் கரூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் தொடங்கப்பட்டது.

இத்திட்டம் 01.04.2008 முதல், தமிழகத்தின் இதர மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

4.1.2. திட்டத்தின் சிறப்பம்சங்கள்

1. பத்து முக்கியச் சட்ட உரிமைகள் பின்வருமாறு: –

1) வேலை அட்டை பெறுவதற்கான உரிமை.

2) வேலை கோரி பதினைந்து தினங்களுக்குள் வேலை பெறுதலுக்கான உரிமை.

3) வேலையில்லாப்படி பெறுவதற்கான உரிமை.

4) தேவையான பணிகளைத் திட்டமிடவும், பணித்தொகுப்பு தயாரித்தலுக்கான உரிமை.

5) 5 கி.மீ. தொலைவிற்குள் வேலை பெறுதலுக்கான உரிமை.

6) பணித்தளத்தில் அடிப்படை வசதிகள் பெறுவதற்கான உரிமை.

7) அறிவிக்கப்பட்ட ஊதியம் பெறுவதற்கான உரிமை.

8) பதினைந்து தினங்களுக்குள் ஊதியம் பெறுவதற்கான உரிமை.

9) காலங்கடந்து ஊதியத் தொகை வழங்கினால் இழப்பீடு பெறுவதற்கான உரிமை.

10) குறித்த காலத்திற்குள் குறைகள் மீது தீர்வு காணல் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட அனைத்து செலவுகள் மீது தொடர் சமூகத்தணிக்கை மேற்கொள்ளுதல்.

2. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் "பணி வாரம்" என்பது ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை வேலை ஆரம்பித்து அடுத்த புதன்கிழமை வரை வேலை

நடைபெறுவதாகும். ஊராட்சிகளுக்குள் அமைந்துள்ள தொகுப்புகளில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3. திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் ஊரக விலைப் பட்டியலின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் திருத்திய அட்டவணை–1–ன்படி திறன்சாரா தொழிலாளர்களுக்கான விலைப்பட்டியலின் படியான ஊதியமானது, ஓர் வயது வந்த நபர், ஒரு மணி நேரம் உணவு இடைவேளையுடன் கூடிய எட்டு மணி நேர வேலைக்கு பெறக்கூடியதற்கு (அதாவது ஏழு மணி நேர செயல் விளைவுடைய வேலை) சமமாக நிர்ணயிக்கப்படுகிறது.

4. மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்பு ஊரக விலைப்புள்ளி பட்டியலைப் பின்பற்றி அரசாணை வெளியிடப்பட்டு முறையாக

பின்பற்றப்படுகிறது. இவ்வரசாணையில் மாற்றுத்திறனாளிகளுக்கென மண் வேலை தொடர்பான அல்லது இதர சிறப்பு பணிகள் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

5. ஒப்பந்ததாரர்கள் மற்றும் உடல் உழைப்பை தவிர்க்கும் இயந்திரங்களுக்கு அனுமதி இல்லை.

6. அனைத்து கட்டுமானப் பணிகளிலும் தொழிலாளர் ஊதியக்கூறிற்கு ஊரக விலைப் பட்டியலையும், பொருள் செலவினக்கூறு மற்றும் திறன்சார் தொழிலாளர் ஊதியத்திற்கும் பொதுப் பணித்துறை விலைப்பட்டியலையும் கட்டாயமாக பின்பற்ற வேண்டும்.

7. குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் வேலைக்கு விண்ணப்பிக்கவும், அவ்வேலையினைப் பெறுவதற்கும், வேலை அட்டையினைப் பெறுவதற்கும் உரிமைப்

பெற்றுள்ளனர். வேலை அட்டை ஒவ்வொரு ஐந்து ஆண்டிற்கும் ஒரு முறை புதுப்பிக்கப்படுகிறது. 01.04.2022–லிருந்து ஐந்து வருடங்களுக்குச் செல்லத்தக்க புதிய வேலை அட்டைகள் 100 சதவீத சரிபார்ப்பிற்குப் பின் தொடர்ந்து பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

8. 2017–18 ஆம் ஆண்டிலிருந்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள 12,524 கிராம ஊராட்சிகளிலும் மின்னணு வருகைப்பதிவேடு (e–MR) பயன்படுத்தப்பட்டு வருகிறது.

9. தமிழ்நாட்டிற்கு, 1.4.2024 முதல் ஆண்கள் மற்றும் பெண்கள் என்ற வேறுபாடின்றி நாளொன்றுக்கு ஊதியம் ரூ.319 என திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

10. பணித்தளம் 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருக்கும் பட்சத்தில், ஊதியத்தில் 10 விழுக்காடு கூடுதலாக வழங்கப்படும். இருப்பினும், தமிழ்நாட்டில் வேலை நடைபெறும் இடம் 2 கி.மீ. சுற்றளவிற்குள் இருக்குமாறு பணிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

11. பணித்தளத்தில் குடிநீர், முதலுதவிப்பெட்டி, நிழற்கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்படுகிறது.

12. கிராம சபையில் "கிராம சமூகத் தணிக்கையாளர்கள்" அதாவது மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களிலிருந்து பயிற்சி பெற்ற கிராம வள நபர்கள் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப்பணிகள் சமூகத்தணிக்கை செய்யப்படுகின்றன.

13. கிராம சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும், மகாத்மா காந்தி தேசிய ஊரக

வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அந்தந்த கிராம ஊராட்சிகளில் எடுத்து செய்ய இருக்கும் பணிகளின் தொகுப்பு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பணிகளை தேர்வு செய்வதற்கும் அனைத்து தொழிலாளர்களுக்கும் உரிமை உள்ளது.

14. வேலை நடைபெறும் அனைத்து இடங்களிலும் வேலையின் பெயர், அனுமதிக்கப்பட்ட தொகை, பணிநடைபெற்ற காலம் போன்ற விவரங்களுடன் கூடிய குடிமக்களுக்கான தகவல் பலகை வைக்கப்படுகிறது.

15. 2024–25ம் ஆண்டில், இதுவரை ஊரக பகுதிகளில் உள்ள 64.59 இலட்சம் குடும்பங்களில் உள்ள 73.32 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது.

4.1.3. நிதி விடுவிப்பு

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான நிதி மூன்று முக்கிய கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியக்கூறு (100% ஒன்றிய அரசு)
2. கட்டுமான பொருட்கள் மற்றும் பணிகளுக்கான பொருட்கூறு (75% ஒன்றிய அரசு மற்றும் 25% மாநில அரசு)
3. ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்கான நிர்வாக செலவினக்கூறு (100% ஒன்றிய அரசு)

திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி மொத்த செலவினத்தில் பொருட்கூறுக்கான செலவினம் 40%க்கு மேல் மேற்கொள்ளப்படக்கூடாது.

4.1.4. தொழிலாளர் வரவு செலவு மதிப்பீடு

(அ) 2024–25: தொழிலாளர் வரவு செலவுத் திட்டத்தில் முதலில் 20 கோடி மனித சக்தி நாட்கள் அங்கீகரிக்கப்பட்டது. எனினும், திட்டத்திற்கு கிடைக்கப்பெற்ற சிறந்த வரவேற்பினால், 12.03.2025 ஆம் தேதி வரை, 29.93 கோடி மனித சக்தி நாட்கள் மொத்த செலவினமான ரூ.10,528.19 கோடியில் எய்தப்பட்டுள்ளது. கூடுதலாக 20 கோடி மனித சக்தி நாட்கள் கோரி ஒன்றிய அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டு நிலுவையில் உள்ளது. ஊதிய நிலுவை ரூ.2,839 கோடிக்கும் அதிகமாகவும் மற்றும் பொருட்கூறு நிலுவை ரூ.957 கோடிக்கும் அதிகமாகவும் இன்னும் விடுவிக்கப்படவேண்டும். தமிழ்நாட்டிற்கு 12.3.2025ம் தேதி வரை மொத்தமாக ரூ.3,796 கோடிக்கும் அதிகமாக நிலுவை உள்ளது

(ஆ) 2025 – 26: ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் "கீழிருந்து மேற்செல்" அணுகுமுறையில் 35 கோடி மனித சக்தி நாட்களுக்கான தொழிலாளர் வரவு செலவு திட்டம் இறுதி செய்யப்பட்டது. தொகுப்பு வாரியான தேவைகளின் அடிப்படையில் 2025–26–ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் வரவு செலவு திட்டம் இறுதி செய்யப்பட்டன. 2025–26–ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் வரவு செலவு திட்ட கூட்டம் ஒன்றிய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தினால் 18.02.2025 அன்று நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் 2025–26–ஆம் ஆண்டிற்கு தற்போதைக்கு 12 கோடி மனித சக்தி நாட்கள் தமிழ்நாட்டிற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

4.1.5 குறித்த காலத்திற்குள் வங்கிகள் மூலம் ஊதியம் வழங்குதல்

2024–25–ஆம் நிதியாண்டில் 100 சதவிகித ஊதியத் தொகை தொழிலாளர்களுக்கு பதினைந்து நாட்களுக்குள் வழங்கப்பட்டுள்ளது. குறித்த காலத்திற்குள் ஊதியம் வழங்குதலை நிலை I (T+8)

ஆகவும் மற்றும் நிலை II என்பது (T+15) எனவும் திருத்தி வரையறுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் ஊதியத்தொகை 100 விழுக்காடு அவர்களது வங்கிக்கணக்குகளில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அனைத்து பரிவர்த்தனைகளும் தேசிய மின்னணு நிதி மேலாண்மை முறை(Ne–FMS) மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

4.1.6 அனுமதிக்கப்பட்ட பணிகள்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச்சட்டம் அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியலை மூன்று பிரிவுகளின் கீழ் வழங்குகிறது. அட்டவணை–1ல் குறிப்பிட்டுள்ள பல்வேறு பணிகளை அடிப்படையாகக் கொண்டு, மேலாண்மை தகவல் மைய அமைப்பு மூலம் இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட 266 பணிகளில் 58 பணிகள்

இயற்கை வள மேலாண்மைப் பணிகளாகும். 150 பணிகள் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த பணிகளாகும். 58 பணிகள் ஊரக உட்கட்டமைப்பு பணிகள் ஆகும்.

4.1.6.1 இயற்கை வள மேலாண்மை பணிகள்/விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த செயல்பாடுகள்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் வறட்சி தடுப்பு நடவடிக்கைகளான காடுகள் வளர்த்தல், நிழற்தரும் மரக்கன்றுகள் நடுதல் போன்ற இயற்கை வள மேலாண்மை பணிகளிலும் மற்றும் தடுப்பணைகள், மீள் நிரப்பு குழிகள், கசிவு நீர்க்குட்டைகள், அகழிகள், உறிஞ்சுக்குழிகள். பண்ணைக்குட்டைகள் போன்ற செயற்கை மீள் நிரப்பு கட்டமைப்பு பணிகளிலும் கவனம் செலுத்தப்படுகிறது. மேலும், வரத்துக்கால்வாய்களை தூர் வாருதல் மற்றும்

பாரம்பரிய நீர்நிலைகள் புனரமைத்தல் போன்ற மேற்பரப்பு நீராதாரத்தின் கொள்ளளவினை அதிகரிக்கும் பணிகளுக்கும் அனுமதியளிக்கப் –பட்டுள்ளன.

நீர் பாதுகாப்பு இயக்கத்தின் வழிகாட்டி நெறிமுறைகளை ஒன்றிய அரசு (ஊரக வளர்ச்சி அமைச்சகம்) வெளியிட்டுள்ளது. அதன் படி, அனைத்து வட்டாரங்களும் வேளாண்மை மற்றும் வேளாண் சார் பணிகளுக்கு 60% செலவினம் எய்தப்பட வேண்டும் மற்றும் நீர் பாதுகாப்பு மேலாண்மைக்கான வட்டாரங்களில் 65% செலவினம் இயற்கை வள மேலாண்மை பணிகளுக்கு மேற்கொள்ள வேண்டும். தமிழக அரசானது குறிப்பாக நீர் பற்றாக்குறை வட்டாரங்களில் தனிநபர் மற்றும் சமுதாயம் சார்ந்த இயற்கை வள மேலாண்மை பணிகளில் கவனம் செலுத்துகிறது.

விவசாயம் மற்றும் அதனுடன் நேரடியாக தொடர்புடைய பணிகள் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த பணிகளுக்காக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மேலும் மொத்த செலவினத்தில் குறைந்தபட்சம் 60% செலவினங்கள் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த பணிகளுக்கு மேற்கொள்ளப்படுவது உறுதி செய்யப்படுகின்றன. அதன்படி, வரத்துக்கால்வாய்களை அமைத்தல் மற்றும் அகலப்படுத்துதல், நாற்றங்கால் வளர்த்தல் மற்றும் மரக்கன்றுகள் நடுதல் பணிகள், மேய்ச்சல் நில மேம்பாடு பணிகள், சமுதாய தரிசு நிலங்களை மேம்பாடு செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2024–25 ஆம் ஆண்டில் மொத்தம் 73,875 இயற்கை வள மேலாண்மை பணிகள் எடுக்கப்பட்டு 38,884 பணிகள் ரூ.3,125.73 கோடி செலவினத்தில் முடிக்கப்பட்டுள்ளது. இது மொத்த பணிகளுக்கான செலவினத்தில் 33% ஆகும்.

4.1.6.2 தனிநபர் பணிகள்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் சட்டத்தின் அட்டவணை I பத்தி எண் 5–ன் படி குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பயனாளிகளுக்கு தனிநபர் சொத்து பணிகளுக்கான தேவைகள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். தனிநபர் சொத்துக்களை உருவாக்குவது அவர்களின் நிரந்தர வருமானத்திற்கு வழிவகுக்கும். கொட்டகைகள், பண்ணைக்குட்டைகள், மரக்கன்றுகள் நடுதல், தனிநபர் கிணறுகள், மீன் உலர்த்தும் தளம், தனிநபர்களுக்கான நில மேம்பாட்டு நடவடிக்கைகள் ஆகிய பணிகள் இதில் அடங்கும்.

2024–25 ஆம் ஆண்டில், மொத்தம் 1,30,120 தனிநபர் சொத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

4.1.6.3 ஊரக உட்கட்டமைப்பு பணிகள்

நீடித்த மற்றும் நிலையான சொத்துக்களை உருவாக்குவதில் தமிழ்நாடு எப்போதும் முன்னோடியாக

இருந்து வருகிறது. பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல், ஊராட்சி அலுவலக கட்டிடம் கட்டுதல், சமையலறைக்கூடம் அமைத்தல், உணவு தானிய கிடங்கு அமைத்தல், அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல், பால் சேகரிப்பு மையம் அமைத்தல், தடுப்பணை கட்டுதல், கல்வெட்டுகள், சிறு பாலங்கள் அமைத்தல், ஓரடுக்கு ஜல்லி சாலைகள் அமைத்தல் (ஊரக சாலை மேம்பாடு), பேவர் பிளாக் சாலைகள் அமைத்தல், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல் ஆகிய பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. கூட்டுறவுத் துறையுடன் ஒருங்கிணைந்து 2024–25 ஆம் ஆண்டில் மக்கள் சந்தை அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

2024–25 ஆம் ஆண்டில், மொத்தம் 7,088 ஊரக உட்கட்டமைப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

4.1.7 சிறப்பு முயற்சிகள்

(i) மரம் நடும் பணிகள்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், நிலையான கிராமப்புற மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை மாற்றத்தைக் குறைத்தல் மற்றும் வாழ்வாதாரத்தை உருவாக்குவதற்கான முக்கிய பணியாக மரம் வளர்த்தல் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. காடுகள் வளர்த்தல், வேளாண் காடுகள், பொது மற்றும் சமூக நிலங்களில் தோட்டக்கலை மரம் நடுதல் போன்ற பணிகள் உள்ளிட்ட இந்த நடவடிக்கைகள் பசுமைப் போர்வையை அதிகரிக்கவும், கார்பனை மட்டுப்படுத்தவும், காலநிலை மாற்ற தாக்கத்தை குறைக்கவும் உதவுகின்றன.

(ii) நாற்றாங்கால் அமைத்தல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் நாற்றாங்கால் அமைத்தலானது,

காடுகள் வளர்த்தல், கிராமப்புற வாழ்வாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை அதிகரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையால் மரக்கன்றுகள் நடும் பணிக்கு தேவைப்படும் மரக்கன்றுகளுக்காக அனைத்து வட்டாரங்களிலும் மொத்தம் 895 வட்டார நாற்றாங்கால் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது, 157.84 இலட்சம் மரக்கன்றுகள் இருப்பில் உள்ளன, மேலும் தற்போதுள்ள இருப்பின் அடிப்படையில் கிராம ஊராட்சி வாரியான மரக்கன்றுகள் நடும் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. உயிர்வாழ்வு விகிதத்தை அதிகரிக்கும் பொருட்டு ஆறு அடி வரை மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு அவைகள் மரங்கள் நடும் பணியில் பயன்படுத்தப்படுகின்றன.

(iii) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்துடன் பசுமை தமிழகம் இயக்கத்தினை ஒருங்கிணைத்தல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கீழ் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் வனத்துறையின் கீழ் பசுமை தமிழகம் இயக்கம் ஆகியவற்றினை ஒருங்கிணைத்து, நாற்றாங்கால் பண்ணைகளில் மரக்கன்றுகள் வளர்ப்பதையும், மரக்கன்றுகள் நடுவதையும் தமிழக அரசு மேற்கொண்டுள்ளது.

இந்த முயற்சியின் கீழ், வனத்துறையுடன் ஒருங்கிணைந்து 306 நாற்றாங்கால் பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன. இன்றுவரை, 33.23 இலட்சம் மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இம்மரக்கன்றுகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மற்றும் வனத்துறை ஆகிய துறைகளின் மூலம் இம்மரக்கன்றுகள் நடப்பட்டு ஊரக

பசுமையினை அதிகரிக்கவும், காடுகளின் வளர்ப்பினை ஆதரிக்கவும் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றன.

4.1.8 கண்காணிப்பு முறை

(i) தேசிய கைப்பேசி கண்காணிப்பு முறை

தேசிய கைப்பேசி கண்காணிப்பு செயலி 21.05.2021 அன்று ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு அனைத்து மாநிலங்களும் தினசரி கட்டாயம் பயன்படுத்த அறிவுறுத்தியுள்ளது.

மேலும் இச்செயலியில், கண்கள் சிமிட்டுவதை கண்டறியும் வசதி, ஆட்களை எண்ணும் வசதி, வருகைப்பதிவேட்டுடன் பணி இணையாளர்களின் அடையாள எண்ணை இணைக்கும் வசதி, நீளவாக்கில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு, அருகில் எடுக்க வேண்டும் என்ற வரம்புகளில் தளர்வு போன்ற புதிய வசதிகள் ஒன்றிய ஊரக வளர்ச்சி அமைச்சகம் மூலம் தரப்பட்டுள்ளன.

NMMS செயலி மூலம் தினமும் இரு முறை தொழிலாளர்களது வருகையினை பணித்தளத்தில் இருந்து பதிவு செய்வதன் மூலம் ஓர் வெளிப்படைத் தன்மை ஏற்படுத்தப்படுகிறது. இத்திட்ட தொழிலாளர்களின் தினசரி வருகைப்பதிவினை இச்செயலி மூலம் மாநில அளவில் நடைபெற்று வரும் அனைத்து பணிகளுக்கும் மேற்கொள்ளப்படுவதனை களநிலை அலுவலர்கள் கண்காணித்து உறுதி செய்கின்றனர். இதற்காக அனைத்து பணி இணையாளர்களுக்கும் உரிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளதோடு வட்டார/ மாவட்ட அளவிலான அலுவலர்கள் தினசரி முன்னேற்றத்தினை கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(ii) பகுதி அலுவலர் ஆய்வு செயலி

பகுதி அலுவலர் ஆய்வு செயலி 21.05.2021 அன்று ஊரக வளர்ச்சித்திட்டங்களை திறம்பட கண்காணிப்பதற்காக ஒன்றிய அரசால்

தொடங்கப்பட்டது. இச்செயலி மாநில அலுவலர்கள் தங்களது கள ஆய்வு முடிவுகளை இணையதளம் மூலம் பதிவு செய்ய வழிவகுக்கும். இது ஊரக வளர்ச்சித் துறையால் தொடங்கப்பட்ட அனைத்து திட்டங்களுக்கும் நேரம், முத்திரையிடப்பட்ட மற்றும் புவிக்குறியீடு செய்யப்பட்ட புகைப்படத்தை பதிவு செய்ய அனுமதிக்கிறது. மேலும் கள ஆய்வு விவரங்களை தங்குதடையின்றி தெரிவிப்பதற்கும் இவ்விவரங்களை உயர் அலுவலர்கள் rural.nic.in இணையதளத்தின் மூலம் காண்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4.1.9. வெளிப்படைத் தன்மை

4.1.9.1 சமூக தணிக்கை

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தணிக்கை விதிகள் 2011 பிரிவு 3(1)–ன்படி ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் இச்சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை மாநில அரசாங்கம்

குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சமூக தணிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யவேண்டும். சமூக தணிக்கை வள அலுவலர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில், மக்களால் சமூக தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நிதி செலவினம் மட்டுமல்லாது திட்டத்தின் செயல்முறை, சமூக ஏற்றத்தாழ்வு மற்றும் பணித்திறன் ஆகிய கோணங்களிலிருந்து ஆய்வு செய்வது சமூக தணிக்கை, தகவல் பரிமாற்றம், கல்வி, தகவல் தொடர்பு ஆகியவற்றின் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை அதிகப்படுத்தவும், வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாடுகளான திட்டமிடுதல், பணிகளை தேர்வு செய்தல், அமல்படுத்துதல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் பொது மக்களின் பங்கேற்பினை அதிகப்படுத்தவும் உதவுகிறது.

சமூக தணிக்கைக்கான நிறுவன அமைப்புகள்

தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கமானது (SASTA) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் 1975–ன்கீழ் பதிவு செய்யப்பட்டு ஒன்றிய அரசின் வழிகாட்டுதல்படி இயங்குகிறது.

மாவட்ட வள பயிற்றுநர்களை, வட்டார வள பயிற்றுநர்களின் உதவியுடன் கிராம வள பயிற்றுநர்களுக்கு பயிற்றுவிக்க அனைத்து மாவட்டங்களிலும் மற்றும் வட்டாரங்களிலும் பணியமர்த்தப்படுகிறார்கள். கிராம வள பயிற்றுநர்கள் கிராம சபையால் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு கிராமங்கள் மூப்பு முறை இல்லாமல் ஒதுக்கீடு செய்யப்பட்டு சமூக தணிக்கை மேற்கொள்வார்கள்.

சமூக தணிக்கையின் தாக்கம்

சமூக தணிக்கையினை, திட்டத்தின் பயனாளிகளே மேற்கொள்வதால், சமூக தணிக்கையானது திட்டப் பயனாளிகளிடையேயும்,

திட்டத்தினை செயல்படுத்துபவர்கள் மத்தியிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சமூக தணிக்கை அறிக்கையைப் பற்றி விவாதிக்கக் கூட்டப்படும் சிறப்பு கிராம சபைகளின் போது நடைபெறும் விவாதங்கள் பொது கருத்து கேட்பு போன்றது. இந்த முறையினால் தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைகள் மற்றும் பலன்களை அறிந்துகொள்ளும் விழிப்புணர்வு கூட்டமாகவும் சிறப்பு கிராம சபை அமைகிறது. சமூக தணிக்கையின் பலனாக கிராம ஊராட்சி மற்றும் வட்டார அளவிலும் பதிவேடுகள் பராமரிப்பது மேம்பட்டு வருகிறது.

2024-25-ம் ஆண்டிற்கான சமூக தணிக்கை நடவடிக்கைகள்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 2023-24 ஆம் நிதியாண்டிற்கான மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்கான சமூக தணிக்கை 2024-25 ஆம் ஆண்டில் 12,524 கிராம ஊராட்சிகளிலும் முடிக்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) மற்றும் 15–வது நிதிக்குழு போன்ற பிற திட்டங்களுக்கும் சமூக தணிக்கை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

4.1.10. குறைதீர் அலுவலர்

மாவட்ட அளவில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் தொடர்பான குறைகள் மற்றும் புகார்களை நிவர்த்தி செய்ய குறைதீர் அலுவலர்கள் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. 37 மாவட்டங்களுக்கும் குறைதீர் அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இதில் 14 குறைதீர்ப்பாளர்களுக்கான பதவிக்காலம் முடிவடைந்துள்ளது. எனவே அம்மாவட்டங்களுக்கு குறைதீர்ப்பாளர்களுக்கு கூடுதல் பொறுப்பு ஆணையிடப்பட்டுள்ளது. புதிதாக 14 குறைதீர்ப்பாளர்கள் எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. தற்போது குறைதீர் அலுவலர்களின்

பணியானது பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்திற்கும் (ஊரகம்) விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

4.1.11. ஊதியம் தாமதமாக வழங்கியதற்கான இழப்பீடு மற்றும் வேலையில்லா படி வழங்குதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் தொழிலாளர்கள் வேலை செய்ததற்கான ஊதியத்தினை தாமதமாக வழங்கும் நிகழ்வுகளில் இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கும், வேலை கோரிய 15 நாட்களுக்குள் வேலை வழங்கப்படாத நிகழ்வுகளில் வேலையில்லா படி வழங்குவதற்கும் வழிவகை செய்கிறது. தமிழ்நாடு அரசு வேலையில்லா படி வழங்குவதற்கான விதிமுறைகள் மற்றும் ஊதியம் தாமதமாக வழங்கியதற்கான இழப்பீட்டு விதிமுறைகள் குறித்த அறிவிக்கைகளை 2022 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது.

4.1.12 கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டத்துடன் ஒருங்கிணைப்பு

மாநில அரசின் ஓர் முதன்மை திட்டமாக கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை துவக்கியுள்ளது. இத்திட்டத்தினை அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–II செயல்படுத்தப்பட்டு வரும் அதே ஊராட்சிகளில் செயல்படுத்துவதன் மூலம் புவியியல் சார் ஒருங்கிணைப்பு உறுதி செய்யப்படுகிறது.

இதே போல் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் குறிப்பிடத்தக்க பகுதி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட கூறுகளுடன் குறிப்பாக நீர்வள பாதுகாப்பு பணிகளான தடுப்பணைகள் (சிமெண்ட் கான்கிரீட்/ கம்பி வலை), பண்ணைக்குட்டைகள், அகழிகள், அமிழ்ந்த குழிகள்,

மீள் நிரப்புத்தண்டு போன்ற பிற பணிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ள வழிவகை செய்கிறது. கூடுதலாக மண் பாதுகாப்பு பணிகளான மண் வரப்புகள், கல்வரப்புகள் மற்றும் இதர நில மேம்பாட்டு பணிகள் வேளாண் விவசாயிகளுக்காக மேற்கொள்ளப்படுகிறது.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டம் மற்றும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–II புவியியல் ரீதியாகவும் திட்ட செயலாக்க ரீதியாகவும் இயற்கை வள மேலாண்மை மற்றும் நீர் பாதுகாப்பு பணிகள் மூலம் உழவர்களுக்கு பலனை வழங்கிட ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படுகின்றது. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்ட ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும் ஒருங்கிணைந்த பணிக்கூறுகளுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மூலம் சிறப்பு உந்துதல்

தரப்படும். ஊரக வளர்ச்சித்துறையின் இத்தகைய முழுமையான அணுகுமுறை ஊரகப் பகுதியின் வாழ்க்கைத்தர குறியீடுகளை குறிப்பிடத்தக்க அளவு உயர்த்துவதோடு தன்னிறைவு அடைவதை உறுதி செய்யும்.

2024–25 ஆம் ஆண்டில், மண் வரப்புகள், கல்வரப்புகள் மற்றும் இதர நில மேம்பாட்டு பணிகள் போன்ற 49,135 பணிகள் வேளாண் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

4.1.13. தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கத்துடன் ஒருங்கிணைப்பு

2022–23 ஆம் ஆண்டில், 388 வட்டார அளவிலான நாற்றங்கால்கள், 3,500 பிரத்யேக முருங்கை நாற்றங்கால்கள், 1,500 தோட்டக்கலை நாற்றங்கால்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் கூடுதலாக 388 வட்டார அளவிலான நாற்றங்கால்கள் சுய உதவிக் குழுக்களால் உருவாக்கப்பட்ட கிராம

அளவிலான கூட்டமைப்பு மற்றும் தொகுப்பு அளவிலான கூட்டமைப்புகளில் உள்ள மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் மற்றும் கிராமங்களை பசுமையாக்கவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2024–25–ம் ஆண்டில், 910 சுய உதவிக்குழு கொட்டகைகள் இத்திட்டத்தின் கீழ் கட்டப் –பட்டுள்ளன.

4.1.14. திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் புதிய தொழில்நுட்பங்கள்

(i) ட்ரோன் தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் பணிகளை கண்காணிக்க ட்ரோன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த ஒன்றிய அரசு கோரியுள்ளது. அதன்படி, 2023–24ம் ஆண்டில் செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ட்ரோன் மூலம் மகாத்மா காந்தி

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளை கண்காணித்தல் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டது மற்றும் இப்பணி 2024–25 ஆம் ஆண்டில் விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப்பட்டன. தற்போது, பிற அனைத்து ஊரக மாவட்டங்களிலும் ட்ரோன் தொழில்நுட்ப கண்காணிப்பை நீட்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ii) யுக்தாரா வலைத்தளம்

ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், யுக்தாரா வலைத்தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இது புவியியல் தகவல் அமைப்பு அடிப்படையிலான கிராம ஊராட்சிகளுக்கான திட்டமிடலைத் தயாரிப்பதற்கான ஒரு தளமாகும். இந்த வலைத்தளம், புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலை உணர்தல் கருவிகளைப் பயன்படுத்தி

இத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த இயற்கை வள மேலாண்மை பணிகளுக்கு இடம் தெரிவு செய்யப்படுவதற்கான முடிவுகளை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் எடுக்க உதவுகிறது.

யுக்தாரா வலைத்தளத்தில் கிராம ஊராட்சி எல்லைகளைப் பதிவேற்றும் பணி நிறைவடைந்துள்ளது. மேலும், ஒன்றிய அரசின் அமைச்சகத்தின் அறிவுறுத்தல்களின்படி, யுக்தாரா வலைத்தளத்தினை செயல்படுத்துவதற்கு முதற்கட்டமாக 388 கிராம ஊராட்சிகள் அதாவது ஒரு வட்டாரத்திற்கு ஒரு கிராம ஊராட்சி வீதம் கண்டறியப்பட்டுள்ளன.

(iii) மின்னணு அளவீட்டு புத்தகம்

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து வேலைகளின் அளவீடுகளும் தகுந்த அலுவலர்கள் மூலம் முறையாக அங்கீகரிக்கப்பட்டு,

அளவீட்டு புத்தகத்தில் (MB) பதிவு செய்யப்பட வேண்டும். மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் மதிப்பீட்டினை கண்டறிய NREGASoft–இல் விவரங்கள் உள்ளிடப்பட வேண்டும். மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அளவீடு செய்யப்பட்ட பிறகும், அந்த அளவீடுகள் உதவி பொறியாளர்/ உதவி செயற்பொறியாளர்/செயற் பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்ட பிறகு மட்டுமே நிதி விடுவிக்கப்படும்.

NREGASoft–இல் செயல்பாடு வாரியான பணி விவரங்களை பதிவேற்றுவதற்காக மின்னணு அளவீட்டு புத்தகம் ஏற்கனவே உருவாக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. இப்போது, ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், மின்னணு அளவீட்டு புத்தகத்தினை கட்டாயமாக்கியுள்ளது. 13.02.2025 முதல் தமிழ்நாட்டில் அனைத்து பணிகளுக்கும் மின்னணு அளவீட்டு புத்தகம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

4.2 "அனைவருக்கும் வீடு" – பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்பு திட்டம்

ஊரக வீட்டு வசதி திட்டத்தில் உள்ள இடைவெளிகளை களையும் விதமாக பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டம் 2016–17–ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசால் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசு வழங்கிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இந்த திட்டத்தின் கீழ் ஒன்றிய மற்றும் மாநில அரசிற்கு இடையேயான நிதிப்பகிர்வு 60:40 ஆகும். தமிழ்நாட்டில் இந்த விகிதம் 39:61 ஆக உள்ளது. அதாவது அனைவருக்கும் வீடு – பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 61% நிதியை தமிழ் நாடு அரசு வழங்குகிறது.

4.2.1 நோக்கம்

"அனைவருக்கும் வீடு" என்ற இலக்கை அடைய அனைத்து வீடற்ற ஏழை குடும்பங்கள் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள குடிசைகள் மற்றும்

சிதிலமடைந்த வீடுகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய நிலையான வீடுகளை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

4.2.2 வீட்டு வசதித் திட்டத்திற்கு மாநில அரசின் பங்களிப்பு

தமிழ்நாடு அரசால் கான்கிரீட் கூரை அமைக்க வழங்கப்படும் கூடுதல் தொகையுடன், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) ஆகிய திட்டங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் தமிழ்நாட்டில் ஒரு வீட்டிற்கான அலகுத்தொகை ரூ.2.83 இலட்சமாக உள்ளது.

அட்டவணை 4.1

தமிழ் நாட்டில் ஒரு வீட்டிற்கான அலகு தொகை மாநில அரசால் வழங்கப்படும் கூடுதல் தொகையுடன்

(தொகை ரூபாயில்)

விவரம்	ஒன்றிய அரசின் பங்கு	மாநில அரசின் பங்கு	மொத்தம்
அலகு தொகை	72,000	48,000	1,20,000
மாநில அரசின் மேற்கூரை வேய்வதற்கான கூடுதல் நிதி	-	1,20,000	1,20,000
தனிநபர் இல்ல கழிப்பறை கட்டுவதற்கு நிதி	7,200	4,800	12,000
மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 100 மனித சக்தி நாட்களுக்கான ஊதியம் (வீடு கட்டுவதற்கு 90 மற்றும் கழிப்பறை கட்டுவதற்கு 10 நாட்கள்)	31,900	-	31,900
மொத்தம்	**1,11,100**	**1,72,800**	**2,83,900**

4.2.3 முக்கிய அம்சங்கள்

1. சுகாதாரமான சமைக்கும் இடத்துடன் கூடிய ஒரு வீட்டின் குறைந்தபட்ச பரப்பளவு 25 சதுர மீட்டர் (269 சதுர அடி) ஆகும்.
2. பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 60 விழுக்காடு பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 40 விழுக்காடு இதர இனத்தவருக்கு ஒதுக்கப்படுகிறது. (தகுதி உள்ள சிறுபான்மை குடும்பங்கள் இருக்குமேயானால் அவர்களுக்கு வழங்கப்படும் 15 விழுக்காடு இதில் அடங்கும்) அனைத்து பிரிவுகளிலும் 5 விழுக்காடு ஒதுக்கீடு மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படுகிறது.
3. சமூக பொருளாதார சாதிவாரி கணக்கெடுப்பு (2011) புள்ளி விவரங்களிலிருந்து 2019–20 ஆம் ஆண்டு வரை பிரதம மந்திரி ஊரகக்

குடியிருப்புத் திட்ட வழிகாட்டு நெறிமுறையில் தெரிவிக்கப்பட்டுள்ள சேர்த்தல், நீக்கல் காரணிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிலையான காத்திருப்பு பட்டியலில் உள்ள பயனாளிகள் கிராம சபை மூலம் தேர்வு செய்யப்பட்டனர். 2021–22–ஆம் ஆண்டில் ஆவாஸ் ப்ளஸ் தரவுகளில் இடம்பெற்றுள்ள பயனாளிகளின் விபரங்களின் அடிப்படையில் வீடுகள் வழங்கப்பட்டது.

4. ஒன்றிய அரசின் ஒப்புதலின்படி ஆவாஸ் பிளஸ் புள்ளிவிவரங்களிலிருந்து 2024–25 ஆம் ஆண்டிற்கான வீடுகள் அனுமதிக்கப்பட்டுவருகிறது.
5. தவணைத்தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்படுகிறது.
6. குறைந்த செலவில் கட்டுமானப் பணியினை விரைந்து முடித்திட ஏதுவாக எக்ஸ்பண்டேட் பாலிஸ்டிரீன் பேனல்கள், இன்டர்லாக் ப்ரிக்ஸ்,

ஆட்டோகிளேவ்ட் ஏரேடட் கான்கிரீட் ப்ளாக்/பேனல்கள், ப்ளை ஆஷ் ப்ரிக்ஸ், ரேட் ட்ரேப் பாண்ட் உடன் கூடிய பில்லர் ஸ்லாப் போன்ற பல்வேறு புதிய/ மாற்று தொழில்நுட்பங்களை இத்துறை பின்பற்றி வருகிறது.

7. பயனாளிகளின் தேவையின் அடிப்படையில் வீடுகளை கட்டி முடிக்க 9% க்கும் குறைவான வட்டி விகிதத்தில் உத்திரவாதம் ஏதுமின்றி ரூ.50,000/– முதல் ரூ.70,000 வரை வங்கிக் கடனைப் பெற ஏற்பாடு செய்யப்படுகிறது.

அட்டவணை 4.2

பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்பு திட்டத்தின் கீழ் முடிவுற்ற வீடுகளின் விவரம்

ஆண்டு	அனுமதி ஆணை வழங்கப்பட்டவை	முடிவுற்றவை			நிலுவை	முடிவுற்ற சதவீதம்
		31.3.24 வரை	01.4.2024 முதல் 18.3.2025 வரை	மொத்தம்		
2016–17 முதல் 2019–20 மற்றும் 2021–22 (தகுதி நீக்கம் மற்றும் பயனாளிகளிடம் வசூலிக்க வேண்டிய வீடுகள் தவிர)	6,43,254	5,96,931	32,168	6,29,099	14,155	98.%

கடந்த 2021–22 ஆண்டு முதல் நாளது வரை 3,35,912 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மொத்தமாக 6,29,099 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. நிலுவையில் உள்ள வீடுகள் 31.03.2025–க்குள் கட்டிமுடிக்கப்படும். அதேபோல்

2024–25–ம் ஆண்டு பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 17,142 வீடுகள் அனுமதிக்கப்பட்டு அனைத்து வீடுகளும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

4.2.4 நிதி ஒதுக்கீடு

இத்திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் பங்கு தொகை ரூ.4,631.42 கோடியும், அதற்கு இணையான மாநில அரசின் பங்கு தொகை ரூ.3,087.62 கோடியும், ஆக மொத்தம் ரூ.7,719.04 கோடி நிதி பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட நிதியில் நாளதுவரை ரூ.7,596.16 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை பணி முன்னேற்றத்திற்கு ஏற்ப பயனாளிகளுக்கு வழங்கப்படும். அதேபோல் 2024–25–ஆம் ஆண்டிலும் ரூ.205.70 கோடி அரசிடமிருந்து பெறப்பட்டு அதில் ரூ.40.77 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4.2.5 கான்கிரீட் மேற்கூரை நிதி மற்றும் மாநில கூடுதல் நிதி

தமிழ் நாடு அரசால், ஒரு வீட்டிற்கு கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்காக ரூ.50,000/– மற்றும் கட்டுமானப் பொருட்களின் விலையேற்றம் மற்றும் தொழிலாளர் ஊதியம் அதிகரிப்பால் ஏற்படும் நிதிச் சுமையை குறைக்க கூடுதல் நிதியாக ஒரு வீட்டிற்கு ரூ.70,000/– வழங்கப்பட்டு வருகிறது. இத்தலைப்பில் ரூ.4,803.73 கோடி மாநில அரசால் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், இதுவரை ரூ.4,701.57 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

4.3 பண்டைய பழங்குடியினருக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டம் (PM–JANMAN)

4.3.1 நோக்கம்

விளிம்பு நிலையில் உள்ள பழங்குடியின மக்களின் (**PVTGs**) சமூக–பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காகவும், பாதுகாப்பான வீட்டுவசதி,

தூய்மையான குடிநீர் மற்றும் சுகாதாரம், கல்வி, மற்றும் ஊட்டச்சத்துக்கான மேம்பட்ட அனுகுமுறை மற்றும் அவர்களின் வாழ்விடங்களில் அடிப்படை வசதிகளான சாலை மற்றும் தொலைத்தொடர்பு இணைப்புகள் மற்றும் முழுஅளவில் நிலைத்த வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்கிடும் பொருட்டும் ஒன்றிய அரசின் பழங்குடியினர் நல அமைச்சகம், பண்டைய பழங்குடியினருக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டம் என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டத்தில் உள்ள வழிமுறைகளில், குறிப்பிட்டுள்ள சில மாற்றங்களுடன் விளிம்பு நிலையிலுள்ள பழங்குடியின மக்களுக்கான வீட்டு வசதி திட்டத்தினை ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் அனுமதித்துள்ளது. தமிழ்நாட்டில் 21 மாவட்டங்களில் வாழும் ஆறு பழங்குடியின பிரிவினர்களான இருளர், காட்டுநாயக்கன், கோட்டா, குரும்பா, பனியன் மற்றும்

தோடா ஆகியோர்கள் இத்திட்டத்தின் வாயிலாக வீட்டு வசதியினை பெற தகுதியுடையவர்கள்.

கிராம அளவிலான கணக்கெடுப்பு நடத்திடும் பொருட்டு ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி துறை அமைச்சகம், பழங்குடியின நல அமைச்சகத்தால் வழங்கப்பட்ட 'அழிவின் விளிம்பில் உள்ள பழங்குடியின குடும்பங்கள் வசிக்கும் கிராமங்களின்' பட்டியலை ஆவாஸ் செயலியில் பதிவேற்றம் செய்துள்ளது. அதன்படி தகுதியான குடும்பங்கள் கண்டறியப்பட்டு கணக்கெடுப்பு முடிந்த பிறகு, உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அழிவின் விளிம்பில் உள்ள பழங்குடியின குடும்பங்களுக்கு வீடுகள் அனுமதிக்கப்படுகின்றன.

4.3.2 நீக்கல் காரணிகள்

சொந்தமாக கான்கீரிட் வீடு உள்ள குடும்பங்கள், ஏதேனும் ஒரு உறுப்பினர் அரசு ஊழியராக உள்ள

குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியற்றவையாகும்.

4.3.3. திட்ட செயலாக்க காலம்

இந்த திட்டம் டிசம்பர் 2023–இல் தொடங்கப்பட்டு, மூன்று ஆண்டுகள், அதாவது 2025–26 வரை செயல்படுத்தப்படும்.

4.3.4 ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அலகுத் தொகை

ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள அலகுத் தொகையான ரூ.2.00 இலட்சமானது ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது.

4.3.5 தமிழ்நாட்டில் அலகு தொகை மற்றும் வீடு கட்டப்படும் அளவு

ஒன்றிய அரசால், பண்டைய பழங்குடியினருக்கான பிரதம மந்திரியின்

பெருந்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட அலகுத் தொகையுடன், 300 சதுர அடி பரப்பளவு கொண்ட வீடுகள் கட்டுவதற்கான அலகுத் தொகையை சமவெளிப் பகுதிகளுக்கு ரூ.5.07 இலட்சமாகவும், மலைப்பகுதிகளுக்கு ரூ.5.73 இலட்சமாகவும் தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ளது.

அட்டவணை 4.3

தமிழ்நாட்டில் ஒரு வீட்டிற்கான அலகுத்தொகை மாநில அரசால் வழங்கப்படும் கூடுதல் தொகையுடன்

(தொகை ரூபாயில்)

அழிவின் விளிம்பு நிலையிலுள்ளபழங்குடியினர் வசிக்கும் கிராமம்	ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள அலகுத் தொகை	மாநில அரசினால் வழங்கப்படும் கூடுதல் நிதி உதவித்தொகை		ஒருங்கிணைத்தல் மூலம் வழங்கப்படும் நிதி		ஒரு வீட்டிற்கு வழங்கப் படும் மொத்த தொகை
		ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையினால் கான்கிரீட் கூரை அமைக்க வழங்கப்படும் நிதி	பழங்குடியினர் நலத்துறையின் மூலம் வழங்கப்படும் நிதி	மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்	தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)	
சமவெளிப்பகுதி	2,00,000	1,20,000	1,48,540	26,460	12,000	5,07,000
மலைப்பகுதி	2,00,000	1,20,000	2,14,540	26,460	12,000	5,73,000

பண்டைய பழங்குடியின மக்களுக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டத்தின் கீழ் மொத்த இலக்கு 11,947 வீடுகளாகும்.

4.3.6. நிதி ஒதுக்கீடு

ஒன்றிய அரசால் 11,947 வீடுகள் கட்ட ஒரு வீட்டிற்கு அலகுத்தொகையாக ரூ.2.00 இலட்சம் வீதம் ரூ.238.94 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை ஒன்றிய மற்றும் மாநில அரசினால் 60:40 என்ற விகிதத்தில் பகிரப்படுகிறது. ஒன்றிய அரசினால் வழங்கப்படும் அலகுத்தொகையுடன், தமிழ்நாடு அரசினால் சமதளப்பகுதிகளில் கட்டப்படும் வீடு ஒன்றிற்கு ரூ.2,68,540/– மற்றும் மலைப்பகுதிகளில் கட்டப்படும் வீடு ஒன்றிற்கு ரூ.3,34,540/– என கூடுதலாக மொத்தம் ரூ.335.95 கோடி வழங்கப்படுகிறது. இதனுடன் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் தூய்மை பாரத

இயக்கம் – ஊரக திட்டங்களும் ஒருங்கிணைக்கப்படுகிறது.

4.4 பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்

4.4.1. பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் I

இணைப்புச் சாலை வசதி இல்லாத 500–க்கும் மேல் மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்களுக்கு அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்புடைய இணைப்புச் சாலை வசதி வழங்குவதே பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்–I–ன் நோக்கமாகும். ஏற்கனவே உள்ள இணைப்புச் சாலைகளை மேம்படுத்துதல், பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்–I–ன் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், 500–க்கும் மேல் மக்கள் தொகை கொண்ட இணைப்புச் சாலை வசதி இல்லாத 1,986 குக்கிராமங்களுக்கு பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் I–ன் மூலம் இணைப்புச் சாலை வசதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிற்கு, பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்– I–ன் கீழ் 11 கட்டங்களில் 2000–01 முதல் 2018–19 வரை 16,296 கி.மீ நீளமுள்ள 7,678 ஊரகச் சாலைகள் 98 பாலங்கள் ரூ.4,586 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

4.4.2 பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் II

ஊரக சந்தை மற்றும் வளர்ச்சி மையங்களுக்கு செல்லும் சாலைகளை மேம்படுத்துவதற்கு பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்–II, ஒன்றிய அரசால் 2013–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டிற்கு, இத்திட்டத்தின் கீழ் 2,940 கி.மீ நீளமுள்ள 860 சாலைப்பணிகள் மற்றும் 34 பாலங்கள் ரூ.1,434 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்–I மற்றும் பிரதம மந்திரி கிராமச் சாலைத்

திட்டம்–II–ன் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

4.4.3 பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் III

குக்கிராமங்களை அருகில் உள்ள சந்தை, உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள் போன்றவற்றுடன் இணைக்கும் பிரதான சாலைகள் மற்றும் முக்கிய ஊரக இணைப்புச் சாலைகளை மேம்படுத்துவதற்கு, பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்–III, ஒன்றிய அரசால் 2019 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்–III–ன் கீழ், தமிழ்நாட்டிற்கு 7,375 கி.மீ நீளமுள்ள ஊரகச் சாலைகளை மேம்படுத்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2019–20 ஆம் ஆண்டு முதல் 2023–24 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டிற்கு 7,318 கி.மீ நீளமுள்ள 1,814 சாலைகள் மற்றும் 83 பாலங்கள் ரூ.4,828 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

2024–25 ஆம் ஆண்டிற்கு, 74.20 கி.மீ நீளமுள்ள 15 சாலைகள் மற்றும் ரூ.57.32 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த பிரேரணை ஒன்றிய அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

4.4.4. பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் IV

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்–IV–ன், கீழ், 2011 மக்கள் தொகையின் அடிப்படையில் சமவெளி பகுதிகளில் 500–க்கும் மேல் மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்களுக்கு மற்றும் மலைப்பாங்கான மாநிலங்களில் 250–க்கும் மேல் மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

500–க்கும் மேல் மக்கள் தொகை கொண்ட இணைப்புச் சாலை வசதி இல்லாத 2014 தகுதியான குக்கிராமங்களில், 1,986 குக்கிராமங்களுக்கு பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் I–ன் கீழ் இணைப்புச்

சாலை வசதி வழங்கப்பட்டுள்ளது மற்றும் 21 குக்கிராமங்களுக்கு மாநில திட்டங்களின் கீழ் இணைப்புச் சாலை வசதி வழங்கப்பட்டுள்ளது

தற்பொழுது, 500 க்கும் மேல் மக்கள் தொகை கொண்ட 7 இணைக்கப்படாத குக்கிராமங்கள் மட்டுமே உள்ளன, அவற்றில் 1 குக்கிராமத்திற்கு சாலை அமைக்க வனத்துறையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள, இணைக்கப்படாத குக்கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி வழங்க, வனத்துறையின் அனுமதியினை பெற தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு, 500–க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்களுக்கு கிட்டத்தட்ட 100% சாலை இணைப்பு வசதி வழங்கியுள்ளதால், பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் IV–ன் கீழ் நிதி ஒதுக்கீடு குறைவாகவே இருக்கும். எனவே,

தமிழ்நாடு, பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் IV–ன், கீழ் ஏற்கனவே உள்ள இணைப்புச் சாலைகளை மேம்படுத்துவதற்கு நிதி வழங்க ஒன்றிய அரசை கேட்டுக்கொண்டுள்ளது. இதுவரை, ஒன்றிய அரசிடம் இருந்து சாதகமான பதில் எதுவும் பெறப்படவில்லை.

4.4.5. நிதி

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் தொடக்கத்தில் ஒன்றிய அரசின் 100% நிதியுடன் செயல்படுத்தப்பட்டது. 2015–ஆம் ஆண்டு முதல் 60% ஒன்றிய அரசு 40% மாநில அரசு என நிதி பகிர்வினை ஒன்றிய அரசு மாற்றியமைத்துள்ளது.

4.4.6. பிரதம மந்திரி கிராமச் சாலைகள் பராமரிப்பு

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தின் கீழ் சாலைகளின் பராமரிப்பு இமார்க் (e–MARG) எனப்படும் இணைய முகப்பின் மூலம் கண்காணிக்கப்படுகிறது. பிரதம மந்திரி கிராமச்

சாலைத் திட்ட சாலைகளின் தொடர் பராமரிப்பிற்கு, 2023–24 ஆம் ஆண்டில் ரூ. 54.37 கோடியும் மற்றும் 2024–25 ஆம் ஆண்டில் ரூ.46.76 கோடி நிதியும் மாநில அரசின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் 5 ஆண்டு தொடர் பராமரிப்பு முடிவுற்ற சாலைகளின் காலமுறை பராமரிப்பு மாநில அரசு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

4.4.7. செயல்திறனுக்கான ஊக்க நிதி

2016–17 ஆம் ஆண்டு, மத்திய அரசு பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தின் கீழ், வருடாந்திர இலக்குகளை நிறைவேற்றியதின் அடிப்படையில், செயல்திறனுக்கான ஊக்க நிதியினை அறிமுகப்படுத்தியது. தமிழ் நாட்டிற்கு, 2016–17 ஆம் ஆண்டு முதல் 2023–24 வரை, ரூ.294.99 கோடி ஊக்க நிதியாக

வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசின் பங்கு ரூ.196.65 கோடி நிதியாகும்.

இந்த ஊக்க நிதி, 4,356 கி.மீ நீளமுள்ள, 5 ஆண்டு காலம் தொடர் பராமரிப்பு முடிவுற்ற பிரதம மந்திரி கிராமச் சாலைகளின், கால முறை பராமரிப்பு பணிகளுக்காக பயன்படுத்தப்படுகிறது.

4.4.8. பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் – பண்டைய பழங்குடியினருக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டம் (PMGSY– PM JANMAN)

100க்கு மேல் பழங்குடியின மக்கள் வசிக்கும் குடியிருப்புகளுக்கு சாலை வசதி ஏற்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் PM–JANMAN திட்டத்தின் கீழ் 2023–24ஆம் ஆண்டிற்கு, 11 பழங்குடியின குடியிருப்புகளுக்கு 18.085 கி.மீ நீளமுள்ள 8 சாலை பணிகள் ரூ. 15.42 கோடி மதிப்பீட்டில்

செயல்படுத்த பிரேரணை ஒன்றிய அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

4.4.9 தரக்கட்டுப்பாடு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், மாநில அளவில் தரக்கட்டுப்பாட்டு பிரிவு கண்காணிப்பு பொறியாளர் (தரக்கட்டுப்பாடு) அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு நியமித்த தேசிய தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (NQMs) மற்றும் மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (SQMs) பணிகளின் அனைத்து நிலைகளிலும் தரக்கட்டுப்பாட்டு சோதனைகளை மேற்கொள்கின்றனர். இத்துறையில் பணிபுரியும் களப்பொறியாளர்களின் திறனை மேம்படுத்த பல்வேறு திறன் மேம்பாடு மற்றும் தரக்கட்டுப்பாட்டு பயிற்சிகள் பல்வேறு தேசிய மற்றும் மாநில அளவிலான சிறந்த பயிற்சி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்றன.

தற்போது சாலைப் பணிகள் மற்றும் திட்டப் பணிகளின் தரத்தினை கண்காணிக்க 39 மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (சாலைகள்) மற்றும் 25 மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (திட்டங்கள்) நியமிக்கப்பட்டுள்ளனர். பல்வகை கட்டடங்கள் மற்றும் பாலங்களின் கட்டமைப்பு மற்றும் வடிவமைப்பினை கூர்ந்தாய்வு செய்திடவும், சாலைகள். பாலங்கள் மற்றும் கட்டடங்களுக்கான தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகள் மேற்கொள்ளவும் தரக்கட்டுப்பாட்டினை கண்காணிக்கவும் 49 தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

4.4.10 தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், மறைமலை நகரில் மாநில அளவிலான தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும், தரக்கட்டுப்பாட்டு

சோதனைகள் மேற்கொள்ள மாவட்ட அளவிலான தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் துறையின் மூலம் நிறுவப்பட்டுள்ளன. மேலும், பணித்தளத்தில் பணி நடைபெறும் பொழுதே தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகள் மேற்கொள்ள 7 நடமாடும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளது. தள ஆய்வின் போது பணிகளின் தரத்தினை ஆய்வு செய்ய துறை அலுவலர்களின் வாகனங்களிலும் அடிப்படை தரக்கட்டுப்பாட்டு கருவிகள் உள்ளன. அனைத்துப் பணிகளுக்கும் தரக்கட்டுப்பாட்டு பதிவேடுகள் பராமரிக்கப்படுகின்றன. தர ஆய்வாளர்கள்/ சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர்கள்/ உதவி செயற்பொறியாளர்களின் திருப்திகரமான தரக்கட்டுப்பாட்டு ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் மட்டுமே பணிகளுக்கு பட்டியல் தொகை வழங்கப்படுகிறது.

4.5 ஜல் ஜீவன் இயக்கம்

ஊரக பகுதிகளிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் பரிந்துரைக்கப்பட்ட தரத்தில் தொடர்ச்சியாக குடிநீர் வழங்கிடும் நோக்கத்துடன் ஜல் ஜீவன் இயக்கம் தொடங்கப்பட்டு, குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. திட்டமிடுதலில் சமூகத்தை ஈடுபடுத்தி குடிநீர் வழங்குதலை கண்காணித்தல் மற்றும் நிலைத்த குடிநீர் ஆதாரங்களை நீர் செறிவூட்டுதல் மூலம் வலுப்படுத்துதல், மறு பயன்பாட்டிற்கு ஊக்குவித்தல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

4.5.1 ஜல் ஜீவன் இயக்க செயல்பாடு

தமிழ்நாட்டில் ஊரக பகுதிகளில் மொத்தமுள்ள 1,25,28,183 வீடுகளில் நாளது வரை 1,10,71,560 (88.37%) வீடுகளுக்கு குடிநீர் குழாய்

இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஒற்றை கிராம திட்டத்தின் கீழ் 96,899 பணிகளும், (ஜல் ஜீவன் இயக்கம் மற்றும் ஒருங்கிணைந்த திட்ட நிதிகள்) பல் கிராம திட்டத்தின் கிராம உட்கட்டமைப்பு கூறுகளின் கீழ் 12,792 பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாளது வரை, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், காஞ்சிபுரம், அரியலூர், திருவள்ளூர், தேனி, தஞ்சாவூர், வேலூர், மயிலாடுதுறை, கடலூர், இராணிபேட்டை, நாமக்கல் மற்றும் நீலகிரி ஆகிய 13 மாவட்டங்கள், 165 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 8,322 கிராம ஊராட்சிகள் "வீடுதோறும் குடிநீர்" என்ற நிலையை (100% அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது) அடைந்துள்ளது.

4.5.2 ஜல் ஜீவன் இயக்கத்தின் கூறுகள்

i. கிராம ஊராட்சிகளில் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கிட

தேவையான உள்ளூர் அளவிலான கட்டமைப்புகளை உருவாக்குதல்.

ii. நிலையான குடிநீர் ஆதாரங்களை உருவாக்குதல் மற்றும் நீர் ஆதாரங்களை மேம்படுத்துவதன் வாயிலாக குடிநீர் விநியோக அமைப்புகளை நீண்ட காலத்திற்கு செயல்பட வைத்தல்.

iii. ஊரகப் பகுதியிலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் வழங்குவதற்காக தேவைப்படும் இடங்களில் நிலத்தடிநீர் போதுமான அளவு இல்லாதிருப்பின் கூட்டு குடிநீர் திட்டங்கள் போன்ற பெருவிநியோக அமைப்புகள் மூலம் தகுந்த விநியோக அமைப்புகளை உருவாக்குதல்.

iv. ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் மற்றும் முடிவுற்றுள்ள ஒற்றை கிராம திட்டங்கள்

மற்றும் கூட்டுக் குடிநீர் திட்டங்களை மறுசீரமைப்பு செய்தல்.

4.5.3 நிதி பகிர்மான முறை

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் பணிகளை மேற்கொள்வதற்கான நிதியினை ஒன்றிய அரசும் (50%), மாநில அரசும் (50%) பங்களிப்பாக வழங்கும்.

4.5.4 செயல்படுத்தும் முறை

தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் இயக்கத்தினை செயல்படுத்தும் துறையாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை உள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர், ஜல் ஜீவன் இயக்கத்தின் மாநில திட்ட இயக்குநராக உள்ளார்.

குடிநீர் ஆதாரம் கிராம எல்லைக்குள் இருந்தால், ஒற்றை கிராம திட்டமாக, திட்டத்தை வடிவமைத்தல், மதிப்பீடு தயாரித்தல் மற்றும்

செயல்படுத்துதல் ஆகிய பணிகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மேற்கொள்ளும். இதுபோன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எடுக்கப்பட்ட பல் கிராம திட்டத்தில் கிராம உட்கட்டமைப்பு பணிகளை வடிவமைத்தல், மதிப்பீடு தயாரித்தல், செயல்படுத்துதல் ஆகிய பணிகளையும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை திட்டமிட்டு செயல்படுத்தும்.

குடிநீர் ஆதாரம் கிராம எல்லைக்கு வெளியே இருந்தால், ஒன்றுக்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளில் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி வரை மொத்தமாக நீரினை வழங்கிட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பல் கிராமங்களுக்கான திட்டத்தினை (Multi Village Schemes) செயல்படுத்துகிறது.

4.5.5 இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- மூன்றாம் தரப்பு மூலம் ஆய்வு மற்றும் தரம் மதிப்பீடு செய்தல்.

- ஊரக பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு விநியோகிக்கப்படும் நீரின் தரம், அளவு மற்றும் நீண்ட கால அடிப்படையில் குடிநீர் வழங்குதல் ஆகியவற்றை கொண்டு செயல்பாட்டு மதிப்பீடு மேற்கொள்ளுதல்.

- ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை அமைப்பின் மூலம் குடிநீர் விநியோக வழிமுறைகள், பணிகளை நிறைவேற்றுதல், பராமரித்தல் மற்றும் திட்டத்தின் செயல்பாடு ஆகியவை பதிவு செய்தல்.

- கள ஆய்வு உபகரணங்களின் மூலம் பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களை கொண்டு நீரின் தரத்தினை உறுதிசெய்தல்.

4.5.6 திட்ட மூலதனத்தில் சமூக பங்களிப்பு

ஜல் ஜீவன் இயக்கத்தின் வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கிராம ஊராட்சியில் உள்ள குடிநீர் விநியோக கட்டமைப்பு மற்றும் மூல ஆதாரத்தை மேம்படுத்த தேவைப்படும் திட்ட மூலதன தொகையில் ஆதிதிராவிடர் / பழங்குடியின மக்கள் 50 சதவீதம் வசிக்கும் கிராமங்கள் மற்றும் மலை பகுதி கிராமங்களில் 5 சதவீதமும், இதர கிராமங்களில் 10 சதவீதமும் பணமாகவோ / பொருளாகவோ / உடல் உழைப்பாகவோ பொது மக்களிடமிருந்து சமூக பங்களிப்பாக பெறப்பட வேண்டும்.

4.5.7 இயக்குதல் மற்றும் பராமரித்தல்

குடிநீர் விநியோகப் பணிகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் கிராம ஊராட்சியின் பொறுப்பாகும்.

i. பயனீட்டாளர்களுக்கான குறைந்தபட்ச குடிநீர் கட்டணமாக ரூ.30/– வசூலிக்கப்படுகிறது.

ii. மொத்த நீர் பரிமாற்ற கட்டணம் அரசால் நிர்ணயிக்கப்பட்டவாறு சம்பந்தப்பட்ட ஊராட்சியால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்படுகிறது.

iii. ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்டும் குடிநீர் விநியோக பணிகளை கிராம குடிநீர் மற்றும் சுகாதாரக்குழு (VWSC) கண்காணிக்கிறது.

4.5.8 இதர திட்ட நிதிகளை ஒருங்கிணைத்தல்

கிராம ஊராட்சிகளில் பல்வேறு திட்டங்களின் மூலம் 15வது ஒன்றிய நிதிக் குழு மானியம் (வரையறுக்கப்பட்ட நிதி 30%), மாநில நிதிக் குழு மானியம், மாவட்ட கனிமவள நிதி மற்றும் இதர திட்ட நிதிகளை ஒருங்கிணைத்து

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் கிராம குடிநீர் உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

4.5.9 குடிநீர் விநியோகத்தினை கண்காணித்தல்

சிக்கனமான மின்சார பயன்பாடு மற்றும் சிறந்த முறையிலான குடிநீர் விநியோகம் ஆகியன தானியங்கி சென்சார் அடிப்படையிலான கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பு மூலம் சிறந்த முறையில் மேம்படுத்தப்படுகிறது. இதன் மூலம் தேவையற்ற நீர் வீணாவுதல் தடுக்கப்படும். சென்சார் மூலம் இயங்கும் தானியங்கி கண்காணிப்பு அமைப்புகள் சோதனை அடிப்படையில் நிறுவப்பட்டுவருகிறது. நீர் விநியோகத்திற்கான இந்த தானியங்கி கண்காணிப்பு அமைப்பு படிப்படியாக அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் விரிவுப்படுத்தப்படும்.

4.6 நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (MPLADS)

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டமானது 1993 ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது.

4.6.1 திட்டத்தின் நோக்கம்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் மக்களுக்கான தேவைகளின் அடிப்படையில், நீடித்த சமுதாய சொத்துக்களை உருவாக்குவதில் முக்கியத்துவம் அளித்து, வளர்ச்சித் தன்மை கொண்ட பணிகளைப் பரிந்துரைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்ட செயலாக்கத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையே தொடர்பு துறையாகும். நாடாளுமன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்படும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்வாக அனுமதி வழங்குவார். இத்திட்டத்தின் கீழ் எடுத்துச்

செய்யக்கூடிய பணிகள் குறித்தும் தடை செய்யப்பட்ட பணிகள் குறித்தும் வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4.6.2 சிறப்பு அம்சம்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு ஆண்டும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உட்கட்டமைப்பு மேம்பாட்டில் உரிய கவனம் செலுத்துவதற்காக, பட்டியல் இனத்தவர் வசிக்கும் பகுதிகளுக்கு, ஆண்டுக்கான மொத்த திட்டநிதி ஒதுக்கீட்டில் குறைந்தது 15 சதவீதமும், பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளுக்கு ஆண்டுக்கான மொத்த திட்ட நிதி ஒதுக்கீட்டில் குறைந்தது 7.5 சதவீதமும் பணிகளை பரிந்துரைக்க வேண்டும்.

4.6.3 நிதி ஒதுக்கீடு

இத்திட்டத்திற்கான 100 சதவிகித நிதி ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தினால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்

கீழ் ஆண்டுக்கு ஒரு தொகுதிக்கு ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தற்போது இத்திட்டத்திற்கான நிதி மத்திய அரசின் ஒற்றைசாளர வங்கி கணக்கிலிருந்து eSAKSHI போர்டல் மூலம் விடுவிக்கப்படுகிறது.

4.6.4 இத்திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள பணிகள்

அ) பொது மற்றும் சமுதாய கட்டடங்கள்

i. சமுதாய மையங்கள், சமுதாய கூடங்கள், பொது நூலகங்கள் மற்றும் வாசிப்பு அறைகள் கட்டுதல் .

ii. பொது நூலகங்களுக்கு புத்தகங்கள் வாங்குதல்.

iii. அடக்கம்/தகன நிலத்தில் தகனக்கூடங்கள் அல்லது கட்டமைப்புகள் ஏற்படுத்துதல், வீடற்றவர்களுக்கு தங்குமிடங்கள் கட்டுதல்.

iv. அரசு அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல் (அஞ்சல் அலுவலகம், காவல் நிலையங்கள் போன்றவை)

ஆ) பொது மக்களுக்கான வசதிகள் மற்றும் பாதுகாப்பு

i. வெள்ளம் மற்றும் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மோட்டார் படகுகள் வாங்குதல்.

ii. மின்சார வாகன சார்ஜ் செய்யும் நிலையங்கள் அமைத்தல் .

iii. பேருந்து நிழற்குடைகள் அல்லது பேருந்து நிறுத்துமிடங்கள் கட்டுதல்.

iv. பாதுகாப்பிற்காக பொது இடங்களில் சி.சி.டி.வி கேமரா அமைப்பை ஏற்படுத்துதல்.

இ) கல்வி

i. பள்ளி மற்றும் கல்லூரிகளில் அறைகள், கூடங்கள் மற்றும் கழிப்பறைத் தொகுப்புகள் கட்டுதல் .

ii. ஸ்மார்ட் போர்டு, காணொளி காட்சி அமைப்புகள் மற்றும் ப்ரொஜெக்டர்கள் வாங்குதல்.

iii. ஆய்வகங்கள் அமைத்தல் .

iv. பள்ளி வேன்கள், பேருந்துகள் வாங்குதல்.

v. விளையாட்டு மைதானத்தை மேம்படுத்துதல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்குதல் .

vi. நூலகங்களுக்கு புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் வாங்குதல் .

vii. குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் அங்கன்வாடிகளுக்கான உபகரணங்கள் வாங்குதல் .

ஈ) பொது சுகாதாரம்

i. மருத்துவமனைகள், குடும்ப நல

மையங்கள், பொது சுகாதார மையங்கள் மற்றும் ANM மையங்களுக்கான அறைகள் கட்டுதல் மற்றும் அதற்கான வசதிகளை ஏற்படுத்துதல்.

ii. மருத்துவமனை உபகரணங்கள், ஆம்புலன்ஸ்கள், அமரர் ஊர்தி, நடமாடும் மருந்தகங்களுக்கான வாகனம் மற்றும் சக்கர நாற்காலிகள் வாங்குதல்.

உ) குடிநீர் மற்றும் சுகாதாரம்

i. குழாய் கிணறுகள், ஆழ்துளை கிணறுகள் மற்றும் கை பம்புகள் நிறுவுதல்.

ii. தண்ணீர் தொட்டிகள், பொது கழிப்பறைகள் மற்றும் குளியலறைகள் கட்டுதல்.

iii. குப்பை சேகரிப்பு மற்றும் அவற்றை அகற்றும் அமைப்புகளை ஏற்படுத்துதல்.

ஊ) நீர்ப்பாசனம், வடிகால் மற்றும் வெள்ளக் கட்டுப்பாட்டு அமைப்புகள்

i. பொதுப் பாசன வசதிகளை ஏற்படுத்துதல்.

ii. நீரேற்றும் பாசனத் திட்டங்கள் மற்றும் பொது மைதானங்கள் அமைத்தல்.

iii. நீர் சேகரிப்பு வசதிகள்.

எ) கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம்

i. கால்நடை மருத்துவமனைகள், மருந்தகங்கள், கால்நடை உதவி மையம், செயற்கை கருவூட்டல் மற்றும் இனப்பெருக்க மையங்கள் கட்டுதல்.

ஏ) வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலன்

i. விவசாயிகளுக்கு பயிற்சி மையங்கள், உதவி மையங்கள் மற்றும் மண்

பரிசோதனை ஆய்வகங்களை அமைத்தல்.

ii. விவசாய மற்றும் தோட்டக்கலை விளை பொருட்களுக்கு நிலையான எடை அளவீட்டு இயந்திரத்தை நிறுவுதல்.

ஐ) ஆற்றல் வழங்கல் மற்றும் பகிர்மான அமைப்புகள்

ஒ) ரயில்வே சாலைகள், பாலங்கள் மற்றும் பாதைகள்

ஓ) சுற்றுச்சூழல், வன விலங்குகள், காடுகள் மற்றும் பிற இயற்கை வளங்கள்

i. புதிய குளங்களை உருவாக்குதல், குளங்கள் மற்றும் ஏரிகளைப் புதுப்பித்தல்.

ii. வானிலை முன்னெச்சரிக்கை அமைப்புகளை ஏற்படுத்துதல்.

iii. சமூக பயன்பாட்டிற்காக பயோடைஜெஸ்டர்கள் (Bio Digesters) வாங்குதல்.

ஒள) பொது பொழுதுபோக்கு வசதிகள், விளையாட்டுகள் மற்றும் பூங்காக்கள்

i. பொது பூங்காக்கள், விளையாட்டுப் பகுதிகள் மற்றும் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல்.

ii. அசையா விளையாட்டு உபகரணங்கள் வாங்குதல்.

iii. விளையாட்டரங்கங்கள் கட்டுதல்.

iv. பல்வேறு உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் நிலையான உடற்பயிற்சி கூடத்தை நிறுவுதல்.

v. உபகரணங்கள் வாங்குதல்.

4.6.5 17 வது மக்களவை காலத்தின் சாதனைகள்

17 வது மக்களவை காலத்தில் (2019–20 முதல் 2023–24 வரை) ஒன்றிய அரசு, புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MPLAD பிரிவு), மக்களவை உறுப்பினர்களுக்கு ரூ.663 கோடியும், மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு ரூ.311 கோடியும் ஒதுக்கியுள்ளது. அதன்படி, ரூ.806.95 கோடி மதிப்பீட்டில் 10,684 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

4.6.6 18 வது மக்களவை காலத்தில் திட்ட செயல்பாடு

ஒன்றிய அரசு, புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MPLAD பிரிவு), 2024–25 ஆம் ஆண்டிற்கு ஒரு நாடாளுமன்றஉறுப்பினர் தொகுதிக்கு ரூ.5 கோடி ஒதுக்கியுள்ளது. 2024–25 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 1,316 பணிகள் எடுக்கப்பட்டுள்ளது.

2025-26 ஆம் ஆண்டில், இத்திட்டம் ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு ரூ.5 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படும்.

4.7 சாண எரிவாயுத் திட்டம்

4.7.1 திட்டத்தின் நோக்கம்

மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்தத் திட்டமானது, தனிநபர் பயனாளிகள், விவசாயிகள், கோழிப்பண்ணைகள், கோசாலைகள், இறைச்சிக்கூடங்கள், பால் பண்ணைகள்/ கூட்டுறவு நிறுவனங்கள்/ தொழிற்சாலைகள்/ நிறுவனங்கள்/ மற்றவைகளுக்கு, ஒரு நாளைக்கு 1 கனமீட்டர் முதல் 2500 கனமீட்டர் வரை சாண எரிவாயு உற்பத்தி செய்யும் சிறிய மற்றும் நடுத்தர அளவு எரிவாயு கலன்களை அமைக்க நிதி வழங்குகிறது. பயனாளிகளுக்கு கோரிக்கைகளின் அடிப்படையில் மானியம் வழங்கப்படுகிறது.

4.7.2 இலக்கு

2024–25 ஆம் ஆண்டிற்கு, 28 உயர் எரிவாயுக் கலன்கள் அமைக்க இலக்கு ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

4.8 தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)

"தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)" மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்துதல் மற்றும் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நிலையை அடைவதை குறிக்கோளாகக் கொண்டு தனிநபர் இல்லக் கழிப்பறைகள் மற்றும் சமுதாய சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டது. தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம் I–ன் கீழ் (2014–ம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை) அனைத்து 12,525 கிராம ஊராட்சிகளும் தங்களை திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற (ODF) ஊராட்சிகளாக அறிவித்ததன் மூலம் தமிழ்நாடு திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற (ODF) நிலையை அடைந்துள்ளது.

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம் –II 2020–21 ல் ஆரம்பிக்கப்பட்ட போது திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையுடன் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மையினை' வலியுறுத்துகிறது, இதன் முக்கிய நோக்கம் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தக்க வைத்தல் மற்றும் திறன்பட்ட திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை, சுற்றுப்புற தூய்மை மற்றும் பார்வைக்கு தூய்மையான கிராமங்கள் போன்றவை ஆகும்.

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம் II–ன் செயல்பாட்டு வழிகாட்டு நெறிமுறைகளின்படி, தனிநபர் இல்லக் கழிப்பறை மற்றும் மலக்கசடு மேலாண்மை நீங்கலாக இத்திட்டத்தின் இதர கூறுகள் அனைத்தும் 15–வது நிதிக்குழு மானியம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படுகிறது.

4.8.1 தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம் II–ன் முக்கிய கூறுகள் பின்வருமாறு

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம் II நான்கு முக்கிய கூறுகள் கொண்டது.

அ) திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தக்க வைத்தல்:

தனிநபர் இல்லக் கழிப்பறைகள், சமுதாய சுகாதார வளாகங்கள் மற்றும் தகவல், கல்வி, மற்றும் தகவல் தொடர்பு (IEC) செயல்பாடுகள் மூலம் அனைவருக்கும் 100% பாதுகாப்பான சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல்.

ஆ) திடக் கழிவு மேலாண்மை :

கிராமப்புரங்களில் உள்ள 80% வீடுகள் மற்றும் பொது இடங்கள் ஆகியவை மக்கும் குப்பை, நெகிழிக் கழிவு மேலாண்மை மற்றும் கோபர்தன் வாயு கலன்கள் ஆகிய திடக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுகிறது.

இ) திரவக் கழிவு மேலாண்மை:

குறைந்தது 80% வீடுகள் மற்றும் அனைத்து பொது இடங்களிலும் சாம்பல் நீர் மேலாண்மை, மலக் கசடு மேலாண்மை (மலம் கலந்த கழிவு நீர்) ஆகியவை அடங்கிய திரவக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுகிறது.

ஈ) பார்வைக்கு தூய்மையான கிராமங்கள்:

கிராமங்கள் பார்வைக்கு தூய்மையாக இருத்தல், குப்பை மற்றும் பொது இடங்களில் தண்ணீர் தேங்காமை, நெகிழிக் கழிவுகள் பொது இடங்களில் இல்லாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகிய நடவடிக்கைகள் மூலம் பார்வைக்கு தூய்மையான கிராமங்களாக தக்க வைத்தல்.

4.8.2 கிராம ஊராட்சிகளின் வகைப்பாடு:

மேற்கண்ட கூறுகள் கொண்டதன் அடிப்படையில் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)

கட்டம் II இன் கீழ் கிராம ஊராட்சிகளுக்கு வகைப்பாடு மதிப்பீடு வழங்கப்படுகிறது.



4.8.3 தனிநபர் இல்லக் கழிப்பறைகள்

அனைத்து கிராமப்புற குடும்பங்களுக்கும் பாதுகாப்பான கழிப்பறை வசதிகள் கிடைப்பதை உறுதி செய்வதே இந்த தூய்மை பாரத இயக்கத்தின் நோக்கமாகும். முழுமையாக கட்டி முடிக்கப்பட்ட தனிநபர் இல்லக் கழிப்பறையானது அடித்தளம்,

மேற்கட்டமைப்பு மற்றும் தண்ணீர் சேமிப்பு வசதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இதன் மூலம் முறையான சுகாதாரம் உறுதி செய்யப்படுகிறது. கண்டறியப்பட்ட, தகுதியுள்ள குடும்பங்களுக்கு தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுமானத்திற்காக ரூ.12,000 ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம் II இன் கீழ் நாளது வரை முந்தைய திட்டங்களின் பயன் பெறாதவர்களுக்காக 5,03,113 தனி நபர் இல்லக் கழிப்பறைகள் ரூ.603.74 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4.8.4 சமுதாய சுகாதார வளாகங்கள் (CSC)

திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற கிராமம் என அறிவிக்கப்பட்ட கூடுதல் நிலை கிராமத்தில், அக்கிராம மக்களின் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் குறைந்தபட்சம் ஒரு சமுதாய சுகாதார வளாகம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சமுதாய சுகாதார வளாகத்தில்

ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியே தேவையான எண்ணிக்கையிலான கழிப்பறை வசதிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான ஒரு கழிப்பறை இருக்கைகள், குளியல் அறைகள், நீரோட்டம் மற்றும் கை அலம்பும் தொட்டி ஆகியவை இருக்கும். கிராமத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் எளிதில் அணுகக்கூடிய இடத்தில் அது அமைக்கப்பட வேண்டும். 9,564 சமுதாய சுகாதார வளாகங்கள், ரூ.389.25 கோடி செலவில் 15வது நிதிக்குழு மானியம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்துடன் ஒருங்கிணைந்து கட்டப்பட்டு வருகின்றன.

4.8.5 திடக்கழிவு மேலாண்மை

திடக்கழிவு மேலாண்மை (SWM) அமைப்பு அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 84,651 துப்புரவு பணியாளர்கள் மற்றும் தூய்மை காவலர்களை ஈடுபடுத்தி, வீடு வீடாகச் சென்று திடக்கழிவுகளைச்

சேகரித்தல், தரம் பிரித்த மையங்களுக்கு, எடுத்துச் செல்லுதல், பிரித்தெடுத்தல் மற்றும் பாதுகாப்பாக அகற்றுதல் ஆகியவற்றுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. குப்பைகளை சேகரித்தல், பிரித்தெடுத்தல் மற்றும் பாதுகாப்பாக அகற்றுதல் போன்றவற்றுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளான பிரித்தெடுக்கும் மற்றும் சேமிப்புக் கொட்டகை, உரக்குழிகள், தெருக் குப்பைத் தொட்டிகள், மூன்று சக்கர வண்டிகள்/ தள்ளு வண்டிகள், மின் வண்டிகள், சேகரிப்பு வாகனங்கள் போன்றவை வழங்கப்பட்டுள்ளன.

நகர்புறத்தை ஒட்டியுள்ள/ பெரிய கிராம ஊராட்சிகளில் உருவாகும் மக்கும் குப்பைகளை திறம்பட நிர்வகிக்க 287 நுண் உரம் தயாரிக்கும் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினை மேலும் சிறப்பாக செயல்படுத்துவதற்கு, திடக் கழிவுகள் வீடு வீடாகச்

சென்று பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் மூலம் சேகரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு வீடு வீடாகச் சென்று குப்பைகள் சேகரிக்கப்படுவதை பொதுமக்களுக்கு தெரிவிப்பதற்கும், திடக் கழிவுகளை அவரவர் இல்லத்திலேயே மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து அப்புறப்படுத்துவதற்காக தகுந்த விழிப்புணர்வுகளை வழங்குவதற்காகவும், பேட்டரியால் இயங்கும் வாகனங்களில் ஒலிபரப்ப திடக்கழிவு விழிப்புணர்வு குறித்த பாடல் ஒலிபரப்பப்பட்டு வருகிறது.

கிராம ஊராட்சிகள் திடக்கழிவு மேலாண்மையை (SWM) சிறப்பாக செயல்படுத்துவதற்காக A, B, C என மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. கிராமப்புற இயல்பு கொண்ட A வகை கிராமங்களில் உலர் கழிவுகள் ஒரு நாள் விட்டு ஒரு நாள் சேகரிக்கப்பட்டும், ஈரக் கழிவுகள் வீடுகளின் வளாகத்தில் உரமாக்கப்படுகின்றன. நகர்ப்புறத்தை ஒட்டி உள்ள ஊராட்சிகள் நகர்ப்புறத்தை போலவே

அதிக கழிவுகள் உருவாகும் B வகை கிராமங்களில் தினசரி அடிப்படையில் கழிவுகள் சேகரிக்கப்படுகிறது. C வகை கிராமங்களில் சொந்தமாக உரம் தயாரிக்கும் வசதிகளுக்காக கழிவுகள் தினசரி சேகரிக்கப்படுகிறது.

4.8.6 நெகிழிக் கழிவு மேலாண்மை

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம் II–ன் கீழ், வட்டார அளவில் நெகிழிக்கழிவு மேலாண்மை அலகுகளை நிறுவ ரூ.16.00 இலட்சம் வழங்கப்படுகிறது. சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் இந்த அலகுகளில் இருந்து பெறப்படும் நெகிழிக்கழிவுகளை பயன்படுத்தி தார் சாலைகள் அமைக்கப்படுகின்றன. வீடுகளில் மறுசுழற்சி செய்யக்கூடிய பிளாஸ்டிக்கைப் பிரித்து வைப்பதை ஊக்குவிக்க, நேரடி நெகிழி மீள வாங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 362 நெகிழிக் கழிவு மேலாண்மை அலகுகள் அமைக்கப்பட்டன.

4.8.7. திரவக் கழிவு மேலாண்மை

(அ) சாம்பல் நீர் மேலாண்மை

சாம்பல் நீர் மேலாண்மையின் கீழ், கிராம ஊராட்சிகளை தன்னிறைவு செய்யும் வகையில், கிராம சுகாதார தன்னிறைவு திட்டத்தின் கீழ் விரிவான திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சாலைகள்/ தெருக்கள் மற்றும் பொது இடங்களில் சாம்பல் நீர் தேங்குவதை தடுக்கவும், சாம்பல் நீரை திறம்பட கையாளுவதை உறுதி செய்யவும், சமுதாய உறிஞ்சு குழிகள் மற்றும் கிடைமட்ட/ செங்குத்து வடிகட்டிகள் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம் II–ன் கீழ் 15–வது நிதிக்குழு மானியத்துடன் ஒன்றிணைந்து கட்டப்படுகின்றன. தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம் II–ன் கீழ் புதுமையான நடைமுறை வேர் மண்டலமாக, டிவாட்ஸ், கட்டமைக்கப்பட்ட ஈரநிலம், பைட்டோரிட் போன்றவையும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) மலக்கசடு மேலாண்மை

நகர்ப்புற உள்ளாட்சிகளில் ஏற்கனவே உள்ள மற்றும் ஏற்படுத்தப்படவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) மற்றும் மலக்கசடு சுத்திகரிப்பு (FSTP) வசதிகளில் கிராமப்புறங்களின் மலக்கசடுகளை மேலாண்மை செய்வதற்காக அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் மற்றும் நகர்ப்புற பகுதிகளுடன் தொகுப்பு விவரணை செய்யப்பட்டு வருகிறது. அதன்படி 9,344 கிராம ஊராட்சிகள் நான்கு கட்டங்களில் செலவுப் பகிர்வு அடிப்படையில் அருகாமையில் உள்ள சுத்திகரிப்பு நிலையங்களுடன் தொகுப்பு விவரணை செய்யப்படும். தொகுப்பு விவரணை செய்வது சாத்தியமில்லாத இடங்களில், விடுபட்ட கிராம ஊராட்சிகளை தொகுப்பு விவரணை செய்து தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம் II–ன் கீழ், மலக்கசடு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும். 2024–25 ஆம் ஆண்டில்

10 மலக்கசடு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4.8.8 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 திருத்தங்கள் மற்றும் புதிய விதிகள்

மனித கழிவுகளை மனிதனே அகற்றுவதைத் தடுக்கவும், மேலும், சுகாதாரப் பணியாளர்களின் பாதுகாப்பையும் கண்ணியத்தையும் உறுதிப்படுத்தவும், கிராமப்புறங்களில் மலக்கசடுகளை விஞ்ஞானபூர்வமாக மேலாண்மை செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளை மேலும் முனைப்பாக செயல்படுத்துவதற்கு சட்டங்கள் அவசியம். இதற்காக, தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காவது திருத்தம்) சட்டம், 2024 சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. சட்டத்திருத்தத்தின்படி மலக்கசடு மேலாண்மை விதிகள் விரைவில் அமல்படுத்தி செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

அதேபோன்று, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994ன் தற்போதைய விதிகள், கிராமப்புறங்களில் உள்ள வீடுகள், வணிக நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களால் உருவாக்கப்படும் திடக்கழிவுகளை ஒழுங்குபடுத்தவும், நிர்வகிக்கவும் ஊராட்சிகளுக்கு போதுமானதாக இல்லை. இதனை சரிசெய்ய, தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாவது திருத்தம்) சட்டம், 2024ன்படி புதிய விதிகள் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. புதிய விதிகளை செயல்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகளுக்கான புதிய விதிமுறைகள் அமல்படுத்தி செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

4.8.9. கோபர்தன் எரிவாயு கலன் திட்டம்

இத்திட்டம் வேளாண் கழிவுகளை மதிப்புமிக்க வளமாக மாற்றுவதன் மூலம் கிராமப்புற சுகாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. விலங்குகளின் கழிவுகள், சமையலறை மிச்சங்கள், விவசாய கழிவுகள் மற்றும் சந்தைக் கழிவுகளை சாண

எரிவாயு மற்றும் உயிரிக்கழிவாக (Bio–slurry) மாற்றுகிறது. இந்தத் திட்டம் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம் II–ன் கீழ் திட்டக் காலம் முழுவதும் ஒரு மாவட்டத்திற்கு ரூ.50.00 லட்சம் வரை ஒரு முறை வழங்கப்படுகிறது. தற்போது தமிழ்நாட்டில் 22 மாவட்டங்களில் 119 சாண எரிவாயு கலன்கள் செயல்பாட்டில் உள்ளன. மேலும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கிரமப்புறங்களில் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் கீழ் சாண எரிவாயு கலன்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

4.8.10. தகவல், கல்வி, மற்றும் தகவல் தொடர்பு

கிராம அளவில் சுய உதவி குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 12,000 ஊக்குவிப்பாளர்களுக்கு நேரடி தகவல் பரிமாற்றத்தின் மூலம் பயிற்சி வழங்கப்பட்டு பொதுமக்களிடையே

சிறந்த சுகாதார பழக்கங்கள் ஏற்பட ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பணியமைப்பு

5. பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் அரசிதழ் பதிவு பெற்ற அரசுப் பணியாளர்கள் தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பணி விதிகளின்படி வகைப்படுத்தப்பட்டுள்ளனர். கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் நிலையிலான அலுவலர்களின் பணி விதிகள் தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பணி விதிகளின் கீழும், வட்டார வளர்ச்சி அலுவலர்களின் பணி விதிகள் தமிழ்நாடு ஊரக வளர்ச்சி சார்நிலை பணி விதிகளின் கீழும் நிர்வகிக்கப்படுகின்றனர்.

5.1. அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு

ஊரக வளர்ச்சித் துறையில் 01.01.2025 தேதியின்படி பல்வேறு அரசாணைகளின் மூலம் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் விவரம் பின்வருமாறு

அட்டவணை 5.1

அரசிதழ் பதிவு பெற்ற அரசு அலுவலர்களின் ஒப்பளிக்கப்பட்ட பணியிட விவரம்

வ. எ ண்	பதவியின் பெயர்	மாநில அளவிலான பணியிடம்	மாவட்ட அளவிலான பணியிடம்	பிற துறைகளில் அயற்பணியிடம்	மொத்தம்
1.	கூடுதல் இயக்குநர்	13	–	4	17
2.	இணை இயக்குநர்	10	79	10	99
3.	உதவி இயக்குநர்	18	393	6	417
4.	வட்டார வளர்ச்சி அலுவலர்	45	1068	4	1117
	மொத்தம்	**86**	**1,540**	**24**	**1,650**

5.2 பொறியியல் பணியமைப்பு

பொறியியல் பிரிவு பணியமைப்பில் தலைமைப் பொறியாளர், கண்காணிப்பு பொறியாளர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் பதவிகள் தமிழ்நாடு ஊரக

வளர்ச்சி பணி விதிகளின் கீழும், முதுநிலை வரைதொழில் அலுவலர், இளநிலைப் பொறியாளர், பணிமேற்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் மற்றும் சாலை ஆய்வாளர் பதவிகள் தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் சார்நிலை பணி விதிகளின் கீழும் நிர்வகிக்கபடுகின்றனர்.

அட்டவணை 5.2

பொறியியல் பணியாளர்களின் ஒப்பளிக்கப்பட்ட பணியிட விவரம்

வ. எண்.	பதவியின் பெயர்	மாநில அளவிலான பணியிடம்	மாவட்ட அளவிலான பணியிடம்	பிற துறைகளில் அயற்பணியிடம்	மொத்தம்
1.	தலைமைப் பொறியாளர்	2	–	–	2
2.	கண்காணிப்பு பொறியாளர்	3	–	–	3
3.	செயற்பொறியாளர்	2	37	14	53
4.	உதவி செயற்பொறியாளர்	4	179	20	203
5.	உதவிப் பொறியாளர்	11	916	16	943
6.	முதுநிலை வரைதொழில் அலுவலர்	–	37	–	37
7.	இளநிலைப் பொறியாளர்	–	315	–	315
8.	பணிமேற்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர்	3	2619	–	2622
9.	சாலை ஆய்வாளர்	–	1151	–	1151
மொத்தம்		**25**	**5,254**	**50**	**5,329**

வேறு துறைகளிலிருந்து அயற்பணியில் ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் பணிபுரியும் அலுவலர்களின் விவரம் பின்வருமாறு

அட்டவணை 5.3

ஊரக வளர்ச்சித் துறையில் உள்ள பிற துறை அலுவலர்களின் பணியிட விவரம்

துறையின் பெயர்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிடம்	
		இயக்குநரகம்	மாவட்டம்
நிதி	நிதி ஆலோசகர் & முதன்மை கணக்கு அலுவலர்.	1	-
	கணக்கு அலுவலர்	3	37
புள்ளியியல்	துணை இயக்குநர் (புள்ளியியல்)	1	-
	புள்ளியியல் ஆய்வாளர்	2	-
	உதவி புள்ளியியல் ஆய்வாளர்	1	36

5.3. அரசிதழ் பதிவு பெறாத பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்களின் பணியமைப்பானது அடிப்படை பணியாளர் விதிகள், தமிழ்நாடு அமைச்சுப்பணியாளர் விதிகள், ஊரக

வளர்ச்சி சார்நிலைப்பணி விதிகள் மற்றும் ஊராட்சி செயலர்கள் பணிவிதிகள் ஆகியவற்றின் கீழ் வருகிறது.

அரசிதழ் பதிவு பெறாத பணியமைப்பின் கீழ் மாநில அளவில் 251 பணியாளர்களும், மாவட்டங்களிலும் மற்றும் பிற அலுவலகங்களிலும் 98,326 பணியாளர்களும் பணியாற்றுகின்றனர்.

அரசிதழ் பதிவு பெறாத பணியமைப்பின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள் விவரம் மற்றும் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் கீழே அட்டவணையிடப்பட்டுள்ளன.

அட்டவணை 5.4
அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்கள் விவரம்

வ. எண்.	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் எண்ணிக்கை	
		இயக்குநரகம்	மாவட்ட மற்றும் பிற அலுவலகங்கள்
அரசு பணியாளர்கள்			
1	துணை வட்டார வளர்ச்சி அலுவலர்	47	3936
2	உதவியாளர்	49	5642
3	இளநிலை உதவியாளர்	38	3171
4	சுருக்கெழுத்து தட்டச்சர்	17	185
5	தட்டச்சர்	26	1054
6	ஓட்டுநர்	11	934
7	பதிவுரு எழுத்தர்	7	149
8	அலுவலக உதவியாளர்	54	670
9	இரவுக் காவலர்	2	135
	மொத்தம்	**251**	**15,876**
அ) ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள்			
1	ஓட்டுநர்	–	776
2	பதிவுரு எழுத்தர்	–	390
3	அலுவலக உதவியாளர்	–	1533
4	இரவுக் காவலர்	–	380
	மொத்தம்	–	**3,079**
ஆ) கிராம ஊராட்சிப் பணியாளர்கள்			
1	ஊராட்சி செயலர்	–	12525
2	தூய்மை பணியாளர்	–	26404
3	மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குபவர்	–	40419
	மொத்தம்	–	**79,348**

6. பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு

6.1 திறன் மேம்பாடு

ஒன்றிய, மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் கிராமப்புற மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. அத்தகைய அரசு திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பில் உள்ள அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர்களின் திறமை, தகுதி, செயல் திறன், குறிக்கோளை அடைதல் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு அதற்கான பயிற்சிகள் மிகவும் அவசியமாகிறது. இத்தகைய பயிற்சி அவர்களது அறிவையும், திறனையும் மேம்படுத்துவதுடன் அவர்களது செயல்பாடுகளில் நல்ல அணுகுமுறை மற்றும் ஈடுபாட்டுடன் கூடிய பங்கேற்பினை உருவாக்கிட ஏதுவாகவும் அமைகிறது.

தமிழ்நாட்டில் பின்வரும் மூன்று நிலையிலான பயிற்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

அட்டவணை 6.1

பயிற்சி நிறுவனங்கள்

வ. எண்	நிறுவனங்களின் பெயர்	நிறுவனங்களை உள்ளடக்கிய மாவட்டங்கள்
I.	மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்	அனைத்து மாவட்டங்கள்
II.	**மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்**	
	சத்திய விஜயநகரம்.	காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர், கடலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு (7 மாவட்டங்கள்)
	கிருஷ்ணகிரி அணை	கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், தர்மபுரி, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் (7 மாவட்டங்கள்)
	பட்டுக்கோட்டை	தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சிவகங்கை (7 மாவட்டங்கள்)
	பவானிசாகர்	ஈரோடு, கோயம்புத்தூர், திண்டுக்கல், நீலகிரி, கரூர், அரியலூர், பெரம்பலூர், திருப்பூர் (8 மாவட்டங்கள்).
	தே.கல்லுப்பட்டி	மதுரை, தேனி, திருநெல்வேலி, விருதுநகர், தென்காசி, இராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி (8 மாவட்டங்கள்).
III.	ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள்(DRCPs)	ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலைநகரங்களில் ஒரு மையம் வீதம் 37 மாவட்ட மையங்கள்.

6.2 மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் (SIRD & PR)

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் திட்டங்களை முறையாகவும் திறம்படவும் செயல்படுத்தும் பொறுப்பிலுள்ள அலுவலர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய குழுவினருக்கு அவர்களது அறிவு, திறன், திட்டங்களை அதன் நோக்கத்தையொட்டி செம்மையாக செயல்படுத்துவது போன்றவற்றிற்கான பயிற்சிகளை நடத்திவரும் மாநில அளவிலான தலைமை பயிற்சி நிலையமாக இந்நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இங்கு அனைத்து பயிற்சிகளுக்கு பாடதிட்டம் உருவாக்குவது, பயிற்சி வழங்கும் பயிற்சியாளர்களுக்கான பயிற்றுநர் பயிற்சி வழங்குவது ஆகிய பணிகளையும் இந்நிறுவனம் மேற்கொள்கின்றது.

இந்த மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமானது தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம் 1975 ஆம் ஆண்டு சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்டடு, 1991 –ஆம் ஆண்டு முதல், 25 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட வளாகத்தில் சென்னைக்கு அருகில் உள்ள மறைமலைநகரில் செயல்பட்டு வருகிறது.

6.2.1 நிதி ஆதார அமைப்பு

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் ஊதியம் மற்றும் ஊதியமில்லாத செலவினங்களுக்கான மானிய நிதி உதவியினை (Grants–in–Aid) தொடர் செலவினத் தலைப்பில் மாநில அரசிடமிருந்து பெறுகின்றது. ஒன்றிய அரசின் பஞ்சாயத்துராஜ் அமைச்சகம் ஆண்டு முழுமைக்கும் பல்வேறு பயிற்சிகள் வழங்குவதற்கான ஒத்துழைப்பை வழங்குகிறது.

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் கிராம மேம்பாட்டிற்காக பல்வேறு பயிற்சிகளை அளிக்க, மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டம் மூலமும் நிதியுதவி பெறுகிறது. மத்திய அரசின் ஊரக வளர்ச்சித்துறையும் தேவையின் அடிப்படையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த 100% நிதியுதவி வழங்கி வருகிறது.

6.2.2 மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் அமைந்துள்ள மையங்கள்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் பின்வரும் நான்கு மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

1. ஊராட்சி வளர்ச்சி மையம் / ஊராட்சிகளுக்கான மாநில வள மையம்
2. திட்டங்களின் செயல்பாடு மற்றும் ஒருங்கிணைப்பிற்கான மையம்.

3. வாழ்வாதாரம், மற்றும் மகளிருக்கு அதிகாரமளித்தலுக்கான மையம்

4. ஊரக பொறியியல் மற்றும் தொழில் நுட்பத்திற்கான மையம்

6.3 பயிற்சி முறைகள்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், பங்கேற்புடன் கூடிய குழுவிவாதங்கள், குழுவாக செயல் ஒத்திகை, அனுபவங்கள் பகிர்தல், நேரடி கள அனுபவம் போன்ற பயிற்சி முறைகளையும் உள்ளடக்கி தலைமை வள வல்லுநர்களை உருவாக்குதல் அவர்கள் மூலம் மண்டல, மாவட்ட, வட்டார மற்றும் சமுதாய அளவிலான பயிற்சிக்கான பயிற்றுநர்களை உருவாக்க பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

மாநில அளவிலான இந்த தலைமை பயிற்சி நிறுவனம் தங்கிப்பயிலும் வசதியுடன் உள்வளாக பயிற்சிகளையும் மாவட்ட நிர்வாகம் மற்றும் மண்டல

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மூலம் மாவட்ட, வட்டார மற்றும் கிராம ஊராட்சி அளவில் வெளிவளாக பயிற்சிகளையும் நடத்துகிறது.

6.4 பயிற்சி செயல்திறன்

2024–25–ல் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மூலம் 18 உள் வளாக பயிற்சிகள் மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சித் திட்டத்தின் (RRGSA) கீழ் நடத்தப்பட்டன. இதில் 3436 நபர்கள் பங்கேற்றுள்ளனர். மேலும் 12 வெளி வளாக பயிற்சிகளில் 3,036 நபர்களும் பயிற்சி பெற்றுள்ளனர். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை தொடர்பான மூன்று மாத சான்றிதழ் பயிற்சியை 152 நபர்கள் முடித்து சான்று பெற்றுள்ளனர். வெளிவளாக பயிற்சி முறையில் கிராமப்புற இளைஞர்களுக்கான தன்னார்வ தொண்டு மற்றும் சமூக சேவைகள் தொடர்பாக 210 பேர் பயிற்சி முடித்துள்ளனர்.

தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் இரு வெளிவளாக பயிற்சி மூலம் 105 அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்கள் நீர்வடிப்பகுதி மேம்பாடு – பிரதம மந்திரி கிரிஷி சிஞ்சாய் திட்டம் 2.0–இல் புவிசார் தொழில்நுட்பத்தை நிகழ்நேர கண்காணித்தல் மற்றும் செயல்படுத்துதல் பயிற்சி, மாவட்ட திட்டமேலாண்மை அலகுகள், கணினி இயக்குபவர்கள் மற்றும் ஊராட்சி செயலர்களுக்கான பயிற்சி, மாநில அளிவிலான தலைமை பயிற்றுநர்களுக்கான இ–கிராம் சுவராஜ் பயிற்றுநர் பயிற்சியும் வழங்கப்பட்டது.

6.5 கிராம பஞ்சாயத்து வளர்ச்சி திட்டத்திற்கான (GPDP) கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பற்ற அமைப்புகளின் (NGOs) உதவி

2024 – 25 ஆண்டு திட்டத்தின் படி, இந்திய அரசியலமைப்பின் 11வது அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள 29 இனங்களின் அடிப்படையில்,

500 கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சி மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்க கல்வி நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து ஒரு கிராம ஊராட்சிக்கு ரூ.20,000/- வீதம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

6.6 ஊராட்சி கற்றல் மையம்

உள்ளூர் நீடித்த நிலையான இலக்குகளை சிறப்பாக செயல்படுத்திய ஊராட்சிகள் மற்றும் தேசிய அளவில் விருதுக்கு பரிந்துரைக்கப்படும் ஊராட்சிகளை, பிற ஊராட்சிகளை சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பார்வையிட்டு பட்டறிவு பயணம் மேற்கொள்வதன் மூலம் சிறந்த வழிமுறைகளை கற்றுக்கொள்ள ஏதுவாக, சிறப்பாக செயல்படும் ஊராட்சியினை அறிந்து அவைகளை கற்றல் மையங்களாக (Panchayat Learning Center) அமைக்க திட்டமிடப்பட்டு, அதன் படி 2024-25-ஆம் ஆண்டிற்கு 13 மாவட்டங்களிலிருந்து 36 சிறந்த

செயல்பாடுடைய ஊராட்சிகள் கற்றல் மையங்களாக தேர்வு செய்யப்பட்டன.

அட்டவணை 6.6

ஊராட்சி கற்றல் மையங்கள்

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	கற்றல் மையங்களின் பெயர்
1	செங்கல்பட்டு	கோவளம்
		படூர்
		மண்ணிவாக்கம்
		வெள்ளப்புத்தூர்
2	கோயம்பத்தூர்	ஓடந்துறை
		கீரணத்தம்
		அரசூர்
3	ஈரோடு	பைனாபுரம்
4	மதுரை	பூஞ்சுத்தி
5	நாமக்கல்	முத்துகாபட்டி
6	நாகப்பட்டினம்	பிரதாமராமபுரம்
		ஆய்யக்காரன்புலம்
7	புதுக்கோட்டை	கே.செட்டிப்பட்டி
8	திருச்சிராப்பள்ளி	வையம்பட்டி
		கீழன்பில்
		பைத்தாம்பாறை
		கலிங்கப்பட்டி
		திருவாசி
		காணக்கிளியநல்லூர்
9	கிருஷ்ணகிரி	இட்டிகல் அகரம்
10	தென்காசி	கீழவீராணம்
		மறந்தை
		மேலவீராணம்

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	கற்றல் மையங்களின் பெயர்
		குறிப்பன்குளம்
		நெட்டூர்
		அச்சங்குட்டம்
		கீழக்கலங்கல்
		மேலக்கலங்கல்
		வரகனூர்
		சிவலார்குளம்
11	திருவாரூர்	ஆழூர்
12	விழுப்புரம்	பரையந்தாங்கல்
13	விருதுநகர்	சேதுபுரம்
		கோட்டையூர்
		நாரணாபுரம்
		தோணுகால்

6.7 இதர கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல்

சென்னை மத்திய தொழில்நுட்ப மையம், காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம் – திண்டுக்கல், சென்னை சமூகப் பணி பள்ளி – சென்னை, ஊரக மேலாண்மை நிறுவனம், ஆனந்த்–குஜராத், அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகம் – கோயம்புத்தூர், தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும்

ஆராய்ச்சி நிறுவனம் – சென்னை மற்றும் சண்டிகர், சென்னை, SRM அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், காட்டாங்கொளத்தூர். ஆகிய நிறுவனங்களுடன் பயிற்சி வளங்கள் மற்றும் பயிற்றுநர்களை பகிர்ந்து கொள்ளவும் கூட்டு பயிற்சிகள் நடத்தவும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், இதன் மூலம் பயிற்றுநர் மேம்பாடு, ஆய்வு, களப்பார்வை, திறன் மேம்பாடு, களவேலைகள், வெளியீடுகள் போன்ற செயல்பாடுகளில் நிபுணத்துவம் பெற்றிட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதேபோன்று பங்கேற்கும் நிறுவனங்கள் தங்களுடைய மாணவர்களுக்கு பயிற்சியளித்திடவும், பணி பழகுநர் பயிற்சி (Internship) பெற்றிடவும், நிறுவனத்துடன் கூட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளவும் திட்ட மதிப்பீடுகள் மேற்கொள்ளவும், ஆசிரியர்களாக பணியாற்றவும், நடைமுறையில் உள்ள சிறந்த

செயல்பாடுகளை (Documentation of best practices) ஆவணப்படுத்தவும் ஏதுவாகிறது.

6.8 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி பயிற்சி நிறுவனங்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கூடுதல் இயக்குநர்/இணை இயக்குநர் நிலையிலான முதல்வர்கள் தலைமையின் கீழ், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

6.8.1 செயல்திறன்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி பிரதிநிதிகள் அதாவது, ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி செயலர்கள் மற்றும் அனைத்து ஊராட்சி பணியாளர்கள், சுய உதவிக்குழு உறுப்பினர்கள், சமூகம் சார்ந்த அமைப்புகள், பிற

துறையில் பணிபுரியும் அலுவலர்கள் ஆகியோருக்கு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட பயிற்சிக்கான பாடதிட்ட உள்ளடக்கம் மற்றும் கையேடுகளின் அடிப்படையில் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமும் ஓர் ஆண்டிற்கு குறைந்த பட்சம் 6,000 நபர்களுக்கு உள் வளாகப் பயிற்சியும், அதிகபட்சமாக 25,000 நபர்களுக்கு வெளிவளாகப் பயிற்சி அளிக்க தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் கொண்டதாக உள்ளது.

6.8.2 நிதி

தமிழ்நாடு அரசு, மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் செயல்பாட்டிற்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.7 கோடி நிதி வழங்குகிறது.

ஒன்றிய அரசு ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கும், ஒவ்வொரு ஆண்டும் பயிற்சித்திட்டம் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள ரூ.20 இலட்சம் தொடர் செலவின மானியமாக வழங்குகிறது. மேலும் இந்நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் பயிற்சி உபகரணங்களுக்காகவும் தேவையின் அடிப்படையில் ஒன்றிய அரசு 100 சதவீதம் தொடரா செலவினத்திற்கான நிதியினையும் வழங்குகிறது.

பல்வேறு பயிற்சிகளை அளிக்க மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களுக்கு, மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டம், மாநில நிதிக்குழு மான்ய நிதி ஆகியவற்றின் மூலம் மத்திய மாநில அரசுகளிடமிருந்து நிதியுதவி பெறப்படுகிறது.

6.8.3 பயிற்சி செயல்திறன்

2024–25 ஆம் ஆண்டில் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் மூலம் 14 பயிற்சிகள் நடத்தப்பட்டு 19,901 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

6.9 ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் (DRCP)

மாவட்ட அளவில் ஊராட்சி அமைப்புகளுக்கு தேவையான திறன் மேம்பாடு தொடர்பான பயிற்சிகளை சிறப்பாக வழங்க ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் ஒன்றிய அரசு நிதி உதவியுடன் மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் (RGSA) கீழ் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியரது நிர்வாக கட்டுப்பாட்டிற்குள் செயல்படும் இம்மையங்களின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு பணிகள் சம்பந்தப்பட்ட மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் வழிகாட்டுதல் அடிப்படையில்

மேற்கொள்ளப்படும். மாவட்ட வள மையங்களில் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், சாலை ஆய்வாளர்கள், ஊராட்சி செயலர்கள், மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி இயக்குபவர்கள் போன்ற ஊராட்சி பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், சமூகம் சார்ந்த அமைப்புகள் மற்றும் கிராம ஊராட்சி நிலையிலான அமைப்புகள் ஆகியோருக்கும் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

6.9.1 பயிற்சி செயல்திறன்

2024–25 ஆம் ஆண்டில் 47,179 பங்கேற்பாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

6.10 மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டம் (Revamped RGSA)

ஊராட்சி நிறுவனங்களின் திறனை வலுப்படுத்தவும் ஊரக உள்ளாட்சி நிர்வாகம் உள்ளூர் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதை உறுதி செய்யவும் ஒன்றிய அரசானது மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி

திட்டத்தினை 2022–இல் அறிமுகப்படுத்தியது. மேலும் மக்கள் பங்கேற்புடன் கூடிய திட்டம் தயாரித்தல், தொழில்நுட்ப உதவியுடன் உள்ளூர் வளங்களை திறமையாக பயன்படுத்தி நீடித்த, நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் தொடர்புடைய உள்ளூர் பிரச்சனைகளுக்கு தீர்வுகள் ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐக்கிய நாடுகளின் நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDGs) 2030–க்குள் அடைவதற்கு ஊராட்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டமானது (RRGSA) ஒன்றிய மற்றும் மாநில அரசு 60:40 என்ற நிதி விகிதாச்சார முறையில் கீழ்கண்ட கூறுகலான பயிற்சி, பயிற்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனிதவளம், தொலைதூரக் கல்வி, புதுமையான முயற்சிகள், ஊராட்சிகளுக்கு தொழில்நுட்ப உதவிகள், நிர்வாகம் மற்றும் நிதி தகவல் பகுப்பாய்வு மற்றும் திட்டப்பிரிவு, ஊராட்சி கட்டிடம்

மற்றும் சமுதாயகூடம், ஊராட்சி மின்னணு செயலாக்கம், பொருளாதார வளர்ச்சி மற்றும் வருவாய் மேம்படுத்துதலுக்கு திட்ட அடிப்படையில் உதவிகள், தகவல், கல்வி மற்றும் தொடர்பு (2%) மற்றும் திட்ட மேலாண்மை (1.5%) ஆகியவைகளுக்கு நிதி அளிக்கிறது.

2024–25 ஆம் ஆண்டில் மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டத்தில் தேவையான அனைத்து பயிற்சிகள், பயிற்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனிதவளத்திற்காக பயிற்சிகள் வழங்க ரூ.211.42 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதில் ரூ.13.53 கோடி செலவில் மொத்தம் 70,524 நபர்களுக்கு பயிற்சிகளும் வழங்கப்பட்டன. மேலும், பயிற்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகளுக்கு ரூ.37.21 கோடி மற்றும் மனிதவளத்திற்காக ரூ.9.02 கோடி நிதியும் செலவிடப்பட்டுள்ளது.

2025–26 ஆம் ஆண்டில் மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டத்தில் உள்ளூர்மைய நீடித்த வளர்ச்சி இலக்குகளை ஊராட்சி நிறுவனங்களில் அரசு திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதிலும், ஊராட்சி வளர்ச்சி குறியீடு (PAI), தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகள், மற்றும் பெண்களுக்கு நட்புடைய ஊராட்சி போன்ற கூறுகளில் கூடுதல் கவனம் செலுத்தி ஊராட்சி கட்டமைப்புகளை மேம்படுத்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

7. வரவு செலவுத் திட்டம்

2025 – 2026

7. வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2025-2026

2025-2026 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.29,465 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வருவாய் செலவினங்களுக்காக ரூ.24,667 கோடியும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக ரூ.4,798 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. முடிவுரை

8. முடிவுரை

கிராமப்புற மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், சுகாதாரம், வீட்டுவசதி, வாழ்வாதாரம், ஊரக சாலை இணைப்பு மற்றும் தெரு விளக்குகள், பள்ளிகள், சமுதாயக் கூடங்கள் போன்ற பிற கிராமப்புற உட்கட்டமைப்பு தேவைகளை நிறைவேற்றுவதை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை உறுதி செய்து வருகிறது. தற்போதைய முன்னோக்கு செயலாக்கமுறை, உட்கட்டமைப்புகளையும், அடிப்படை வசதிகளையும் வழங்குவதை மட்டுமே இலக்காக கொள்ளாமல், நிலைத்த நீடித்த உள்ளூர் மயமாக்கல் வளர்ச்சி இலக்குகளை கருத்திற் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த அரசு, ஏழை எளிய மற்றும் நலிவடைந்தவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில், குறிப்பாக அவர்களின் நிரந்தர வீடு என்ற அடிப்படைத் தேவையினை நிறைவேற்றுவதில்

எப்போதும் முன்னோடியாக இருந்து வருகிறது. மக்கள் தங்களின் கனவு வீடுகளை கட்டமைக்க ஒரு நியாயமான அலகு தொகையை அவர்களுக்கு வழங்குவதுடன், வீடுகள் கட்டமைக்க உதவும் வகையில் மானிய விலையில் சிமென்ட் மற்றும் இரும்புக் கம்பிகள் குறித்த நேரத்தில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கூடுதல் ஆதரவாக பயனாளிகளுக்கு வங்கியிலிருந்து வீடு கட்டுவதற்காக வங்கிகடன் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சமீபத்திய சில ஆண்டுகளில், மக்களுடன் முதல்வர் மற்றும் முதல்வரின் முகவரி போன்ற திட்டங்களினால் அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் மூலம் மக்களிடம் கூடுதல் தொடர்பினை அரசு உருவாக்கியுள்ளது. பொதுமக்களுக்கான சேவையினை ஒளிவு மறைவற்ற வகையில், வெளிப்படைத்தன்மையுடன் சிறந்த தரநிலைகளில் வழங்குவதில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

அரசின் நோக்குநிலை சமுதாய சொத்துக்களை வழங்குவது என்ற நிலையிலிருந்து மக்களுக்கு சமூக நல்வாழ்வை வழங்குவது என்ற நிலைக்கு ஏற்கனவே மாறியுள்ளது. குழந்தை நேய வகுப்பறைகள் மற்றும், பள்ளி மாணவர்களுக்கு தரமான குடிநீர் வசதியுடன் கூடிய சுத்தமான மற்றும் சுகாதாரமான உட்கட்டமைப்புகளை கொண்ட பள்ளிகளை ஏற்படுத்தி தருவது போன்றவை இம்மாற்றத்திற்கான எடுத்துக்காட்டாக அமைகிறது. மேலும், அனைத்து காலநிலையிலும் நீடித்து நிற்கக்கூடிய சாலைகள் அமைப்பது மட்டுமில்லாமல், தெருக்கள் மற்றும் சிறு பாதைகள் மூலம் இணைப்பு வசதிகளை மேம்படுத்த சிமென்ட் கான்கிரீட் அல்லது பேவர் பிளாக் சாலைகளை அமைப்பதன் மூலம் மக்களின் கடைமட்ட தேவைகளை அவர்களின் வசிப்பிடத்திற்கே கிடைக்கப்பெறும் வசதி எழுந்துள்ளது இதற்கொரு சான்றாகும்.

தொலைநோக்கு சிந்தனை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், அவர்களின் தலைமையின் கீழ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தமிழகத்தின் கிராமப்புறங்களில் நிலையான வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் பணியில் உறுதியாக உள்ளது. கிராமப்புற உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் அனைத்து தரப்பு மக்களையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துவதன் மூலம், கிராமப்புற மேம்பாட்டிற்கான அளவுகோல்களை, முன்னேற்றத்துடன் கூடிய முனைப்பான செயல்பாடுகளுடன், அர்ப்பணிப்பு உணர்வுடன் தொடர்ந்து செயல்படுத்தி வருவதின் மூலம், ஊரக வளர்ச்சியிலும், மக்களுக்கு ஒளிமயமான

மற்றும் வளமான எதிர்காலத்தை வழங்குவதிலும் தமிழ்நாடு என்றென்றும் முன்னிலையில் உள்ளது.

இ. பெரியசாமி
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்
தமிழ்நாடு அரசு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 12.11.2024 அன்று தலைமைச் செயலகத்தில், 64 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவில் 11 மாவட்டங்களில் கட்டப்பட்ட 17 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 23.12.2024 அன்று தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கள அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 8 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 95 வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க .ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 15.02.2025 அன்று மாவட்ட அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு (DISHA) தொடர்பான நான்காவது மாநில அளவிலான கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.





கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
மூலக்காடு ஊராட்சியில் புதிய வீடு கட்டுதல்,
மதிப்பீடு : ரூ. 3.50 இலட்சம்





ஊரக வீடுகள் சீரமைத்தல் திட்டம்

நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியம், கொடிக்கால்புதூர் ஊராட்சி,

மதிப்பீடு : ரூ.70,000/-



பழங்குடியினர் நலத்திட்டத்தின் கீழ் 48 வீடுகள் கட்டுதல், சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், ஆருர்பட்டி ஊராட்சி வெள்ளகல்பட்டியில் நரிக்குறவர் குடியிருப்பு

மதிப்பீடு : ரூ. 221.76 இலட்சம்



சிறுபாசன ஏரிகளை புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், கோலாரம் ஊராட்சியில், தாலக்காரி ஏரி புதுப்பித்தல், மதிப்பீடு: ரூ. 5.15 இலட்சம்



முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துகடவு ஊராட்சி ஒன்றியம், கப்பளாங்கரை ஊராட்சியில், லட்சுமி அம்மன் கோவிலில் இருந்து சிறுகலந்தை செல்லும் சாலை,
மதிப்பீடு : ரூ. 82.30 இலட்சம்



பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் – III - ன் கீழ் நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம், அகஸ்தியம்பட்டி ஊராட்சியில், மானங்கொண்டான் ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்தல், மதிப்பீடு : ரூ. 615.00 இலட்சம்



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டம், நம்பியூர் ஊராட்சி ஒன்றியம், சுண்டக்காம்பாளையம் ஊராட்சியில், தடுப்பணை கட்டுதல்
மதிப்பீடு : ரூ. 38.63 இலட்சம்



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டம்,
சர்கார்சாமக்குளம் ஊராட்சி ஒன்றியம், கள்ளிப்பாளையம் ஊராட்சியில்,
பெருமளவு மரக்கன்றுகள் நடுதல் மதிப்பீடு : ரூ. 2.30 இலட்சம்



ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியின் கீழ் விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம்
மதிப்பீடு: ரூ. 358.75 இலட்சம்



ஜல் ஜீவன் இயக்கம் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், கரந்தானேரி ஊராட்சியில், 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்தல். மதிப்பீடு : ரூ. 27.25 இலட்சம்



ஊரக விளையாட்டு மையம் அமைத்தல்

பாடி ஊராட்சி, பாலக்கோடு ஊராட்சி ஒன்றியம், தருமபுரி மாவட்டம்



குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியம், சாரகப்பள்ளி ஊராட்சியில், இரண்டு வகுப்பறை கட்டிடம் கட்டுதல், மதிப்பீடு : ரூ. 32.80 இலட்சம்






அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II - ன் கீழ் விருதுநகர் மாவட்டம்,
இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம், சத்திரப்பட்டி ஊராட்சியில்
அங்கன்வாடி கட்டடங்கள் கட்டுதல், மதிப்பீடு : ரூ. 14.31 இலட்சம்

மாவட்ட வாரியான ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை




மாவட்ட வாரியான கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
1000
750
500
250
0
842
688
683
589
526
489
450
440
430
429
420
412
404
403
385
359
333
310
306
288
274
265
251
247
241
228
225
221
208
204
201
193
157
130
121
95
35
திருவண்ணாமலை
விழுப்புரம்
கடலூர்
தஞ்சாவூர்
திருவள்ளூர்
புதுக்கோட்டை
விருதுநகர்
சிவகங்கை
திருவாரூர்
இராமநாதபுரம்
மதுரை
கள்ளக்குறிச்சி
திருச்சிராப்பள்ளி
தூத்துக்குடி
சேலம்
செங்கல்பட்டு
திருவண்ணாமலை
நாமக்கல்
தென்காசி
ராணிப்பேட்டை
காஞ்சிபுரம்
திருப்பூர்
தர்மபுரி
வேலூர்
மயிலாடுதுறை
கோயம்புத்தூர்
ஈரோடு
தென்காசி
திருப்பத்தூர்
திருநெல்வேலி
அரியலூர்
நாகப்பட்டினம்
கரூர்
தேனி
பெரம்பலூர்
கன்னியாகுமரி
நீலகிரி
மாவட்டங்கள்


மக்கள் தொகை கணக்கெடுப்பில் கிராம ஊராட்சிகளின் வகைப்பாடு
(மக்கள் தொகைக் கணக்கெடுப்பு - 2011)
கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
8000
6000
4000
2000
0
46
833
6822
2781
1753
290
500க்கும் குறைவானது
501 - 1000
1000 - 3000
3001 - 5000
5001 - 10000
10,000க்கு மேலானது
மக்கள் தொகை வரம்பு

மாவட்ட வாரியான கிராமப்புற சாலை நீளம்



ஊரகச் சாலைகள் வகைப்பாடு



மண்சாலை	25,114	
சரளைக்கல்சாலை	2,636	
ஓரடுக்குகப்பிச்சாலை	10,249	
ஈரடுக்குகப்பிச்சாலை	1,540	
தார்ச்சாலை	97,497	
சிமெண்ட்சாலை	3,734	
மொத்தம்	**1,40,770**	கி.மீ.